பதிவு இலக்கம் : 105267

வார இதழ்

# தீபம்

20.10.2019 தீபம் -202

விலை ரூபா 30.00





# ஜனாதிபதித் தேர்தல் வெற்றி யாருக்கு?














## கஜேந்திரகுமாரின் தெளிவான பார்வையும் மாணவர் ஒன்றியமும்



## வெள்ளை வானும் காவி உடையும்



## விக்னேஸ்வரனின் விசித்திர அரசியல்

சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
அரச அனுமதி பெற்ற சாரதிப்பயிற்சிப் பாடசாலை
தலைமைக்காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 221 7578, 021 221 7678
077 614 0361, 077 722 6247






கிளை நிறுவனங்கள்

இல. 281C, மணிக்கூட்டுகோபுர வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8004, 070 301 5004

பழைய கண்டி வீதி (பிரதான வீதி) காரைநகர்
021 225 2454, 070 510 2484

வங்களாவடிச் சந்தி வேலணை.
021 221 5472, 070 301 3012

ஒடக்கரை வீதி, சங்கானை.
021 225 1664, 070 301 3016

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு.
070 255 4135

கே.கே.எஸ் வீதி, மல்லாகம்.
021 224 3393, 070 301 3014

முறையான சாரத்தியத்தை கற்றுக் கொள்ள எம்மிடம் அணுகுங்கள்.

E-mail : sasikadrivinhschool@gmail.com Web : sasikalearners.com




# மண்வாசம்

## கோழிக் கரப்பு



இலங்கைத் தமிழ் வழக்கில் உள்ள சொல் இது. பொதுவாக வீட்டில் வளர்க்கும் சிறிய தொகைக் கோழிக்குஞ்சுகளை அடைத்து வைக்க பயன்படும் இக் கூடு "கோழிக் கரப்பு" என அழைக்கப்படுகிறது. "நாயுருவி"அல்லது "கடுகண்ணாவல்" என அழைக்கப்படும் ஒருவகைச் செடியின் தடியினால் இது செய்யப்பட்டுள்ளது. பிரம்பினால் செய்யப்படும் கூடுகளும் உண்டு.

# சிங்கமும் சிலையும்



ஒரு மனிதன் தன்னுடன் நட்பாக இருந்த சிங்கமொன்றை அழைத்துக் கொண்டு, காட்டில் தேன் எடுப்பதற்காகச் சென்றுகொண்டிருந்தான். செல்லும் வழியில் யார் அதிக வீரமுள்ளவர்கள் என்பது பற்றி இருவரும் பேசிக் கொண்டு சென்றனர்.

இப்படிச் செல்லும் வழியில் ஒரு மனிதன் சிங்கத்தை தள்ளி தரையில் வீழ்த்தி, அதன் உடலில் கால் வைத்து நிற்பது போல ஒரு சிலையைக் கண்டனர்.

“சிலையைப் பார்த்தாயா? மனிதன்தான் வீரன்” என்று சிங்கத்திடம் மனிதன் கூறினான். சிங்கம் சிரித்தது. “மனிதா இந்தச் சிலையை ஒரு சிங்கம் செய்திருந்தால் நீ காண்பது வேறாக இருக்கும்” என்று சொல்லியபடி மேலே நடந்தது.

**நீதி - தனக்கென்று வந்துவிட்டால் தனி வழக்குத்தான்**

# பழமொழி திரிந்து புதுமொழி



“வக்கத்தவனுக்கு வாத்தியார் வேலை, போக்கத்தவனுக்குப் போலீஸ் வேலை.” இது திரிந்த பழமொழி

“வாக்குக் கற்றவனுக்கு வாத்தியார் வேலை: போக்குக் கற்றவனுக்கு போலீஸ் வேலை” இது நிஜ வடிவம்.

வாக்குக் கற்றல் - அறிந்து கொண்ட செய்திகளை மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லும் திறம் போக்குக் கற்றல் - திருடன் தன்னைத் தேடி வந்த காவலர் போய் விட்டார் என நினைத்து வெளியில் வரும்போது, அவனைப் பிடிப்பதற்கு ஏதுவாக போய் விட்டது போல் போக்கு காட்டி, சிறிது தூரம் சென்று மீண்டும் வந்து திருடனைப் பிடிப்பார் என்று சொல்லிப் பார்த்தாலே பழமொழியின் பழம்பொருள் விளங்குகிறது.

நம் முன்னோர்களின் முதிர்ந்த அறிவு புலனாகிறது.




தங்கத் தமிழ்

## அதென்ன அகநானூறு?

அகநானூறு அகத்திணை சார்ந்த நூல் என்பதுடன் இதில் நானூறு பாடல்கள் அடங்கியுள்ளதால் இது அகநானூறு என வழங்கப்படுகிறது. இது பல்வேறு புலவர்கள் வெவ்வேறு காலங்களில் பாடிய பாடல்களின் தொகுப்பு ஆகும். இந்நூலில் அடங்கியுள்ள பாடல்கள் மிகக் குறைந்த அளவாகப் 13 அடிகளையும், கூடிய அளவு 31 அடிகளையும் கொண்டு அமைந்துள்ளன.

அகத் தொகையுள் நீண்ட பாடல்களைக் கொண்டமையால் இதனை, ‘நெடுந்தொகை’ என்றும் கூறுவர்.

# அறிவோம் உயர்வோம்

## தோல் இசைக் கருவிகள்



சங்க கால வாழ்வியலில் அதிகம் பயன்பட்ட இசைக்கருவிகளில் தோல்கருவிகள் குறிப்பிடத்தக்கது பறை, முரசு, முழவு ஆகியன ஆகும்.

ஆற்றுநீர் அணை உடைந்து வந்தால்,யானை மதம்பிடித்து ஓடி வந்தால், மக்களுக்கு அறிவிப்பு செய்ய தோல்கருவியை இசைத்தனர்.

உழவுத் தொழில்.குரவை, துணங்கை, வெறியாட்டு ஆகிய கூத்து நிகழ்விலும் தோல் கருவி முதன்மை பெற்றது.போரில் வெற்றியின் அடிப்படையாக முரசொலி இருந்தது. எந்த நாட்டு மன்னன் வெற்றி பெறுகிறான் என்பதை முரசொலியை வைத்தே அறிந்துகொள்ள முடியும்.

# அட அப்படியா?

- யானையின் துதிக்கையில் 4இலட்சம் தசைகள் உள்ளன.
- திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரேயொரு தமிழ் உயிரெழுத்து“ஔ”
- மரங்கொத்திப் பறவைகள் ஒரு வினாடியில் 20முறைகள் மரத்தைக் கொத்துகின்றன.
- விலங்குகளில் மிகச் சிறிய இதயத்தைக் கொண்டது சிங்கம்.
- தமது மோப்ப சக்தியை இழந்துவிட்டால், எறும்புகள் இறந்துவிடும்.









# ஆறு வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



வார இதழ்
தீபம்
"யாமார்க்கும் குடியல்லோம்"
20.10.2019 இதழ் 202
gmail:- newsdeepam19@gmail.com
விநியோகம் / விளம்பரம் TP:- 021 4927542, 0771989445

## கோரிக்கைகளும் அரசியல் யதார்த்தமும்

கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வது போன்று ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு ஒரு வரலாற்று திருப்பமான நிகழ்வை நடத்திமிருப்பதாக பெருமளவில் பிரசாரம் ஒன்றை மேற் கொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள்.

இவர்கள் 13 அம்சங்களை உள்ளடக்கிய கோரிக்கைகளை முன் வைத்து, ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்திமிருக் கும் முன்னணி, தென்பகுதி கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தப்போவதாகவும், அதனடிப்படையில் யார் சாதகமான முறை யில் உறுதிமொழிகளை உரிய உத்தரவாதத்துடன் தருகிறார்களோ அவர்களை அதிபர் தேர்தலில் ஆதரிக்கப்போவதாகவும் செய்தி கள் வெளியாகி உள்ளன.

இந்த நிலையில் மற்றொரு முக்கிய கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இந்த உடன்பாட்டில் கையொப்பமிட மறுத்துள்ளதாகக் கூறப்படுகின்ற போதிலும் அக்கட்சியினர் தாம் வேண்டுமென்றே ஓரங்கட்டப்பட்டுவிட்டதாக கூறியுள்ளமையையும் கவனத்தில் கொள்ளவேண்டியதும் அவசியமே.

பெரும்பான்மை இனவாதக் கட்சிகளின் தலைமைகளின் கடந்த கால உத்தரவாதங்களை நம்பி ஏமாற்றப்பட்டவர்களான, பெரும் பாலும் கடந்த கால ஆட்சியாளர்களின் அனுசரணைகளை தமிழ் மக்கள் நலன்சார் அடிப்படையில் அல்லாது தமது சுயநல அபி லாசை சலுகைகளவில் நேரிடையாகவும் மறைமுகமாகவும் பெற்று அவர்களை ஆதரித்து வந்த தமிழ் கட்சிகளில் ஐந்து அமைப்புகளே இந்த உடன்பாட்டில் கையொப்பமிட்டுள்ளமை ஒன்றும் ஆச்சரியமான விடயமல்ல... அரசியலறிந்தோர் எதிர்பார்த்த விடயம்தான்.

அவர்கள் முன்வைக்கவுள்ள கோரிக்கைகள் அனைத்துமே நியாயமான அழுத்தமான அவசியமான கோரிக்கைகள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

தமிழ் மக்கள் இன்று எதிர்கொள்ளும், நெருக்கடிகளை முன் வைத்து நியாயம்கோரும் தன்மை கொண்டவைதான் கடந்த ஒரு தசாப்த காலமாக அதாவது ஆயுதப் போராட்டம் அநியாய மான முறையில் உலக வல்லாதிக்க, மேலாதிக்க சக்திகளின் வெளிப்படையானதும் மறைமுகமானதுமான பின்பலத்துடன் ஆட்சியாளர்களை அழித்தொழிக்கப்பட்ட பின்னர் இதுநாள் வரை மிதவாத தமிழ்த் தலைமைகளால் பரவலாகப் பேசப்பட்டுவரும் விடயம்தான்.

இந்த ஒரு தசாப்தகால அரசியல் தலைமைகளை நியா யத்தை வென்றுதரத் திராணியற்றவர்கள் என நம்பும் மக்கள் முன்னெடுத்த போராட்டங்களும் தொடரும் போராட்டங்களும் இதே 13 அம்சக் கோரிக்கைகளின் அடிப்படையில் நியாயம் கேட்டே நிகழ்ந்து வருகின்றன என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் இருக்கின்றது.

இந்த மக்களோடு இணைந்து இப்போது அரசியல் இலக்கை முன்வைத்து கையொப்பமிட்டுள்ள ஐந்து கட்சிகளும் போரிட்டு நியாயம் கோரி இருந்தால் கூட அது சர்வதேச சமூகத்தின் கவனத்தையாவது ஈர்த்திருக்கும்.

ஆனால் அவர்கள் தங்களின் அரசியல் கருத்துக்களைப் பாதுகாப்பதிலும் ஆட்சியில் இருப்போரை பாதுகாத்து தமது அபி லாசைகளை நிறைவேற்றிக் கொள்வதிலுமே குறியாக இருந் தார்கள் என்பது அவரவர் மனச்சாட்சிக்கே தெளிவான விடயம்.

அதனைவிட இப்போது இவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் எல்லாவற்றையும் சிங்கள பெரும்பான்மை கட்சிகள் அனைத்தும், மூர்க்கத்தனமாக ஏற்கனவே நிராகரித்துள்ளதுடன் இவற்றை அவர்கள் குறைந்தளவு மனிதநேய அக்கறையுடன் பரிசீலித்தது மில்லை என்பது வரலாறு.

இப்போது அதே நபர்களுடன் அரசியல் பேரம் பேசப்போகிறார் களாம்?

இவர்கள் பேரம் பேசுவதற்கே சந்தர்ப்பம் இல்லை. அடுத்து வரும் நாள்களில் தென்பகுதித் தலைமைகள் தாமாகவே தமது பேரின வாத குணாம்சத்துடன் விடக்கோரும் . தேர்தல் கால அறிவிப்புகளும் பேச்சுக்களும் இவர்களின் கோரிக்கைகளை உதாசீனம் செய்யும் பதில்களாகிவிடும்.

இதுவே நடக்கப்போகும் அரசியல் யதார்த்தம்.


## பாரதி...



கும்மியடி தமிழ்நாடு முழுதுங்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்

கற்பு நிலையென்று சொல்லவந் தாரிரு
கட்சிக்கு மஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத் திப்பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்.







நன்றி : சிரித்திரன் சித்திரக் கொத்து

# குருத்திஸ் - துருக்கிய போரும் மேற்காசிய அரசியலும்

கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம்

பல நூற்றாண்டுகளாகத் தனி நாடு கோரிவரும் குர்த்திஸ் இன மக்கள் மீது மீண்டும் ஒரு அழிப்பு நடவடிக்கையைத் துருக்கி அரசு ஆரம்பித்துள்ளது. தனது எல்லைப் பகுதியை உள்ளடக்கி குருத்திஸ் இனம் தனிநாட்டுக்கான போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றமை துருக்கிக்கு ஆபத்தான விடயமாகவே அமைந்துள்ளது. துருக்கி, ஈரான், ஈராக், சிரியா ஆகிய நாடுகளின் நிலப்பரப்புகளை உள்ளடக்கியே குருத்திஸ்தான் விடுதலைப் போராட்டம் நிகழ்ந்து வருகிறது. இக்கட்டுரையிலும் குருத்திஸ் மக்கள் மீதான துருக்கியின் படையெடுப்பும், அமெரிக்காவின் ஆணுகுமுறையும், குருத்திஸ் தலைமைகளின் உத்திகளும் உரையாடப்படவுள்ளன.

ஈரான் ஈராக் சிரியா துருக்கி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய குருட்டிஸ்தான் தனி நாட்டுக்கான கோரிக்கை பலநூற்றாண்டுகளாக முன்வைக்கப்பட்டு, ஆயுதப் போராட்டமாக நிகழ்த்தப்பட்டு வருகிறது. குர்திஸ் மக்களின் வரலாறும், இருப்பும் நீண்ட நெருக்கடிகளைக் கொண்டது. குர்திஸ் இனக்குழு நீண்ட வரலாற்றைக் கொண்டது. குறிப்பாக ஓட்டமன் சாம்ராஜ்சியத்தின் ஓர் அலகில் தனித்துவமாக இனமாக வாழ்ந்தாலும், முடியாட்சி பாரம்பரியத்தினால் சுதேசிய அடையாளத்தையும், தனித்துவத்தையும் பேணமுடியாதவர்களாக மாறினர். அதன் பயனாக மேற்காசியாவின் ஈரான்,ஈராக், சிரியா, துருக்கி ஆகிய நாடுகளில் சிதறி வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இருந்த போதும் அந்தந்த நாடுகளில் வாழ்ந்த குர்திஸ்கள் ஒருமைப்பாட்டையும், தமது பண்பாட்டையும் பேணிவந்தனர். ஆனால் அந்த நாடுகளின் எதிர்ப்புகளால் குருத்திஸ் இனம் எதிர்கொண்ட துயரத்தினாலும், அழிவுகளாலும் காலப்போக்கில் இந்நாடுகளின் பகுதிகளை உள்ளடக்கி தனிநாட்டுக்கான கோரிக்கையை முன்வைத்து ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் அனைத்து நாடுகளாலும் ஒடுக்கப்பட்டு அழித்தொழிக்கப்பட்டு, சித்திரவதைக்கும், படுகொலைக்கும் உள்ளாக்கப்பட்டனர். இதை இன்றுவரையும் அனுபவித்தே வருகின்றனர். இத்தகைய துயரத்தை அவர்கள் வாழ்ந்த எல்லா நாடுகளிலும் எதிர்கொண்டனர். 1970 ஆண்டு காலப் பகுதியில் ஈராக்கின் அல் அன்பால் பிராந்தியத்தில் மட்டும் 18,2000 குர்த்திஸ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஈராக் மீதான அமெரிக்க கூட்டுப்படையின் படையெடுப்புக்கு பின்னர் குர்திஸ்தான் பிராந்தியம் தன்னாட்சிப் பகுதியாக மாறியது.

அமெரிக்க ஈராக் மீது தலையீடு செய்த பின்னர் குருத்திஸ் மக்களுக்கான ஜனநாயகச் சூழலை ஈராக்கில் ஏற்படுத்தியிருந்தமை கவனிக்கத்தக்கது. அவர்கள் தாம் முன்வைத்த குர்திஸ்தான் அரசை உருவாக்க முயற்சித்ததை ஈராக்கில் சதாம் உஸைனின் வீழ்ச்சிக்குப் பின்னர் சாத்தியப்படுத்தத் திட்டமிட்டனர். இதனடிப்படையிலேயே கடந்த 25 செப்ரெம்பர் 2017 இல் ஈராக்கில் தனியரசுக்கான பிரகடனத்தின் கீழ் பொது வாக்கெடுப்பொன்றினை நிகழ்த்தினர். அதில் 92 சதவீதமான மக்கள் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதனை அடுத்து அப்பிராந்தியம் முழுவதும் குருத்திஸ்களுக்கு எதிரான அணுகுமுறையில் அவ் அரசுகள் தீவிரம் காட்டத் தொடங்கின. இந்த சந்தர்பத்திலேயே அமெரிக்கா தனது துருப்புக்களை அதிகமாக சிரியாவின் எல்லைக்குள் நகர்த்தியது. அல்டான்ப் தளமானது ஈராக்கின் எல்லையோரமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சிரியாவுக்குள் அது அமைந்தாலும் ஈராக்கினை கண்காணிக்கவும், ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைகளுடனான உறவை பராமரிக்கவும் அத்தளம் அமெரிக்காவுக்கு உதவியது என்பதும் குரத்திஸ் விடுதலைப்படைக்கு அதிக நம்பிக்கையை தந்த செய்தியாக இருந்தது.

ஆனால் அமெரிக்க தனது படைகளை வெளியேற்றப் போவதாக அப்போது அறிவித்த மறுகணம், அதிக நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட குர்த்திஸ் விடுதலைப்படை, மீளவும் ஒருதடவை வல்லரசுகளது நலனால் ஏமாற்றப்பட்டதாகக் கருதியது.. அதே தவறை அமெரிக்கா மீண்டும் சிரியா எல்லையிலிருந்த தனது படைகளை விலக்கிக் கொள்வதாக அறிவித்ததும், துருக்கிய தாக்குதலுக்கு வழிவிட்டே தனது படைகளை விலக்குவதாகவும் தெரிவித்தது. அமெரிக்கா மீண்டும் ஒரு முறை தமது முதுகில் குத்தியுள்ளதாகக் குருத்திஸ்தான் போராளிகள் தெரிவித்துள்ளனர். இத்தகைய நெருக்கடி குர்த்திஸ்தானியர்களுக்கு புதிதல்ல எனக் கூறிக் கொண்டாலும், ஆயுதப் போராட்டத்தை வலுவாகக் கடைப்பிடித்த ஒரு விடுதலைப் படையை மற்றும் தன்னிடம் ஆதரவு பெற்று அதிக இலாபங்களை அனுபவித்தவர்களை, அமெரிக்கா கைவிடுதல் என்பதை தேசிய இனவிடுதலைக்கான போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் கூட்டம் கவனத்தில் கொள்ளவேண்டிய படிப்பினையாகும்.




ஆயுதப்போராட்டத்தினை மட்டுமல்ல சதாம் உஸை னை காட்டிக்கொடுத்து அமெரிக்காவிற்கு அதிக இலாபத்தை ஏற்படுத்திய இனம் குருத்திஸ்தானியர் என்பது தெரிந்த விடயம். அதனால் அரபு உலகம் முழுவதும் நிரந்தரமாகவே சின்னி முஸ்லீம்களின் வெறுப்பை சம்பாதித்த நிலையில், அமெரிக்கர்கள் கைவிடுதல் என்பதை புரிந்து கொள்ளுதல் அவசியம்.

மறுபக்கத்தில் தமது எல்லைப்புறத்தில் இருந்து கொண்டு தனி நாட்டைக் கோருவது ஆபத்து என துருக்கி அதிபர் தயீப் எர்டோகன் கருதுகிறார். குர்த்திஸ் இனப் போராளிகளை அழித்தொழிப்பதற்கான சமயமாக தற்போதைய சூழலை துருக்கிய அரசு கருதுகிறது. அமெரிக்காவின் வெளியேற்றம் குர்த்திஸ்க்கள் மீது துருக்கி இராணுவம் தாக்குதல் நடத்த வாய்ப்பானதாக அமைந்துள்ளது. சிரியாவின் வடக்குப் பகுதியில் குர்த்திஸ்தான் படையினர் மீது துருக்கி தொடர்ச்சியான தாக்குதலை நடாத்தி வருகிறது. தற்போது வரை நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டதுடன் சுமார் நான்கு இலட்சம் மக்கள் தங்கள் இருப்பிடங்களிலிருந்து வெளியேறியுள்ளனர். துருக்கியின் இச் செயலை ஐரோப்பிய நாடுகள் உட்பட மேற்குலக நாடுகள் கண்டித்துள்ளன. ஆனால் அமெரிக்கா திட்டமிட்டு நகர்ந்து ஒரு போரைத் தொடக்கிவிட்டுத் தற்போது அதனை எதிர்ப்பதாக ஊகப்போர் புரிகிறது துருக்கியுடன். அமெரிக்காவினதும் அதன் ஜனாதிபதியினதும் வார்த்தையில் எந்தவிதமான உண்மையும் கிடையாது. அமெரிக்காவுக்கு மேற்காசியாவில் ஒரு போரை நடத்த வேண்டிய தேவை உண்டு என்பதனையும், கடந்த பல ஆண்டுகளாக அதனை நடத்துவதற்கு அமெரிக்கா முயன்றுவருகிறது என்பதையும் இப்பகுதியில் பல தடவை சுட்டிக்காட்டப்பட்டது. அதன் ஒரு வடிவமே துருக்கி குருத்திஸ்தான் மோதல். ஆனால் அதனை சிரியா - துருக்கி போராக மாற்றுவதற்கு அமெரிக்கா முயன்று வருகிறது. அதனை ரக்ஷ்சியா தடுத்துவருகிறது.

அதே நேரம் குர்த்திஸ்தான் போராளிகளுக்கும் சிரியா அரசிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்பாடு அதிக மாற்றங்களை குருத்திஸ்தான் போராட்டத்தில் ஏற்படுத்த வாய்ப்புள்ளது. அதாவது தாக்குதல் தொடர்ச்சியாக நிகழும் நிலையில், போராட்டத்தையும் மக்களையும் தற்காத்துக் கொள்வதற்காக சிரியா நெருக்கமான உறவைக் கொள்ள முயல்வதனைக் காணக்கூடியதாக உள்ளது. அதன்படி தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள மன்பீஜ் மற்றும் கோபேன் ஆகிய நகரங்களை சிரியாவிடம் ஒப்படைக்க குர்த்திஸ் போராளிகள் ஒப்புக் கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கு பிரதிபலனாக எல்லைப் படைகளை அனுப்பி, குர்த்திஸ்தான் மக்கள் மீது தாக்குதல் நடத்தும் துருக்கி இராணுவத்தை எதிர் கொள்ள சிரியா அரசு ஒப்புக் கொண்டதாக குருத்திஸ்தானியர் கூறுகின்றனர். ஆனால் இதில் எதனையும் சிரியா அரசு வெளிப்படுத்தியதாகத் தகவல் இதுவரை இல்லை என்றே கூறலாம்.

சிரியா அரச படைகளுடன் சிரிய ஜனநாயகப் படைகள் குருத்திஸ் பகுதிக்குள் அனுமதிப்பதன் மூலம் துருக்கியின் தாக்குதலை எதிர்கொள்ளலாம் எனக் குருத்திஸ் படைகள் நம்புகின்றன. அதனால் துருக்கியின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் சில பகுதிகளை விடுவிக்கவும் முடியும் என குர்த்திஸ்தான் போராளிகள் நம்புகின்றனர். குறிப்பாகத் துருக்கி ஏற்கனவே கைப்பற்றிய ஆஃப்ரின் போன்ற நகரங்களை விடுவிக்கவும் இது வழிவகுக்கும் எனச் சிரியா ஜனநாயகப் படை கூறியுள்ளது. இவ்வகை உடன்பாடு குருத்திஸ்தானியருக்கு மிகமுக்கியமானதொன்றென்றும், அதுவும் குறிப்பாக அமெரிக்காவின் உதவியை இழந்த பிறகு நடக்கும் முக்கிய மாற்றமாகும் எனவும் கருதப்படுகிறது. அடுத்து குருத்திஸ்தான் மீதான போர் நடவடிக்கைகளை துருக்கி முன்னெடுத்தால் அதன் பொருளாதாரம் முற்றிலும் அழிக்கப்படும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் துருக்கிய அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார். அத்துடன் அவர் துருக்கிய தலைவருக்கு எழுதிய கடிதத்தில் மிக மோசமான வார்த்தைகளை பிரயோகித்துள்ளார். ஆனால் இந்த எச்சரிக்கைக்குப் பதிலளித்துப் பேசிய துருக்கிய நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் மெவுல்ட் காவ்சகச்லோ, தாம் அமெரிக்க அதிபர் ட்ரம்பின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி தங்கள் கொள்கைகளை மாற்றிக் கொள்ளமாட்டோம் எனவும், குர்த்திஸ்தான் போராளிகள் மீதான போர் நடவடிக்கைகளை நிறுத்தப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

அமெரிக்கா துருக்கியுடனான 100 பில்லியன் டாலர் மதிப்பிலான வர்த்தக ஒப்பந்தத்தை இரத்து செய்ததுடன் அந்த நாட்டுடனான பேச்சுவார்த்தையையும் முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாகவும் அமெரிக்கா அறிவித்துள்ளது. அதே நேரத்தில் அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசிக்கு துருக்கிய பிரச்சனையைத் தேசிய அவசர நிலையாகப் பிரகடனப்படுத்துமாறு ட்ரம்ப் கேட்டுள்ளார். இதே நேரம் சிரியாவுக்கான ரக்ஷ்சியாவின் சிறப்புத் தூதுவர் அலெக்ஸ ாண்டர் லாவ்ரெண்ட்யேஃப் துருக்கி மேற்கொண்டுள்ள இந்தத் தாக்குதலை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்தார். முந்தைய ஒப்பந்தங்களின்படி துருக்கி, சிரியாவிற்குள் ஐந்து முதல் பத்துக் கிலோ மீற்றர் எல்லைக்குள் செல்லலாம். ஆனால் துருக்கி தற்போது சுமார் முப்பது கிலோ மீற்றர் பகுதியில் பாதுகாப்பு மண்டலத்தை உருவாக்குவதாகக் கூறுகிறது. சிரியாவில் நிரந்தரமாகப் படைகளை நிறுத்தத் துருக்கிக்கு உரிமையில்லை. போரினைத் தவிர்க்கத் துருக்கியோடு சிரியா தொடர்பில் இருப்பதாக அவர் கூறினார். ஆனால் அதனை நேட்டோ தரப்பு ஒப்புக் கொண்டதாகத் துருக்கி அறிவித்துள்ளது.

எனவே துருக்கியின் போர் வியூகம் மற்றும் அமெரிக்காவின் விலகல் என்பனவற்றிலிருந்து குருத்திஸ் போராட்டத்தை தற்காத்துக் கொள்ளவதற்கான உத்தியை, அப் போராட்ட அமைப்புத் தொடக்கியுள்ளது ஒரு புதிய பாதைக்கான அணுகுமுறையாகும். பல நூற்றாண்டுகளாகக் கைக்கொண்ட அணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பது, எதிர்காலத்தில் பெரும் தாக்கத்தினை குருத்திஸ் மக்களுக்கு உருவாக்கப் போகிறது. அத்தகைய தாக்கம் சாதகமானதாகவோ, பாதகமானதாகவோ அமைய வாய்ப்புள்ளது. ஆனாலும் குருத்திஸ் விடுதலைப் போராட்டத்தின் புதிய திருப்பமாக சிரிய- குருத்திஸ் உறவு அமையப் போகிறது.

—— சி.அ.யோதிலிங்கம்

# ஜனாதிபதித் தேர்தல் வெற்றி யாருக்கு?

ஜனாதிபதி தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கி விட்டது. இரு பிரதான வேட்பாளர்களும் தங்களது தீவிர மான பிரச்சாரத்தை ஆரம்பிக்கத் தொடங்கி விட்டனர். வழமை போன்று தேர்தல் வன்முறைகளும் ஆரம்பித்து விட்டன. இரு பிரதான வேட்பாளர் களுக்குமிடையில் கடும் போட்டி நிலவுவதால் தேர்தல் வன்முறைகள் அதிகரிப்பதற்கே வாய்ப்புகள் உண்டு.

கோத்தபாய தரப்பு பெருந்தேசியவாத வாக்கிலேயே அதிகம் தங்கியிருக்கின்றது ஆனால் இந்தத் தடவை அதிலும் நெருக்கடி உண்டு.சஜித் பிரேமதாசாவும் ஒரு பெருந் தேசியவாதி தான். ரணிலைப் போல பெருந்தேசிய வாதத்தின் லிபரல் முகம் அவருக்கு இல்லை. இனவாத முகமே உண்டு. பெருந்தேசிய வாக்குகளை குறிப்பிட்டளவு கவர்ந்தெடுப்பார். இதனால் தான் மங்கள சமரவீர போன்றவர்கள் சஜித்தை வேட்பாளரைக் கொண்டு வருவதில் உறுதியாக நின்றனர். அடிநிலைச் சிங்கள மக்களின் வாக்கும் சஜித்திற்கு உண்டு. இந்தத் தளம் தந்தை வழியாக சஜித்திற்கு கிடைத்தது.

ஐக்கிய தேசியக் கட்சி என்பது சிங்கள மேட்டுக்குடிகளின் கட்சியே. அக்கட்சியை சிங்கள பாமர மக்களிடம் கொண்டு சென்றவர் பிரேமதாசா தான். வலுவான வாக்கு வங்கி பிரேமதாசா விடம் இருந்ததால் சிங்கள மேட்டுக்குடியினால் பிரேமதாசாவை கழட்டி விட முடியவில்லை. ஒரு வகையில் மேட்டுக்குடிகளுடன் போராடித்தான் பிரேமதாசா மேல்நிலைக்கு வந்தார். பல்லினத் தொகுதியான கொழும்பு மத்தி தேர்தல் தொகுதி அவருக்கு வலுவான ஒரு அரசியல் தளத்தைக் கொடுத்தது. கொழும்பு மாநகர சபை உறுப்பினராக,மேயராக, பின்னர் பாராளுமன்ற உறுப்பினராக, அமைச்சராக, பிரதமராக, எனப் படிப்படியாக வளர்ந்தே ஜனாதிபதி என்ற உயர் நிலைக்கு சென்றார்.


பிரேமதாசாவின் மரணத்திற்கு பின்னர் அவரது இடத்திற்கு பிரேமதாசா குடும்பத்தவர்கள் வரக் கூடாது என்பதற்காகவே கொழும்பு மத்தி அக்குடும்பத்திற்கு மறுக்கப்பட்டது. சஜித் பிரேமதாசா தந்தையாரின் பிறந்த இடம் எனகுறிப்பிட்டு அம்பாந்தோட்டையில் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கி படிப்படியாகவே இன்றைய நிலைக்கு வளர்ந்துள்ளார்.

கோத்தபாய தரப்பிற்குள்ள இரண்டாவது நெருக்கடி ஜே.வி.பி யும் தேர்தல் களத்தில் நிற்பது தான். இந்தத் தடவை ஜே.வி.பி தனித்து நிற்கவில்லை. பல்வேறு பொது அமைப்புக்களையும் தொழிற்சங்கங்களையும் இணைத்து தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில நிற்கின்றது. சுமார் ஒரு லட்சம் மக்களை காலி முகத்திடலில் திரட்டித் தனது பலத்தையும் காட்டியுள்ளது. குறைந்தது 10 வீதமான வாக்குகளை ஜே.வி.பி பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எண்ணிக்கையில் கூறுவதானால் எட்டு லட்சம் வாக்குகள் வரை பெறுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. ஜே.வி.பியின் வாக்குகளில பெரும்பான்மை கோத்தாவிற்குரிய வாக்குகளே. கணிசமானவளவு சஜித்தின் வாக்கு வங்கியினையும் ஜே.வி.பி உடைக்கும்.


மூன்றாவது நெருக்கடி முன்னாள் இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்காவும் வேட்பாளராகப் போட்டியில் நிற்பதாகும். கோத்தபாய தனது வெற்றிக்கும் பிரச்சாரத்திற்கும் இராணுவத்தின ரையும் அவரது குடும்பங்களையுமே அதிகம் நம்பியிருக்கின்றனர். உண்மையில் கோத்தாவின் பலம் என்பது பெருந்தேசிய வாத நிறுவனங்களும், இராணுவமும் தான். மகேஸ் சேனநாயக்கா கோத்தாவின் இராணுவ வாக்கு வங்கியினையும் உடைக்கக் கூடியவராக இருப்பார். அரசு சார்பற்ற நிறுவனங்கள் பல மகேஸ்சேனநாயக்காவிற்கு பின்னால் நிற்கின்றன என்றும் செய்திகள் வருகின்றன. யுத்த வெற்றிவாதமே கோத்தாவின் முதலீடாக இருப்பதனால் இதிலும் உடைவுகளை மகேஸ்சேனநாயக்கா ஏற்படுத்தலாம்.

நான்காவது தான் வெற்றி பெற்றால் முன்னாள் இராணுவத் தளபதி அதுவும் போரை வெற்றி நிலைக்கு கொண்டு வந்த தளபதி சரத் பொன்சேகாவிடம் சேிய பாதுகாப்புப் பொறுப்பை ஒப்படைப்பேன் என சஜித் பிரேமதாசா பகிரங்கமாக கூறியுள்ளமையாகும். யுத்தவெற்றி வாதத்தில் பங்கெடுக்கக் கூடிய ஆற்றல் சரத் பொன்சேகாவிற்கு உண்டு. இராணுவத்தின் ஒரு பகுதியையும் சரத் பொன்சேகா உடைப்பார். போர்க்குற்ற விசாரணையிலிருந்தும் இராணுவத்தினரை குறிப்பாக இராணுவத் தளபதிகளை சரத் பொன்சேகா பாதுகாப்பார் என்ற நிலையும் கோத்தாவிற்கான ஆதரவை மங்கச் செய்யும்.

அதே வேளை சஜித் பிரேமதாசாவிற்கும் பல நெருக்கடிகள் உண்டு. அதில் பிரதானமானது பெருந்தேசிய வாக்குகள் தான். சரத் பொன்சேகா சஜித்துடன் நின்றாலும் மக்கள் எப்போதும் தளபதிகளை விட மன்னர்களையே விரும்புவர்.







2010 தேர்தலில் சரத்பொன்சேகா வுடன் போட்டியிட்டு மகிந்தர் வென்றமைக்கு இதுவே காரணம். கோத்தபாய தற்போது இளவரசராக இருக்கின்றார் எனவே சஜித்துடன் ஒப்பிடும் போது பெருந்தேசியவாத வாக்குகளும் அதன் அடிப்படையில மைந்த போர் வெற்றி வாத வாக்குகளும் அதிகளவில் கோத்தபாயவிற்கு அளிக்கப்படுவதற்கே வாய்ப்புகள் உண்டு. இவ்வாக்குகளில் சிறு பகுதி மட்டுமே சஜித்திற்கு அளிக்கப்படலாம்.

இரண்டாவது ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் மீதான அதிருப்திகள் ஆகும். 2015 இன் பின்னான ஆட்சி தொடர்பில் சிங்கள மக்களிடம் பெரிய திருப்தி இல்லை. அளவுக்கதிகமாக சர்வதேச சக்திகளை நுழைய விட்டுள்ளனர் என்ற அதிருப்தி சிங்கள மக்களிடம் உண்டு. நாட்டு நிர்வாகம் சீராக இல்லை என்ற அதிருப்தியும் உண்டு. ஜனாதிபதி - பிரதமர் முரண்பாடும் சிங்கள மக்களின் சகிப்புத்தன்மையைப் பலவீனப்படுத்தியுள்ளன. சஜித்திற்கு நிர்வாக ஆளுமை குறைவு என்ற கருத்தும் சிங்கள மக்களிடம் உண்டு.

மூன்றாவது காலச் சூழ்நிலையைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படுகின்ற மிதக்கும் வாக்குகளும் பெருமளவில் கோத்தபாயவிற்கு செல்லக்கூடிய வாய்ப்புக்களே உண்டு. கடைசி நேரத்திலேயே மிதக்கும் வாக்காளர்கள் தீர்மானிப்பவர்களாக இருப்பதனால் தற்போது அதனை உறுதியாக சொல்ல முடியாவிட்டாலும் நிலைமைகள் சஜித்திற்கு சாதகமாக இருக்கின்றன என்று கூறமுடியாது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பாக உள்ள அரசு சாரா அமைப்புக் களும் இந்தத் தடவை பெரிய உற்சாக மாக இல்லை. அவற்றை பின்னால் நின்று வழிநடத்துகின்ற மேற்குலகம் உற்சாகமாக இல்லாமையும் காரணமாக இருக்கலாம்.

நான்காவது தமிழ், முஸ்லிம், மலையக வாக்குகளும் முன்னரைப்போல முழுத்திரட்சியாக சஜித்திற்கு அளிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் குறைவு என்பதாகும். தமிழ் வாக்குகளில் வடக்கைப் பொறுத்தவரை டக்ளஸ் தேவானந்தாவிற்கென சிறிய வாக்கு வங்கி உண்டு. அதன் வாக்குகளும், அங்கஜன் இராமநாதனுக்குரிய வாக்குகளும் கோத்தாவிற்கே அளிக்கப்படும்.

போதாக்குறைக்கு சிவாஜிலிங்கமும் கணிசமான வாக்குகளைத் தடுப்பார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பகிஸ்கரிப்பு இயக்கமும் குறிப்பிட்ட வாக்குகளை தடுக்கும். தமிழ்த் தேசியக் கட்சிகளினால் கைச்சாத்திடப்பட்ட கூட்டுக் கோரிக்கைகளை சஜித் ஏற்காவிட்டால் பெரும்பாலான மக்கள் சிவாஜிலிங்கத்தை நாடிச் செல்லலாம் அல்லது பகிஸ்கரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடலாம். கோரிக்கைகளை வெளிப்படையாக ஏற்பதற்கு சஜித்திற்கு பல சங்கடங்கள் உண்டு. என்பதால் அவர் ஒரு போதும் ஏற்கப் போவதில்லை. எழுத்து மூல உத்தரவாதங்களையும் கொடுக்கப்போவதில்லை. எந்த உத்தரவாதங்களை வழங்காத நிலையில் ஐந்து கட்சிகளின் கூட்டும் தேர்தல் தொடர்பில் மௌனமாகவே இருக்கப் பார்க்கும்.

கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம், முரண்பாடு காரணமாக கோத்தாவிற்கு கணிசமான வாக்குகள் விழுவதற்கான வாய்ப்புகள் உண்டு. பிள்ளையானின் கட்சியை உள்ளடக்கிய கிழக்கிலங்கை மக்கள் ஒன்றியம் கோத்தாபயவை ஆதரிக்கும் முடிவினை எடுத்துள்ளது. புதிய தலைமுறை இளைஞர்கள் இவ்வரசியலுக்கு பின்னாலேயே நிற்கின்றனர். அவர்களது முக்கியமான இலக்கு கிழக்கு மாகாணசபையை சிங்கள கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தாவது கைப்பற்றுவது தான். அம்பாறை மாவட்டத்திலும் கணிசமான வாக்காளர்கள் இவ்வரசியலுக்கு பின்னால் இழுபட்டுச் செல்வர். திருகோணமலை மாவட்டத்தில் மட்டும் சஜித் பிரேமதாசா அதிகளவிலான வாக்குகளைப் பெறும் நிலை உண்டு. வடகிழக்கில் ஒரு லட்சத்திற்கு மேலான வாக்குகளை கோத்தா பெறுவர் என்றும் கூறப்படுகின்றது.

முஸ்லீம் வாக்குகளைப் பொறுத்த வரை தென்னிலங்கை முஸ்லீம்களில் ஒரு பகுதி, குறிப்பாக வர்த்தக குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தமது பாதுகாப்பு கருதி கோத்தாபயவினை ஆதரிக்கலாம் எனச் செய்திகள் வருகின்றன.

(19ஆம் பக்கம் பார்க்க)

சிலம்பு

# வெள்ளை வானும் காவி உடையும்

வெள்ளை வான் என்பது தமிழ் மக்களின் உள்ளத்திலொரு உளவியல் தாக்கத்தை ஏற்படுத்திய கொடிய சொல்லாகும். ஏராளமான தமிழ் மக்களை அள்ளிச்சென்று கொடுமையான சித்திரவதைகள் செய்து கொலை செய்ததும் காணாமல் ஆக்கப்பட்டதும் இந்த வெள்ளை வான் பயங்கரவாதமே. தமிழ் இளைஞர்கள் கேட்டுக்கேள்வி இன்றி இந்த வெள்ளை வானினால் கடத்தப்பட்டனர் கப்பம் என்று சொல்லப்படும் பணம் கறக்கும் செயலுக்கும் இந்த வெள்ளை வானே பயன்படுத்தப்பட்டது. வெள்ளை வான் போகிறது என்றால் எந்த வீட்டில் என்ன நடக்கப்போகிறதோ என்று மக்கள் அச்சத்துடனும் மரண பயத்துடனும் வாழ்ந்தனர். மனித உரிமைகள் பற்றிப்பேசிய சிங்கள இனத்து அறிவார்ந்தவர்களும் இந்த வெள்ளை வானினால் காணாமல் ஆக்கப்பட்டனர். இதுதான் மகிந்த ஆட்சியில் கோத்தபாய பாதுகாப்புத்துறைச் செயலாளராக இருந்தபொழுது நடந்த பயங்கரவாதமாகும். தற்பொழுது சனாதிபதித் தேர்தல் தொடங்கியவுடன் இந்த வெள்ளை வான் கலாச்சாரம் பற்றி அதிகம் பேசப்படுகிறது . அதுவும் தமிழர் பகுதிகளிலிருந்தே கூடுதலாகப் பேசப்படுகிறது. தேர்தலுக்கு வாக்குச் சேகரிக்கப் பயன்படுத்தும் சொல்லாக உள்ளது.

சனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்சா போட்டியிடுவதால் அவரது வெள்ளை வான் பயங்கரவாதம் பற்றிய செயல்களை நினைவு படுத்தி இவர் தோற்கடிக்கப்பட வேண்டும் என்கிற கருத்து மக்களிடம் எடுத்துச் செல்லப்படுகிறது. மக்களிடம் வெள்ளை வான் ஏற்படுத்திய உளவியல் தாக்கம் தேர்தலுக்குப் பயன்படும் என்ற நோக்கில் இது பேசப்படுகிறது. முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் முன்புபோல் சர்வதேசத்தின் நடவடிக்கைகளும் இருக்காது கொஞ்சம் விழிப்பாக இருப்பார்கள் என்பதால் கோத்தபாயாவின் செயல்களும் முன்புபோல் இருக்க வழியில்லை என்று குறிப்பிட்டுள்ளார். அவர் சொல்வது என்னவென்றால் அப்போதைய சூழ்நிலையில் புலிகளைத் தோற்கடிப்பதற்காக அரசு செய்த கொடுமைகளைக் கண்டுகொள்ளாமல் இருந்த சர்வதேசம் இப்பொழுதும் அவ்வாறே இருக்க மாட்டாது என்பதாகும் .இதில் ஓரளவு உண்மை இருக்கவே செய்கிறது.

தமிழ் மக்கள் வாக்களிக்காமல் புறக்கணித்தால் கோத்தபாய வென்றுவிடுவார் என்று கூட்டமைப்பும் ஐ.தே.க. ஆதரவு அணிகளும். பாரிய பரப்புரையை முன்னெடுத்துள்ளன .மக்கள் வெள்ளை வான் பயத்தால் கோத்தபாயவைத் தோற்கடிக்க வேண்டும் என்று நினைத்து சஜித்துக்கு வாக்களிப்பார்கள் என்பதே இப்பரப்புரையின் நோக்கமுமாகும். அதே நேரம் பொது வேட்பாளர் ஒருவர் தேர்தலில் போட்டியிட்டாலும் சஜித்தின் வாக்குகளை அவர் பெற்றுவிடுவார் என்ற கவலையும் அத்தரப்பினருக்கு இருந்தது. ஆனால் பொது வேட்பாளரைக்கண்டு பிடிக்காமல் அது ஓய்ந்து விட்டது.

**பயங்கரவாதம் என்பது வெள்ளை வானின் வடிவமாக மட்டுமா இங்கு வந்தது என்றால் இல்லை வெவ்வேறு வடிவத்திலும் பயங்கரவாதம் தமிழர் நிலத்தில் வந்து கொண்டிருக்கிறது. நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் இந்தப் பயங்கரவாதத்தை யாரும் கண்டுகொள்ளவில்லை. இந்தப் பயங்கரவாதம் அரசியல்வாதிகளின் கண்களுக்கு ஏன் தெரிய மாட்டேன் என்கிறது தான் விந்தையாக உள்ளது. ஆனால் இந்தப் பயங்கரவாதம் தான் இப்போதுள்ள நிலையில் வெள்ளை வான் பயங்கரவாதத்திலும் மோசமான அபாயகரமான பயங்கரவாதமாகும்.**


இதிலே இப்பொழுது வந்துகொண்டிருக்கும் பயங்கரவாதம் என்பது கொடிய காவிப் பயங்கரவாதமாகும். வெள்ளையர் வெளியேறிய பொழுது திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் தமிழ் மக்களின் நிலங்களைப் பறித்துச் சிங்கள மக்களைக் குடியேற்றி தமிழ் மக்களின் எல்லைகளைச சுருங்கச் செய்தனர். இவைதான் அம்பாறையின் தொடக்கமாகும். பின்னர் சில இடங்களில் புத்த விகாரைகளைக் கட்டி தமது வரலாற்றுப் பூமி என்று உரிமை கொண்டாடினர். இதற்குச் சான்றுதான் சேருநுவர என்ற தேர்தற் தொகுதியாகும். பின்னர் போர் ஏற்பட்டபொழுது குடியேற்றங்களும் குறைந்தன விகாரைகளும் குறைந்தன. ஆனால் ஆயுத மௌனிப்பின் பின்னர் மிகவும்நுட்பமான திட்டமிடலுடன் புத்த பூமி என்று கூறிக்கொண்டு சிங்களக் குடியேற்றங்களை செய்வதில் ஆட்சியாளர்கள் மும்முரமாக இறங்கியுள்ளனர். இது தான் கொடிய காவிப் பயங்கர வாதமாகும். சில சிற்சில இடங்களில் புத்த சிலைகள் வைக்கிறார்கள் இராணுவ முகாம்கள் இருந்தபொழுது அவை இருந்தன தானே என்று நம்மவர் சிலர் அவற்றை மூடிமறைக்க முயல்கின்றனர் அதனுடைய உட்பரிமானத்தைப் பார்த்தால் அது எவ்வளவு ஆபத்தானது என்பதை ஒரு எடுத்துக்காட்டுடன் புரிய வைக்க முடியும் .

கன்னியா. செம்மலை நீராவியடி. வட்டுவாகல் போன்ற பல இடங்களைத் தமது புத்த பூமி என்று காவி உடை பூண்ட பிக்குகள் உரிமை கொண்டாடுவது அனைவரும் அறிந்ததே. இது ஏதோ ஒரு சிறிய விடயம் என்றுதான் நமது அரசியல்வாதிகள் அதில் அக்கறை கொள்ளாமல் இருந்து வருகின்றனர் என்று நினைப்பது தவறு. அவர்களுக்கு நன்கு தெரியும் இதன் பின்னணி. இதன் தாக்கம் ஆனால் அவர்கள் ஒன்றுமே செய்ய முடியாமல் அரசுகளுக்கு முட்டுக் கொடுக்கும் நிலையிலேயே இருக்கின்றனர்.

செம்மலைப் பிள்ளையார் ஆலய விவகாரத்தை எடுத்துப் பார்த்தால் போதும் எவ்வளவு திட்டமிட்ட ஆக்கிரமிப்பு இந்தக் காவிப் பயங்கரவாதத்தால் ஏற்படுத்தப்பட இருந்தது என்பது ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல் இந்த நீராவியடிப் பிள்ளையார் விவகாரம் போன்ற ஆயிரம் விகாரைகள் கட்டும் திட்டங்கள் ரணிலால் தொடங்கப்பட்டது. தற்பொழுது சஜித்தால் தொடரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள ஆயிரம் விகாரைகள் கட்டும் திட்டத்தின் உண்மையான நோக்கம் என்னவென்று புரியவைக்கும்

செம்மலை நீராவியடியில் பிள்ளையார் கோயில் இருக்கும் இடத்திலிருந்து இராணுவத்தினர் வெளியேறும் பொழுது அங்கு தாங்கள் கட்டிய புத்த விகாரையை பிக்கு ஒருவரிடம் ஒப்படைத்துச் சென்றனர். இப்புத்த விகாரை மிக மிகப் பழமைவாய்ந்தது என்றும். அது தொல்லியல் துறையால் தனக்கு வழங்கப்பட்டதென்றும் அது சிங்கள புத்த வரலாற்றுச் சான்று என்றும் கூறி அங்கிருந்த சிறிய விகாரையைப் பெரிதாகக் கட்ட முனைந்தார். இதில் புதைந்துள்ள ஆபத்தை உணர்ந்த சிலர் அவ்விடயத்தை ஆராய்ந்தபொழுது தான் தொல்லியல் துறையினரின் உள்நோக்கம் அம்பலப்பட்டது. தொல்லியல் துறையினர் அந்தப் பிக்குவிற்குக் காணி தொல்லியல் துறையால் வழங்கப்பட்டதென்று கொடுக்கப்பட்ட இடம் எங்கு உள்ளது என்பதே தொல்லியல் துறையினருக்குத் தெரியாது. ஒரு முற்றிலும் பிழையான இடப் பெயரைக்கொண்ட காணியையே அவர்கள் கொடுத்ததாகத் தெரியவந்தது. காணியைக் கொடுத்த தொல்லியல் துறையினர் பின்னர் அந்த இடத்தைத் தேடினர் அப்படியான இடம் எதுவும் இல்லை என்பதால் அவர்கள் கொடுத்தது ஒரு போலியான கடிதம் என்பது தெரிய வந்தது. இதன் பின்னர் அக்கறைகொண்ட சிலர் மக்களுக்குச் சிறு சிறு கருத்தரங்குகளின் மூலமும் கூட்டங்கள் மூலமும் சொல்லி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். அந்தக் கோயிலில் பொங்கல் வைத்தார்கள் காவடி எடுத்தார்கள் நேர்த்திக்கடன் நிறைவேற்றினார்கள். இதன் எதிரொலியாக அப்பிரச்சினை வழக்கு மன்றுக்குச் சென்றது. நல்ல காலம் அரசியல் கட்சிகள் சார்ந்த வழக்குரைஞர்கள் அதில் தலையிட்டுக் குழப்பவும் காலத்தை இழுத்தடிக்கவும் செய்யவில்லை. கட்சி அரசியலுக்கு அப்பால் இவ்வழக்கு சிறப்பாக நடந்தது. இந்நேரத்தில் தான் அந்த விகாரையின் பிக்கு புற்று நோயினால் சாவடைந்தார். அவரது உடலை பிள்ளையார் கோயில் வளாகத்தில் எரிக்கவோ புதைக்கவோ முற்பட்டனர். இதுவும் வழக்கு மன்றுக்குச் சென்று உடலை ஆலய வளாகத்துக்கு வெளியில் எரிக்குமாறு நீதிபதி தீர்ப்பு வழங்கினார். ஆனால் என்ன நடந்தது நீதிமன்றத்தை அவமதித்துச் சிறை சென்ற பிக்கு ஞானசாரர் சனாதிபதியால் மன்னிப்புக் கொடுக்கப்பட்டு விடுதலையானவர் இந்தத் தீர்ப்பையும் அதாவது மீண்டும் நீதிமன்றத்தை அவமதித்து கோயிலின் புனித தீர்த்தக்கரையில் எரித்தார். காவற்றுறையினர் பாதுகாப்புக் கொடுக்க இது புத்த பூமி இங்கு புத்தத்துக்குத் தான் முதலிடம் என்று பலத்த குரலில் பேசிய பிக்குமார் பண்பாடற்ற கெட்ட சொற்களையும் அங்கு நின்றவர்கள் மேலும் தமிழினத்தின் மீதும் வாரி இறைத்தனர் வழக்காடிய சட்டத்தரணிகள். மாணவர்கள் மூத்த பிரமுகர்களும் தாக்கப்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.

பொதுவில் இது ஏடுகளில் வந்ததே. ஆனால் நம்முடைய ஏடுகள் உண்மையான பலவற்றை மூடி மறைத்தமை ஏமாற்றமே. மக்களுக்கு இந்த நாட்டிலே என்ன கொடுமைகள் நடக்கிறது என்று சொல்லாமல் மோடி வேட்டி கட்டினார் குப்பை பொறுக்கினார் என்று தேவையற்ற செய்திகளைப் போட்டு வருகின்றன. ஆனால் இங்கு நடக்கும் எதனையும் மக்களுக்குத் தெரிவிப்பதில்லை செம்மலையில் கட்டப்பட இருந்த புத்த ஆக்கிரமிப்பு அங்குள்ள மக்களால் மட்டுமே தடுக்கப்பட்டுள்ளது. அங்கு விகாரைக்கு என ஆயிரம் ஏக்கர் காணி ஒதுக்கியுள்ளார்கள். அங்கு கட்டப்படவிருந்த விகாரையின் கோபுரம் முல்லைக் கடலில் செல்லும் கப்பல்களுக்குத் தெரியக் கூடியளவு உயரம் கொண்டதாக இருக்கும். அப்படி இருந்தால் தான் இது புத்த பூமி என்று அடையாளம் தெரியும். அது மட்டுமல்ல அங்கே பெரிய புத்த பல்கலைக்கழகம் நிறுவப்பட்டு சிங்கள பூமியாக மாற்றப்படும் புத்த யாத்திரிகர்கள் தங்குவதற்கு அனைத்து வசதிகளும் கொண்ட யாத்திரீகர் நிலையம் திறக்கப்படும். இவ்வளவும் செய்தால் திருமலைக்கு முல்லைக்கும் இருந்த சிறு நிலத் தொடர்பும் துண்டிக்கப்படும். இது தான் இந்தத் திட்டத்தின் பயங்கர நிலைமையாகும். உற்று நோக்கினால் இவ்வாறு புத்த விகாரைகள் ஆயிரம் வரை கட்டி அவையாவும் சிங்கள புத்த பூமியாக மாற்றப்படும் பொழுது இந்த மண்ணிலே வரலாறுத் தாயகத்தைக்கொண்ட மக்கள் முற்றிலும் ஒரு சிறுபான்மையினமாக வாழ வேண்டிய அவல நிலை ஏற்படும்.





இங்குள்ள அரசியல்வாதிகளுக்கு இந்தப் பயங்கரவாதம் தெரியவில்லை. கோத்தபாய வந்தால் வெள்ளை வான் பயங்கரவாதம் தலை தூக்கி விடும் மீண்டும் என்று மாத்திரமே கூறிவருகின்றனர். தமிழினத்தைப் பொறுத்தவரை வெள்ளை வானும் ஒன்றுதான் காவி ஆக்கிரமிப்பும் ஒன்றுதான். ஆனால் போர் இல்லாத இன்றைய நிலையில் வெள்ளை வான் பயங்கரம் முன்பு போல் மிகக் கொடியதாக இருக்க முடியாது. இப்பொழுதுள்ள நிலையில் சர்வதேசம் முன்பு போல் வாளாவிருக்காது. ஆனால் காவிப் பயங்கரவாதம் கோத்தபாய வந்தாலும் இருக்கும் சஜித் வந்தாலும் இருக்கும். இப்பொழுது தமிழ் மக்கள் முன் உள்ள வினா நாம் எந்தப் பயங்கரவாதத்துக்கு ஆதரவு கொடுப்பது என்பதேயாகும். நாம் யாருக்கு வாக்களித்தாலும் தமிழினத்தை அழிக்கத் துடிக்கும் பயங்கரவாதத்திற்கே வாக்களிக்கப் போகிறோம் என்பதே உண்மையாகும். வெள்ளை வானுக்குப் பயந்து காவிக்குப் போடுவதா காவிக்குப் பயந்து வெள்ளை வானுக்குப் போடுவதா.

# கஜேந்திரகுமாரின் தெளிவான பார்வையும் மாணவர் ஒன்றியமும்

மாசிலான்

சனாதிபதித் தேர்தல் நியமனப் பத்திரங்கள் சமர்ப்பிக்கும்படி அறிவித்த பின்னர் குடிமக்கள் குழுமம் திடீரென்று விழித்தெழுந்து ஒரு பொது வேட்பாளரைத் தேர்தலில் நிறுத்தலாம் என்று முயற்சித்தது. அது ஒரு காலம்பிந்திய செயலாகவே கருதப்பட்டது. ஆனால் இதன் மூலம் அவர்கள் சஜித் பிரேமதாசாவையோ கோத்தபாய ராஜபக்சாவையோ ஆதரிக்கத் தமிழ் மக்கள் தயாராக இல்லை என்பதைத் தான் காட்ட முனைந்தனர் என்று கருத இடம் உள்ளது. அவ்விரு வேட்பாளர்களுக்கும் தமிழ் மக்கள் வாக்களிக்க முடியாத அரசியல் சூழலே இருக்கிறது என்பதைத் தமிழினத்தின் பொது வேட்பாளர் ஒருவர் மூலம் காட்டலாம் என்பது தான் அதற்குள் புதைந்திருந்த செய்தியாகும். இம்முயற்சி காலம் தாழ்ந்த முயற்சி என்பதால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாமல் போய்விட்டது. என்றாலும் அதன் உட்பொருளை மறுப்பதற்கில்லை.

இதற்குப் பின்னர் வடக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் சனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் என்ன வழியில் எதிர்கொள்ள வேண்டும் என்று பேசுவதற்காகத் தமிழ்த்தேசியக் கொள்கை உடைய கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சியில் தமிழரசுக்கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, டெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். சுரேஷ் அணி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய ஆறு கட்சிகளை அழைத்திருந்தனர். பதிவு செய்யப்படாத தமிழ்மக்கள் கூட்டணியை அழைத்த மாணவர் ஒன்றியம் தமிழர் விடுதலைக் கூட்டணியையும், சனநாயப் போராளிகள் என்ற கட்சியையும் கண்டுகொள்ளவில்லை. இது ஏன் என்பதும் தெரியவில்லை. அவை தமிழ்த் தேசியக் கொள்கையைக் கொண்டிராத கட்சிகளா என்பதும் புரியவில்லை. அது மட்டுமல்ல தமிழினம் அத்தேர்தலை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கான கூட்டத்தைத் கூட்டும்பொழுது தாயகத்தின் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களைக் கவனியாது இருந்துள்ளனர். பின்னர்தான் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களையும் தமது பேச்சுக்கு அழைத்துள்ளனர். அவசரகோலத்தில் எடுத்த நடவடிக்கையே இது என்பதும் ஆற இருந்து எடுத்த முடிவாக இல்லாதபடியால்தான் முதலில் கிழக்குப் பகலைக்கழக மாணவர்களை அழைக்காமல் இவ்வாறு நடந்துகொண்டனர் என்பதும் புரிகிறது.

குறிப்பிட்ட ஆறு கட்சிகளும் முதலில் நான்கு தடவைகள் பேசிப் பின்னர் செவ்வாய்க்கிழமை ஐந்தாம் தடவையாக ஒரு இறுதி முடிவுக்கு வருவார்கள் என்று கூறப்பட்டது. அதே போன்று இறுதியாக ஓர் ஆவணம் தயாரிக்கப்பட்டது. இவ்வாவணம் பங்கு பற்றிய ஐந்து கட்சிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் கையெழுத்திடப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மட்டும் அதில் கையெழுத்திடவில்லை. என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும். கட்சிகளுக்கிடையே பேச்சுகள் தொடர்ந்தபொழுதே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை குறிவைத்துக் காய்கள் நகர்த்தப்படுவதாக செய்திகள் வந்திருந்தன. தமிழ்த் தேசிய முன்னணி தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்றும் ஆனால் அவ்வாறு தேர்தலைப் புறக்கணிக்கக் கூடாது என்றால் தமிழ் மக்களின் தேசியம் தாயகம் சுயநிர்ணயம் என்பனவற்றை ஏற்றுக்கொள்ளும் வேட்பாளருக்கே வாக்களிக்க முடியும் என்றும் அதை அக்கறையுடைய வெளிநாடுகளும் உறுதி செய்ய வேண்டும் என்று கூறியிருந்தனர். இது ஒரு மிகவும் நேர்த்தியான அணுகுமுறையாகும். ஆனால் தேர்தல் புறக்கணிப்பை சுமந்திரன் முற்றாகவே நிராகரித்தார். பின்னர் இறுதியாகப் பதின்மூன்று கோரிக்கைகளை ஒரு ஆவணமாகத் தயாரித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த ஐந்து கட்சிகளும் கையெழுத்திட்டுள்ளன மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் பொழுது இது ஒரு நல்ல கோரிக்கைகளை உடைய ஆவணமாகவே தென்படுகிறது. இதை மறுப்பதற்கில்லை. ஆனால் இதற்குள் புதைந்திருப்பது என்ன என்பது ஆய்வுக்குரியதே.

"தமிழ் மக்களைப் பிரதிநித்துவப்படுத்தும் கட்சிகளாகிய நாம் இதற்குக் கீழ் காணப்படும் கோரிக்கைகளை சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான அரசியல் கட்சிகளிடமும் அவற்றின் சனாதிபதி வேட்பாளர்களிடமும் முன்வைக்கிறோம்" என்று அந்தப் பொது ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆவணத்தின் இறுதியில் மேற்சொன்ன கோரிக்கைகளில் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய விடயங்களுக்கு சனாதிபதித் தேர்தல் முடிவடைந்து புதிய சனாதிபதி பதவியேற்று மூன்று மாத காலப்பகுதிக்குள் தீர்வு க்காணப்படல் வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.



பல்கலைகழக மாணவர் ஒன்றியம் கோரிக்கைகளைத் தயாரித்து விட்டது. கட்சிகள் ஏற்றுகையெழுத்தும் இட்டு விட்டன. இனி இந்த ஆவணத்தை யார் எங்கு எடுத்துச் செல்வது. என்று எவரும் தெளிவாகக் கூறவில்லை. சனாதிபதி வேட்பாளர்களிடம் இதனை எவ்வாறு முன்வைக்கப்போகிறார்கள் என்பதும் கூறப்படவில்லை சனாதிபதி வேட்பாளர்களுடன் பேச்சுக்கு யார் யார் செல்வது? மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும் அழைக்கப்படுவார்களா அல்லது கட்சிக்காரர் மட்டுமே பேசுவதற்குச் செல்வார்களா என்பதும் தீர்மானிக்கப்படவில்லை. செய்தி ஏடுகளில் வந்த இந்த ஆவ்ணத்தை வேட்பாளர்கள் கவனத்தில் எடுத்துப் பேசுவதற்கு அழைப்பார்களா? அழைக்காவிட்டால் அடுத்து என்ன? கோத்தபாயவும் சஜித்தும் எழுத்தில் தாம் எவருக்கும் உறுதி கொடுக்கமாட்டோம் என்று ஏற்கனவே கூறியுள்ளனர். ஆனால் தமிழர் தரப்பை ஒரு பொது அங்கீகாரமாக ஏற்றுப் பேச்சுக்கு அழைக்காமல் கூட்டமைப்பை அழைக்கும் பொழுது கையெழுத்திட்ட கூட்டமைப்புச் சாராதவர்கள் பங்குபற்ற முடியுமா. மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளின் நிலை என்ன ?

இந்த ஆவணத்தில் ஐந்து கட்சிகள் கையொப்பம் இட்டுள்ளனர் என்று கூறலாம் நுணுகி நோக்கினால் கூட்டமைப்பில் உள்ள மூன்று கட்சிகளுக் தமிழ் மக்கள் கூட்டணியிலுள்ள இரு கட்சிகளும் கையெழுத்திட்டுள்ளன என்பதே உண்மையாகும். எனவே கூட்டமைப்பு, தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய இரு பகுதியினரே ஒப்பமிட்டுள்ளனர். ஆறு கட்சிகளில் ஐந்து கட்சிகள் என்று கூறுவது எதோ பெரும்பான்மைக்கட்சிகள் ஆதரித்த நிலையில் தமித் தேசியக் கூட்டணி கையெழுத்திடவில்லை என்று பெரிதாகக் காட்டவே இம்முயற்சி ஆகும். கூட்டமைப்பு பிரதமருடனோ சனாதிபதியிடமோ பேசும்பொழுது டெலோவையோ, புளொட்டையோ மதிக்காமல் சுமந்திரனும் சம்பந்தனும் தாங்கள் தங்கள் எண்ணப்படி பேசுகிறார்கள் என்று அவர்களே குற்றம் சுமத்தியுள்ளார்கள். எனவே இங்கு கூட்டமைப்பு த.தே.ம.முன்னணி, த.ம.கூட்டணி ஆகிய மூன்று கட்சிகள்தான் மாணவர் ஒன்றியத்துடன் பேசினார்கள் என்பதுதான் உண்மையாகும்.

தற்பொழுது வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை எழுத்து மூலமாகவோ வாய்மொழி மூலமாகமோ எவ்வேட்பாளரும் ஏற்றுக்கொள்ளாத நிலையில் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிப்பது அல்லது புறக்கணிப்பதா என்பதை மாணவர் ஒன்றியமோ கையெழுத்திட்ட கட்சிகளோ கூறியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு கூறவில்லையே. இங்கே தான் உண்மையான சூழ்ச்சி இருக்கிறது. இவ்வாறு கூறாத நிலையில் இதில் கையெழுத்திட்ட கட்சிகளில் ஒன்று மக்களே! குறிப்பிட்ட கட்சி எமது கோரிக்கைகளை ஏற்றுள்ளது ஆதலால் வாக்களியுங்கள் என்று கூறும்பொழுது மக்கள் மாணவர் ஒன்றியத்தில் கையொப்பமிட்ட கட்சிதானே கூறுகிறது என்று நம்பி மோசம்போவார்களே அதற்கு மாணவர் ஒன்றியம் என்ன செய்யும். இன்னொரு வகையில் மாணவர் ஒன்றியக் கோரிக்கைகளை வெளிப்படையாகவோ எழுத்திலோ கொடுக்க முடியாது அது எதிர்க்கட்சிக்கு வாய்ப்பாகி விடும் என்பார்கள் எனவே இதுவும் ஒருநரித் தந்திரம் அல்லவா.

தற்பொழுது சஜித் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட வரைவை அடிப்படையாகக் கொண்டு அரியல் யாப்புத் தயாரிக்கப்படும் என்று சொல்லியுள்ளார். இந்த வரைவு தான் சிக்கலுக்குள் இருக்கிறது. இவ்வரைவிற்குள் சமஷ்டி இருக்கிறது என்கிறார் சுமந்திரன் இல்லை என்கிறார் கஜேந்திரகுமார். இதில் ஒற்றை ஆட்சியைக் குறிக்கும் எக்கிய ராஜ்ஜே என்ற சொல்லுக்கு ஒருமித்த என்று பொருள் கூறிச் சுமந்திரன் ஏமாற்றுகிறார் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் அதைச் சுமந்திரன் மறுத்து வருகிறார். அதுமட்டுமல்ல அந்த 'எக்கியராஜ்ஜே' என்ற சிங்களச் சொல்லை அப்படியே தமிழ் ஆங்கில வடிவத்திலும் அரசியல் யாப்பில் பயன்படுத்த உள்ளார். இது ஒரு மிக மோசடியான ஏமாற்று வழியாகும். தமிழில் அந்தச் சொல்லைப் போடாவிட்டால் சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் அதென்ன ஒருமித்த நாடு என்று போடுதுவது எக்கியராஜ்ஜேதான் ஒற்றை ஆட்சிக்குரியது என்று சிங்கள மக்களுக்கு நன்கு தெரியும். எனவே ஒற்றை ஆட்சிக்குள் என்றதை மறைக்கச் சுமந்திரன் இவ்வேலைகளை செய்கிறார். இந்த ஏமாற்றும் செயற்பாடுகளை மாணவர் ஒன்றியத்தினால் தயாரிக்கப்பட்ட ஆவணத்தை வைத்து சஜித் புதிய அரசியல் யாப்புத் தருவார் அதிலே எமது ஆவணத்தில் உள்ள சமஷ்டி இருக்கும். மக்களே வாக்களியுங்கள் சஜித்துக்கு என்று கூட்டமைப்புக் கூறும்பொழுது உண்மையான ஒருவன் அதை ஏற்கமாட்டான். அதனால் தான் தனது வாதங்களை எல்லாம் முன்வைத்த கஜேந்திரகுமார் இறுதியாக "தற்பொழுது சனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசா புதிய அரசியல் அமைப்புக்கான இடைக்கால அறிக்கையில் தொடங்கி புதிய அரசியலமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுப்பேன் என்று கூறியுள்ளார் இந்த இடைக்கால அறிக்கையைத் ததே மக்கள் முன்னணி நிராகரிக்கிறது. என்ற விடயம் இந்தப் பொது ஆவணத்தில் இடம்பெறவேண்டும் என நாங்கள் கேட்டோம். ஆனால் இது சனாதிபதித தேர்தல் இது பற்றி இப்போது பேசத்தேவை இல்லை என புளொட், டெலோ ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகியன கூறியுள்ளன ஆனால் இக்கட்சிகள் அது சமஷ்டி அல்ல ஒற்றை ஆட்சிதான் என்றும் கூறியுள்ளன எனவே சகல விடயங்களிலும் இணங்கியிருக்கும் நாங்கள் கோஷங்களுக்கு மயங்கி ஒற்றை ஆட்சிக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகள் முடக்குவதைத் தவிர்ப்பதற்காக இந்தப் பொது ஆவணத்தில் கையெழுத்திட முடியாத நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்பட்டுள்ளோம் என்று தெளிவாகத் தனது நிலைப்பாட்டைக் கூறியுள்ளார். இதில் எவரும் குறைகாண முடியாது.

இங்கே இன்னொன்றையும் ஆவணம் கூறுகிறது சனாதிபதியாகப் பதவி ஏற்பவர் ஆவணத்தில் கூறப்பட்டனவற்றில் மிகவும் அவசியமானவற்றை மூன்று மாதங்களுக்குள் தீர்த்து வைக்க வேண்டுமாம். இதை யார் ஏற்றுக்கொண்டார்கள். இதை ஏற்றுக்கொண்டவருக்குதான் நாம் வாக்களிக்க வேண்டும். ஆனால் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டவர்ளுக்கே எமது வாக்கு என்று எவ்விடத்திலும் கூறவில்லையே. அதன் பின்னர் இதை நிறைவேற்றாவிட்டால் அடுத்த நடவடிக்கை என்ன? இவற்றை அடைய என்ன வழி என்று கூறவேண்டுமல்லவா. சர்வதேசத்தை நாடுவோம் என்று கூறப்போகிறார்களா. இதற்காகத்தான் நாம் வாக்களிக்க வேண்டுமால் அக்கறையுள்ள நாடுகள் எங்களுக்கு உறுதி அளிக்க வேண்டும் என்று கஜேந்திரகுமார் முன்பே கூறியுள்ளார். ஆனால் சர்வதேசத்திடமோ வேட்பாளர்களிடமோ உறுதியான பதிலைப் பெறாமல் மூன்று மாதங்களுக்குள் தீர்வு வேண்டும் என்று மொட்டையாகக் கூறுவது பலனில்லாத சொற்களாகும்.

விடுதலைக்கான பெரும்போரைக் கண்ட தமிழினம் ஒற்றை ஆட்சிக்குள் தீர்வு என்பதை ஏற்று வாக்களிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது. கூறுவது மிக மிகக் கொடிய அரசியல் நடவடிக்கை ஆகும். மாணவர் ஒன்றியம் அரசியல் சிக்கல்களுக்குள் சிக்கியுள்ளது. ஆனால் கஜேந்திரகுமார் தெளிவான கருத்தை மக்கள் முன்வைத்துள்ளார்.

# வஞ்சிக்கப்படும் செஞ்சோலை வாசிகள்

துன்னாலை செல்வம்

வன்னி மாவட்டம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த 2009 இற்கு முற்பட்ட காலப் பகுதியில் அரச பதிவின்றி காணிகளை விற்பனை செய்தவர்கள் இன்று மனச்சாட்சி இன்றி வாங்கிய பணத்தையும் திருப்பி வழங்காமல் சட்டதிட்டங்களுக்கு அமைய மீளப்பெற்று வருகின்றனர். இந்த செயற்பாடு மக்களை விரக்தியடைய வைத்துள்ளன. அதாவது காணிகளை சாதாரண முறைப்படி விற்பனை செய்த பலர் தற்போது நீதிமன்றங்களிற்கு சென்று மீண்டும் அந்த காணிகளை திரும்பவும் பெற்றுக்கொள்கின்றனர்.

அதற்கு அவர்கள் கூறும் காரணம், புலிகள் காலத்தில் அவர்களுக்கு பயந்து காணிகளை எழுதி கொடுத்துவிட்டோம் என்று வாய் கூசாமல் பொய் கூறுகின்றனர். முறையான காணிப் பதிவுகள் செய்யப்படாமல் எழுத்து மூலம் விற்பனை செய்யப்பட்டது பெரும்பாலும் காணி உரித்தான உரிமையாளர்களுக்கு சார்பானதாகி விடுகிறது.

காணியை வாங்கும்போது காணி உரிமையாளருக்கு கொடுத்த பணத்துடன் சேர்த்து காணியில் செலவு செய்தது வரை இழந்து காணியை விட்டு பலர் வெளியேறி வருகின்றனர். புலிகளுக்கு விற்பனை செய்யப்பட்ட இந்த மலையாளபுர காணியையும் உரிமையாளர்கள் மனித உரிமை ஆணைக்குழு மூலம் பெற்றுள்ளனர். செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச்சோலை பிள்ளைகளிற்கென விடுதலைப் புலிகளால் கொள்வனவு செய்யப்பட்ட இந்த காணியை உரிமையாளர்கள் தற்போது மீளவும் பெற்றுக்கொண்டதால் இல்லங்களிலிருந்து இந்த காணிகளில் மீள்குடியேறியவர்கள் தற்போது காணியில்லாதவர்களாகியுள்ளனர்.

கிளிநொச்சி மலையாளபுரம் கிராமத்தில் உள்ள செஞ்சோலை காணியில் குடியிருக்கும் செஞ்சோலைப் பிள்ளைகளை 15 திகதிக்கு முன் காணியைவிட்டு வெளியேறுமாறு கரைச்சி பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. இது தொடர்பில் கரைச்சி பிரதேச செயலகம் எழுத்து மூலமான அறிவித்தலை செஞ்சோலை காணியில் குடியிருக்கும் செஞ்சோலை பிள்ளைகளின் தற்காலிக வீடுகளில் ஒட்டியுள்ளனர். இதனால் செஞ்சோலைப் பிள்ளைகள் செய்வதறியாது நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த வருடம் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்து இந்தக் காணி விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் பின் செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் இருந்து வளர்ந்த பிள்ளைகள் திருமணம் செய்த நிலையில் மீளக்குடியேறினர். இந்த அறிவித்தலால் செஞ்சோலைப் பிள்ளைகள் செய்வதறியாது நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

இந்தக் காணி செஞ்சோலை மற்றும் காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லங்களுக்காக 2009 க்கு முன் விடுதலைப் புலிகளால் காணி உரிமையாளர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் தற்போது காணி உரிமையாளர்கள் காணி அனுமதிப் பத்திரம் ஆவணத்தை வைத்துக்கொண்டு, காணி தங்களுடையது எனவும் அதனை தங்களுக்கே மீளவும் வழங்க வேண்டும் என தெரிவித்து யாழ்ப்பாணம் பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டினை விசாரித்த மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டம் மற்றும் 2014ஆம் ஆண்டு சுற்றறிக்கை பிரகாரம் காணி அதன் ஆரம்ப உரிமையாளர்களிடமே வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை வழங்கியதன் அடிப்படையில் கரைச்சி பிரதேச செயலாளரினால் காணியை விட்டு வெளியேறுமாறு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலில் அரச காணியில் அதிகாரமில்லாது ஆட்சி செய்கின்றீர்கள் எனவும் எனவே அந்தக் காணியை விட்டு ஒக்டோபர் 15ஆம் திகதிக்கு முன் வெளியேறுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் செஞ்சோலை காணிக்கு உரிமை கோருகின்றவர்களுக்கு செஞ்சோலை காணிகளுக்கு பதிலாக மாற்று அரச காணி வழங்கப்பட்டு அரச வீட்டுத்திட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன. இலங்கையின் பிறிதொரு காணிச் சட்டத்தின் படி காணியற்ற ஒருவருக்கு இலங்கையில் எப்பகுதியிலாவது ஒரு அரச காணி மாத்திரமே வழங்க முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



எனவே செஞ்சோலை காணிகளுக்கு உரிமை கோருகின்றவர்களுக்கு அரச காணி வழங்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் செஞ்சோலை காணிகள் வழங்கப்படுவது எந்த வகையில் நியாயம் என பாதிக்கப்பட்டவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். தற்போது செஞ்சோலை காணியில் செஞ்சோலை மற்றும் காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லங்களில் இருந்த 54 பேர் குடும்பங்களாக பதிவு செய்துள்ளனர். அவற்றில் பலர் அந்தக் காணியில் தற்காலிக கொட்டகை அமைத்து குடியிருந்தும் வருகின்றனர்.

குறித்த காணியினை உரிமைகோரி 16 குடும்பங்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இவ்விடயம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தனர். காணி ஆவணங்களை சமர்ப்பித்திருந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பில் பிரதேச செயலகத்திற்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு கடந்த ஏப்ரல் மாதம் பதினோராம் திகதி அன்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் செஞ்சோலை காணிகள் செஞ்சோலைப் பிள்ளைகளுக்கே பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் என்ற தீர்மானத்தை கொண்டுவந்தார் ஆனாலும் எதுவும் நடக்கவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

செஞ்சோலை பிள்ளைகளின் எதிர்காலம் சிறந்து விளங்க வேண்டும் என்பதால் விடுதலைப் புலிகள் தமது போரிற்கான செலவுகள் அதிகம் இருந்தும் போரிற்கு சேர்க்கும் பணத்தில் காணிகளை கொள்வனவு செய்து செஞ்சோலைப் பிள்ளைகள் வாழ்வதற்கு வழங்கினர். ஆனால் அரசு இந்த பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் அக்கறை எடுக்கவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

பரம்பரை பரம்பரையாக தாம் வாழ்ந்த பூமியில் இன்று வாழ முடியாத சூழல் எழுந்திருக்கிறது என்றால் சட்டம் மக்கள் மீது பாய்கிறது என்பது தெரிகிறது. அதுவும் இலங்கையில் தமிழ் மக்கள் மீதே கூடுதலாக சட்டம் பாய்கிறது. தமிழ் மக்களுக்கு அரசியல் தலைமை இல்லாத காரணத்தால் தட்டிக் கேட்கவும் நாதியற்ற இனமாக தமிழினம் இன்று அல்லலப்படுகிறது.

போர் நடக்கும் எந்தவொரு தேசத்திலும் சாத்தியமாக்கப்படாத மனிதாபிமானச் செயற்பாட்டை விடுதலைப் புலிகள் செய்தார்கள் என்பது வரலாறு. தமிழர் தாயக பூமி முழுமையான விடுதலையைக் காண்கின்ற வேளையில் அங்கே ஆதரவற்றர்கள், இயலாமையில் வாழ்பவர்கள், ஏழைகள், கைவிடப்பட்ட முதியோர்கள் கையேந்தி நிற்பவர்கள் என்று யாருமே இருக்கக்கூடாது. போரினால் ஏற்படும் நிரந்தரமான தாக்கங்களுள் மக்கள் நசுங்கிப் போக இடமளிக்கக்கூடாது. மாறாக எல்லா வகையிலும் தலைசிறந்த நாடாக, இந்த உலகிற்கே முன்மாதிரியான ஒரு நாடாக தமிழீழம் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் மிகமிக உறுதியாக இருந்தார். மண்வளம், மக்களின் வாழ்க்கை முறைமை வாழ்வாதாரம், கல்வி, கலை பண்பாடு எல்லாவற்றிலும் அதிக அக்கறை செலுத்தினார்.

செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச்சோலை, அன்புச் சோலை, வெற்றிமனை, லெப். கேணல் நவம் அறிவுக்கூடம் போன்றவை அவற்றில் சில. யுத்தத்தினாலும் சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும் தாய் தந்தையரை இழந்து தவிக்கும் பெண் குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்டதே செஞ்சோலைச் சிறுவரில்லம். ஆண் குழந்தைகளைக் காத்து வளர்த்தது காந்தரூபன் அறிவுச்சோலை. ஆதரவற்ற முதியோர்களுக்காக அன்புச்சோலையும், போர் அனர்த்தத்தினால் மனநிலை பாதிக்கப்பட்ட பெண்களுக்காக வெற்றிமனையும், யுத்தகளங்களிலும், விமானக்குண்டுத் தாக்குதல்களிலும் அங்கங்களை இழந்தவர்களுக்காக லெப். கேணல் நவம் அறிவுக்கூடமும், என்பன உருவாக்கப்பட்டன."சீர்பல ஏந்திநம் சிந்தையில் நிறைந்திடும் செந்தமிழீழத்தின் செஞ்சோலை வேரிடையூறிய நீரென எங்களின் வீடெனவாகிய செஞ்சோலை" இவை செஞ்சோலைச் சிறுவரில்லத்தின் கீதத்திலிருந்து சில வரிகள். 1991ம் ஆண்டு யூலை மாதம் 10ம் திகதி 15 மாணவிகளுடன் செஞ்சோலை மகளிர் பாடசாலை ஆரம்பமானது.

2006ம் ஆண்டுக் காலப்பகுதியில் விமானத் தாக்குதலுக்கு இலக்கானது வள்ளிபுனம் செஞ்சோலை வளாகம். அங்கு கற்கை நெறிக்காகக் கூடியிருந்த செஞ்சோலை மாணவியர் பலரை நாம் இழந்தோம் அன்று. 2009ல் வன்னியை இராணுவம் வல்வளைப்புச் செய்தபோது அந்தக் கோரமான நேரங்கள் செஞ்சோலைப் பிள்ளைகளையும் கடுமையாகத் தாக்கிற்று. பல குழந்தைகள் காயப்பட்டனர். சில குழந்தைகள் உயிரை விட்டனர். மீதிக் குழந்தைகள் செஞ்சோலைப் பணியாளர்கள் சிலரால் காப்பாற்றப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்தாலும் இன்று செஞ்சோலை என்று எம்மால் பெயர் சொல்ல முடியாத நிலைமையில் வெவ்வேறு இல்லங்களில் வாழ்ந்து வருகின்றனர். இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள்.

"சோலையிலே பாடும் செஞ்சோலையிலே பாடும் பூங்குயில் கீதங்கள் கேட்கிறதா. புயல் தாங்கிடும் கீதங்கள் கேட்கிறதா?"

# விக்கினேஸ்வரனின்
## விசித்திர அரசியல் அறிக்கைகள்

சிலம்பு


வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் மிகுந்த மகிழ்ச்சியில் உள்ளார். சஜித் பிரேமதாசா சனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதில் அவருக்குத் தனிப்பட்ட முறையில் மகிழ்ச்சி என்று அறிக்கையில் கூறியுள்ளார்.

"சஜித் இளம் வயதினர். கொழும்பு றோயல் கல்லூரியில் தாராள மனப்பாங்குடைய ஆரம்பக்கல்வியைப் பெற்றவர். அடிப்படையில் கொழும்பு றோயல் கல்லூரிக் கல்வியும்,அவரின் புத்த மதப் பின்னணியும் மேலும் இலண்டன் பொருளாதாரக் கல்லூரியிலும் வேறு கல்லூரிகளிலும் அவர் பெற்ற கல்வியுமானது அவருக்கு, 'வாழ் மற்றவரையும் வாழ விடு' என்ற மனோ நிலையைக் கொடுத்திருக்கும் என்று நம்புகின்றேன்" என்று விக்கினேஸ்வரன் சனாதிபதியாகப் போட்டியிடும் சஜித் பற்றிக் கூறியுள்ளார். ஜே ஆர் ஜெயவர்த்தனா, ரணில் விக்கிரமசிங்க, அனுரா பண்டாரநாயக்கா போன்றவர்களும் ஏராளமான அமைச்சர்களும் அரசியல்வாதிகள் பலரும் றோயல் கல்லூரியிலேயே கல்வி கற்றுள்ளனர். ஏன் விக்கினேஸ்வரன் கூட அங்குதான் கல்வி கற்றவர். அதே றோயல் கல்லூரியில் கற்ற ஜே.ஆர், ரணில், அனுரா போன்றவர்களிலும் பார்க்க சஜித் வேறுபாடானவர், திறமையானவர், வல்லவர், என்று கருதுகிறாரா விக்கினேஸ்வரன். என்பது புரியவில்லை. ஆனால் அவர் சொல்லுகிறார் 'தருண சவிய' மூலம் இளைஞர்களுடன் அவர் வெற்றி கண்டுள்ளார். ஜனசுவய சசனட அருண,போன்றவற்றையும் அவர் நடத்தியுள்ளார். அவருக்கு ஒரு கெட்டியான பௌத்த பின்னணி இருப்பது வரவேற்கத்தக்கது" இவர் கூறும் சிங்கள அமைப்புகள் எவ்வகையானவை அவற்றின் தொடர்பாடுகள்தான் என்ன என்ன என்பது எவருக்கும் தெரியாது.ஆனால் இவருக்குப் புரிந்த அவற்றை தமிழில் கூற இயலாமல் சிங்களத்திலேயே கூறி இணையான தமிழ் மொழிச் சொற்கள் கிடையாது என்பதையும் அவரது கூற்றின் மூலம் காட்டுகிறார். அவருக்கு அவற்றின் பொருள் புரிவது புதினமில்லை. அவர் வாழ்ந்தது அங்கே. தமிழ் மக்களுக்கு அது புரியாது.

இவையாவற்றையும் சொல்லிச் சஜித்துக்குப் புகழாரம் சூட்டிய விக்கினேஸ்வரன் அடுத்துச் சொல்கிறார் "ஒரு சில விடயங்கள் அவர் தமிழர் மீது தன்னுறுதியில்லாத மனோநிலையைக் கொள்ளக்கூடியவராக அமைந்திருக்கலாம் .அவரின் தந்தையார் தமிழ்ப் போராளிகளின் வன்முறைக்கு இலக்கானார் என்று அடையாளப்பட்டுள்ளமை ஒரு காரணமாகும். அடுத்தது நிறுவனப்படுத்தப்பட்ட பௌத்தத்துக்கும் புத்தரின் போதனைக்குமிடையில் இருக்கும் வித்தியாசத்தை அவர் உணர்ந்து கொண்டுள்ளாரோ தெரியவில்லை" என்றும் கூறியுள்ளார். அத்துடன் பிரேமதாசாவின் செயலாற்றலை நன்கு தான் அறிந்தவர் என்றும் அவரின் செயலாற்றலை சஜித் பெற்றிருந்தால் இதுவரை ஆட்சி செய்தவர்களிலும் பார்க்க வித்தியாசமான ஒருவராக சஜித் விளங்க முடியும் என்றும் கூறுகிறார் விக்கினேஸ்வரன். இதுவரை ஆட்சி புரிந்தவர்கள் அறிவுடைமையையும் உணர்வுடைமையையும் வெளிக்காட்ட முடியாதவர்களாக இருந்துள்ளார்களாம். இதிலிருந்து விடுபட்டாரானால் எல்லா மக்களும் பாராட்டும் அதி சிறந்த சனாதிபதியாக வரக்கூடிய தகைமைகள் கொண்டவர் என்றும் புகழ்ந்துள்ளார் சஜித்தை.

இவ்வறிக்கை மூலம் விக்கினேஸ்வரன் கூறுவது என்னவென்றால் பிரேமதாசாவை போராளிகள் வன்முறைக்கு இலக்காக்கியிராவிட்டால் அவர் தமிழினத்தின் உரிமைகளை வழங்குவதற்கிருந்த இரண்டு தடைகளில் ஒன்று இல்லாமல் இருந்திருக்கும் என்பதாகும். இவ்வாறுதான் சோனியாவின் கணவர் பறிபோனதால்தான் அவரால் இலங்கைப்பிரச்சினையில் தீர்வு கொடுக்க முடியாமல் போனதாகவும் கூறியிருந்தார். இனப்பிரச்சினைத் தீர்வுக்குத்தடை போராளிகளே முதன்மைக் காரணம் என்ற தொனியிலும் போராளிகள் வன்முறையாளர்கள் என்றும் அவர் அறிக்கையில் தெளிவாகக் கூறியுள்ளார்.

செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோயிலில் நீதிமன்றுத் தீர்ப்பை மீறிச் சட்டத்தைத் தங்கள் கைகளில் எடுத்து இறந்த பிக்குவின் உடலை பிள்ளையார் கோயில் புனித தீர்த்தக் கரையில் எரித்ததையிட்டு சஜித் பிரேமதாசா என்ன சொல்லியுள்ளார் என்றால் எதுவும் கூறாமல் அமைதியாகவே இருந்துள்ளார்....இது புத்த நாடு இங்கு சிங்களமே எமக்குத் தேவை சிங்களத்தைப் படியுங்கள் நீங்கள் சிங்களம் படிக்காமலிருப்பது எமக்குத் தான் இடைஞ்சலாக இருக்கிறது. புத்தத்துக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் பிக்குவின் உடலை நாம் எங்கு வேண்டுமென்றாலும் புதைப்போம் எரிப்போம் என்று மல்வத்தை பீடம் கூறியபொழுது சஜித் பிரேமதாசா ஏதாவது சொல்லியுள்ளாரா?



சட்டத்தை மீறிய புத்த பிக்குகளுக்குக் கண்டனம் தெரிவித்தாரா? நீதிமன்றத்தை அவமதித்துச் சிறைத்தண்டனை பெற்ற ஒருவர் மன்னிப்புக்கொடுத்து விடுதலையாகி வந்து முன்னர் செய்த அதே தவறான நீதிமன்றத்தை அவமதிக்கிறாரே என்று யாராவது குரல் கொடுத்தார்களா, சஜித் வாயே பேசவில்லை. ஆனால் விக்கினேஸ்வரன் கூறுகிறார் சஜித் இத்தனை குணாம்சங்களைக் கொண்டிருப்பதால் வாழு வாழ விடு என்ற மனோநிலையை அவர் பெற்றிருப்பார் என்று .

பிரேமதாசா அதிகாரப் பரவலாக்கம் என்பது கிராம மட்டத்தில் தான் இருக்க வேண்டும் என்ற கொள்கையுடன் தான் இருந்தவர். சமஷ்டியையும் எதிர்த்தவர். மாகாண சபையையும் எதிர்த்தவர். கிராமப் பஞ்சாயத்து முறைதான் சிறந்த அதிகாரப் பரவலாக்கம் என்றவர். ராஜீவ் ஜே.ஆர் ஒப்பந்தத்தை முழுமையாக எதிர்த்தவர்.அமைச்சரவைக் கூட்டத்திற்கு இந்தியத் தூதுவர் தீக்சித் வந்த பொழுது கண்டனம் தெரிவித்து அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து வெளியேறியவர் பிரேமதாசா. இதனால்தான் பிரேமதாசாவைப் பயன்படுத்தி இந்தியப் படைகளை வெளியேற்றினர் விடுதலைப் புலிகள். அதன் பின்னர் புலிகளை அழிக்கப் பிரேமதாசா எடுத்த நடவடிக்கைகள் நாடறிந்ததே. இவரது காலத்தில் தான் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இருந்த ஏராளமான மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டனர். இதெல்லாம் தெரியாமல் விக்கினேஸ்வரன் போராளிகளின் வன்முறை சஜித் பிரேமதாசா பிரச்சினைக்குத் தீர்வு காணத் தடையாகப் இருக்கும் என்று கூறியுள்ளார்.ஆட்சியாளர்களும் படைத்துறையினரும் செய்யும் அனைத்தும் சட்டத்துக் உட்பட்டவை போராளிகளின் செயல்கள் பயங்கரவாதம் என்று தான் விக்கினேஸ்வரன் நினைக்கிறாரோ தெரியவில்லை. ஏனெனில் அவர் சட்டம் படித்து நீதிபதி ஆனவர் சட்டத்தைத் தானே பார்ப்பார்.

மேற்கண்டவாறு 2019-09-30இல் கூறிய விக்கினேஸ்வரன் அடுத்த நாள் 2019-10-01 இல் வேறொரு விதமாகக் கூறியுள்ளார். சில கட்சிகளின் செய்திகளைப் போடுவதற்கு இடம் கொடுக்காத ஏடுகள் சில விக்கினேஸ்வரன் கேள்வி பதில் என்ற பெயரில் விடும் அறிக்கைகளை ஒவ்வொரு நாளும் போடுவதன் பின்னணி தான் என்னவென்றும் புரியவில்லை.

இன்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் பொழுது அதில் அவர் பொதுவாகத் தான் எழுதியிருப்பதாகத் தோன்றும் ஆனால் சஜித்துக்கு ஆதரவான கருத்தையே அங்கும் விதைத்துள்ளார்.கோத்தபாயாவுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்று குறிப்பிடும் அவர் கோத்தபாய தமிழருக்கு அரசியல் ரீதியாக என்ன செய்யப்போகிறேன் என்று எதுவும் கூறத் தேவை இல்லை என்று குறிப்பிடுகிறார். கோத்தபாய ஏன் குறிப்பிடத் தேவை இல்லை என்று கூறும் விக்கினேஸ்வரன், சஜித் என்ன செய்யப்போகிறேன் என்று கூறவேண்டுமாம்.அப்படிக் கூறாது விட்டுத் தமிழ் மக்கள் சஜித்துக்கு வாக்களிக்காமல் விட்டால் கட்டாயம் கோத்தபாய வென்றுவிடுவார் என்று கூறுகிறார் அவர். இது மறைமுகமாக சஜித்துக்கு வாக்களியுங்கள் அல்லது கோத்தபாய வந்து விடுவார் என்று கூறாமல் கூறும் செய்தியாகவே பார்க்கப்படவேண்டும்.

ஆனால் அவர் வேறொன்றையும் சொல்லுகிறார் கோத்தபாய வந்தால் அவர் சீனச் சார்பு நிலை எடுப்பார் இதை அமெரிக்காவும் இந்தியாவும் விரும்ப மாட்டாது. அது தமிழர்களுக்குச் சார்பாகவே இருக்கும் என்றும் கூறுகிறார். அதே நேரம் சஜித்தைப் பார்த்து மீண்டும் கூறுகிறார் தமிழ் மக்கள் வாக்களிக்காது தேர்தலைப் புறக்கணித்தால் கோத்தபாய வென்றுவிடுவார் எனவே எமக்குத் தரப்போவதை வெளிப்படையாகக் கூறவேண்டும் அதனால் அவருக்கு வரப்போகும் சிங்கள வாக்குகள் குறையமாட்டா எனத் தைரியமும் கொடுக்கிறார் சஜித்துக்கு..எனவே அவர் எமக்குத் தரப்போகின்றனவற்றை தேர்தல் அறிக்கையில் பரிசீலித்துப் பார்ப்போம். அதன் பின் அவரின் நிலைப்பாட்டைக் கேட்டறிவோம். பின்னர் நடவடிக்கையில் இறங்குவோம் இப்போது பொறுமை காப்போம் என்று அடுத்து அடுத்து அறிக்கை விட்டுக் களைத்துப்போனவர் பொறுமை காக்கப்போகிறாராம் மக்களையும் பொறுமை காக்கட்டாம்.

முன்பு எமது உரிமைகளைத் எவர் தருவதாக எழுத்தில் உறுதி தருகிறார்களோ அவருக்குத் தான் ஆதரவு வழங்க வேண்டும் என்று கூறியவர் இப்பொழுது தேர்தல் அறிக்கையைப் பார்த்து முடிவெடுப்போம் என்று கூறுகிறார். இந்த மாற்றம் ஏன் என்றால் தேர்தலில் போட்டியிடும் எவரும் ஒப்பந்தம் எதிலும் கையெழுத்திடப் போவதில்லை என்று கூறிவிட்டனர்..கோத்தபயாவைக்க காட்டி சஜித்துக்கு ஆதரவு கொடுங்கள் என்று தான் விக்கினேஸ்வரன் கூறுகிறார். போராளிகளின் வன்முறைதான் சஜித்துக்கு கொஞ்சம் இடைஞ்சலாக இருக்கும். இல்லாவிட்டால் தீர்வு தருவர் என்று நம்புகிறார் விக்கினேஸ்வரன். தேர்தல் நெருங்கும் பொழுது சஜித்துக்கான ஆதரவை முழுமையாகத் தெரிவிப்பார் என்றே தெரிகிறது. அதற்காகப் போராளிகளை வன்முறையாளர்கள் என்று கூறி சஜித்திடம் நல்ல பெயர் எடுக்கவா முயற்சிக்கிறார் விக்கினேஸ்வரன்.

# 5 தமிழ்க் கட்சிகளும் 13 அம்சக் கோரிக்கைகளும் கூட்டுத் தொடருமா?

ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலைக்கான ஆவணத்தில் ஐந்து தமிழ்க் கட்சிகள் கைச்சாத்திட்டன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெளியேறியது -

இலங்கை ஒற்றையாட்சி அரசின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான சிங்கள அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களிடம் ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலை தொடர்பான கோரிக்கைகளை முன்வைக்கும் நோக்கில் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட ஐந்து தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டு ஆவணம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன. யாழ் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் களின் தொடர் முயற்சியினால் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் போது எட்டப்பட்ட பொது இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே கூட்டு ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டு கடந்த திங்கட்கிழமை மாலை கையொப்பமிடப் பட்டுள்ளது. ஐந்தாவது தடவையாக நடத்தப்பட்ட பேச்சுக்களின் முடிவில், பொது இணக்கப்பாட்டு ஆவணத்தில் கையொப்பமிடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் முன்னாள் வடமாகாண சபை முதலமைச்சர், நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன், ரெலோ இயக்கத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈபிஆர்எல்எவ் செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

ஆனாலும் ஐந்து சுற்றுப் பேச்சுக்களிலும் பங்கேற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இந்த ஆவணத்தில் கையொப்பமிட மறுத்து கலந்துரையாடல்களில் இருந்து வெளியேறியது.


பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இந்த ஆவணத்தில் இலங்கை அரசாங்கம் தயாரித்த ஒற்றையாட்சிக்குரிய புதிய அரசியல் யாப்புக்கான இடைக்கால வரைபை நிராகரிப்பதாக ஆவணத்தில் கூறப்பட வேண்டுமெனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்வைத்த கருத்தை ஏற்க ஏனைய கட்சிகள் மறுத்துவிட்டன.

ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கான இடைக்கால யோசனையை தமிழ் தேசிய மக்கள் முன்னணி நிராகரிக்கிறது என்ற குறிப்பையாவது பதிவு செய்தால் ஆவணத்தில் கைச்சாத்திடுவோம் எனக் கேட்டுக் கொண்டபோதும் ஏனைய ஐந்து கட்சிகளும் இணங்கவில்லையென முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

ஆனால் புதிய அரசியல் யாப்புக்கான இடைக்கால வரைபு கைவிடப்பட்ட விடயம் என்றும் அது பற்றி ஆவணத்தில் கூறப்பட வேண்டிய அவசியம் இல்லையென்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார்.

இந்த நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூட்டத்தில் இருந்து வெளியேறியுள்ளது. எனினும் ஆவணத்தில் கையொப்பமிட்ட ஏனைய ஐந்து தமிழ்க் கட்சிகளும் இந்த ஆவணத்தின் அடிப்படையில் கொழும்பில் பிரதான சிங்களக் கட்சிகளின் வேட்பாளர்களை சந்திப்பதென முடிவெடுத்துள்ளன.

இதேவேளை, ஒற்றையாட்சிக் கட்டமைப்பை நிராகரித்து தமிழ் மக்களின் இறைமையோடு தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்க வேண்டுமென ஐந்து தமிழ்க் கட்சிகள் கையொப்பமிட்ட ஆவணத்தின் கோரிக்கையின் முதல் பந்தியில் கூறப்பட்டுள்ளது. எனவே



மைத்திரி - ரணில் அரசாங்கம் தயாரித்த ஒற்றையாட்சியை மையப்படுத்திய புதிய அரசியல் யாப்புக்கான வரைபை நிராகரிப்பதாக ஏன் குறிப்பிட்டிருக்க முடியாது எனக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

குறைந்த பட்சம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கருத்தாக அல்லது அந்த விடயத்தை முன்னணி நிராகரிப்பதாகவேனும் ஆவணத்தில் குறிப்பிட்டிருக்கலாமே என்ற கேள்விகளும் எழாமலில்லை.

பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஐந்து சுற்றுப் பேச்சிலும் கலந்துகொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட ஒவ்வொரு கட்சிகளும் தங்கள் கருத்தை அறிக்கையாகச் சமர்ப்பித்திருந்தன. அந்த அறிக்கை களையும் குறித்த ஆவணத்துடன் இணைத்து கலந்துரையாடல்களில் பங்குபற்றிய ஒவ்வொரு கட்சிகளின் தனிப்பட்ட நிலைப்பாடு எனக் குறிப்பிட்டு ஆவணத்தின் பின் இணைப்பாகப் பதிவு செய்திருக்கலாம் என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

இந்தியாவின் ஏற்பாட்டில் 1985 ஆம் ஆண்டு திம்புவில் இடம்பெற்ற பேச்சுக்களில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் அனைத்து விடுதலை இயக்கங்களும் முரண்பாட்டில் உடன்பாட்டோடு பங்குபற்றி ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலைக்கான அடிப்படைக் கோட்பாடு ஒன்றை தயாரித்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே ஐந்து சுற்றுப் பேச்சுக்களி லும் கலந்துகொண்ட தமிழ்க் கட்சிகள் திம்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆவணத்தைத் தயாரித்திருக்கலாமெனவும் திம்புப் பேச்சுக்களின்போது கடைப்பிடித்த முரண்பாட்டில் உடன்பாடு என்ற நிலைப்பாட்டைப் பின்பற்றியிருக்கலா மெனவும் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

அதேவேளை, தேர்தலில் போட்டியிடவுள்ள சிவாஜிலிங்கம் பற்றிய எதிர்மறையான விமர்சனங்களுக்கு அப்பால், அவரை ஒரு குறியீடாகக் கருதி பொது வேட்பாளராக ஏற்றுத் தமிழ்மக்களை அவருக்கு வாக்களிக் கச் செய்திருக்கலாம். அந்த அடிப்படை யில் இந்த ஆவணத்தைத் தயாரித்து பிரதான சிங்களக் கட்சிகளின் வேட்பாளர்களிடம் கையளித்துமிருக் கலாம் என்ற கருத்துக்களும் எழுப்பப்படாமல் இல்லை.

இந்த ஆவணத்தின் இறுதியில் ஈழத் தமிழர் அரசியல் விடுதலை குறித்த தமது கோரிக்கைகளை நிறைவேற்ற மூன்று மாதகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மூன்று மாதங்களில் இந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லையானால் அதன் பின்னர் ஐந்து தமிழ்க் கட்சிகளும் ஒன்று கூடிப் பேசுவார்களா? அது பற்றிய தயாரிப்புகள், திட்டங்கள் இவர்களிடம் இருக்கின்றதா என்ற வினாக்களும் எழவே செய்கின்றது.

அத்துடன் இந்த ஆவணம் தமிழ் மொழியில் தயாரிக்கப்பட்டுக் கையொப்பமிடப்பட்டுள்ளது. அது நல்லது. ஆனால் பிரதான சிங்களக் கட்சிகளின் வேட்பாளர்களிடம் கையளிக்கப்படும்போது தமிழ் மொழியில் பரிந்துரைக்கப்பட்டுள்ள அத்தனை விடயங்களும் ஆங்கில மொழியிலும் பதிவு செய்யப்படுமா? ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட அந்த ஆவணத்திலும் ஐந்து தமிழ்க் கட்சிகளும் கையொப்பமிடுவார்களா? என்ற சந்தேகங்களும் எழாமலில்லை.

கடந்த எழுபது ஆண்டுகளாக அரசியல் விடுதலைக்காகப் போராடி வருகின்ற ஈழத் தமிழர்களின் தலைமைகளோடு, சிங்கள ஆட்சியாளர்கள் அவ்வப்போது எழுத்து மூலமாகச் செய்து கொண்ட உடன்படிக்கைகளையே கிழித்தெறிந்தவர்கள் அல்லது கைவிட்டனர் என்று சொல்லலாம். எனவே இவ்வாறானதொரு நிலையில் அதுவும் 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னர் பத்தாண்டுகள் கடந்தவொரு சூழலில் ஐந்து தமிழ்க் கட்சிகள் கையொப்பமிட்டு வழங்கிய இந்த ஆவணத்தைச் சிங்கள ஆட்சியாளர்கள் கிழித்தெறியமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் என்பதே மக்களின் கேள்வியாகும்.

பிரதான சிங்கள அரசியல் கட்சிகளிடையே ஜனாதிபதி வேட்பாளர்களை உருவாக்கு வதில் கொழும்பில் உள்ள இந்திய அமெரிக்கத் தூதரகங்கள் தீவிரமாக ஈடுபட்டன என்பது ஏலவே வெளியான செய்திகள். இந்த நிலையில் இந்த ஆவணத்துக்கு அல்லது ஆவணம் தயாரிக்கப்பட்ட போது சர்வதேச உத்தரவாதம் எதுவும் பெறப்பட்டதா? அல்லது குறைந்தபட்சம் அவர்களோடு எதுவும் கலந்துரையாடல் இடம்பெற்றதா என்ற கேள்விகளும் எழாமலில்லை.

எனவே இந்த ஆவணம் ஜனாதி பதித் தேர்தலை மாத்திரம் நோக்க மாகக் கொண்டமைந்தது என்ற தோற் றப்பாட்டைத் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தாமலும் சஜித் பிரேமதாச, கோட்டாபய ராஜபக்ச ஆகியோருக்காக மாத்திரம் தயாரிக்கப்பட்ட ஆவணமாக வும் இல்லாமல், இலங்கை ஒற்றை யாட்சி அரசை நோக்கி முன் வைக்கப் பட்ட ஆவணமாகவே ஐந்து தமிழ்க் கட்சிகளும் இதனை வெளிப்படுத்த வேண்டும்.

இது ஒரு வரலாற்று ஆவணம் என்றும் ஈழத் தமிழர்கள் பலர் கருத்து நியாய உருவாக்கமுயல்வோர் அதனையும் கருத்திலெடுத்துச் செயற்படுத்த வேண்டிய அவசர அவசியமும் உண்டு என்பதையும் சம்பந்தப்பட்ட அனைவரும் உணரவேண்டும்.

(நன்றி : கூர்மை)

# எமக்கு வேண்டியதை நாமே பெற்றுக் கொண்டால்..?





**வட**மாகாணத்துக்குரிய அரசு வந்தபோது எமக்கென ஒரு நிர்வாக அலகு வருகிற தெனவும், அதனூடாக எமது தேவைகளை எல்லாம் நாம் பூர்த்திசெய்யலாம் என்றும் கனவு கண்ட யாழ். மக்களுக்கு, அவர்கள் கனவில் மண் விழுந்ததைப்போல ஒரு செல்லாக்காசாக வட மாகாண அரசு இயங்கத் தொடங்கியது. வட மாகாண அரசுக்கு நிதி வழங்குவதில் பாராபட்சம் காட்டப்பட்டு, மிகவும் குறைந்த நிதி ஒதுக்கீட்டிலேயே பல செயற்திட்டங்களைச் செயற்படுத்தக வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம். வந்த நிதி ஒதுக்கீடும் செம்மைப்படச் செலவு செய்யாததற்குக் காரணம் அரசியல்வாதிகளும் அவர்கள் சார்ந்த அதிகாரிகளுமே எனப் பலர் குற்றஞ்சாட்டுகின்றனர். நீயா? நானா? என்ற பலப்பரீட்சையோடும், பல அதிகாரத் துஸ்பிரயோகத்தோடும் செயற்பட்டு வந்த வட மாகாண நிர்வாகம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் எதேச்சதிகாரத்தினால் சின்னாபின்னப்படுத்தப் பட்டதோடு மட்டுமல்லாது, அது சார்ந்த அமைச்சுப்பதவிகளை வகுத்தவர்கள் ஊழல் விவகாரத்திலும் மாட்டிக் கொண்டதால் ஆரோக்கியமான எந்த நடவடிக்கைகளும் முழுமையாக நடைபெற்றதாகக் குறிப்புகள் இல்லை. ஒரு இழுபறி நிலைமையே தொடர்ந்து தென்பட்டது.

எமக்குரிய சில அமைச்சுகளுக்குக் கடைசிவரை நிதி ஒதுக்கப்படவே இல்லை. வட மாகாண சபையின் ஆயுட்காலம் முடியுந்தறுவாயில் முதலமைச்சர் வட மாகாணத்துக்குரிய சுற்றுலாத்துறையை ஆரம்பித்து வைத்தார். அதற்குப் பெரு நிதி ஒதுக்கி வட மாகாண சுற்றுலாத் துறைக்கு ஒரு புது வடிவம் கொடுக்க முனைந்தார். சுற்றுலாத்துறைக்கு உகந்ததாகப் பல இடங்கள் அடையாளங் காணப்பட்டுக் கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டியவைகளில் பல இடங்கள் இன்று தூர்ந்து போயுள்ளதாக அறியப்பட்டிருப்பது வேதனைக்குரிய விடயம்.

அப்படி நிலமைகள் இருக்க, தனது விடுமுறையில் வந்திருந்த புலம் பெயர் தமிழரில் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்திருந்தபோது அதில் நிலவும் பற்றாக்குறைகளைக் கேட்டறிந்து, அது தொடர்பாக மக்கள்படும் அவல நிலைகளையும் நேரில் கண்டுகொண்டார். அங்கு சீரி ஸ்கானர் ஒன்றின் தேவையையும் அவர் உணர்ந்து கொண்டதன் விளைவு அதனை வாங்குவதற்கான செலவினங்களில் ஒரு பகுதியினைக் கொடுத்து அந்தக் கைங்கரியத்தைத் தொடக்கி வைத்தார். தொடர்ந்து பலர் தனியாகவும், கூட்டாகவும், நிறுவனாங்கள் பெயரிலும் அந்த உபகரணத்தை வாங்கப் பண உதவிகளைச் செய்ததன் விளைவு, தற்போது அந்த உபகரணம் வாங்கிப் பொருத்தப்பட்டு பலர் அதன் மூலம் பயனடையத் தொடங்கியிருக்கின்றனர்.

கடந்த 12.10.2019 அன்று யாழ். போதனா வைத்தியசாலையாக்கு நன்கொடை யாளர்களின் நிதிப்பங்களிப்பில் கிடைத்த 160 சிலைஸ் சி.ரி ஸ்கானர் (கணினி வழி உடலூறுப்பு ஊடு கதிர்ப்படக் கருவித் தொகுதியை) வைபரீதியாகக் கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது. யாழ். போதனா வைத்தியசாலையின் இயக்குனர் வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி அவர்களது இந்த முயற்சியானது எமக்குப் பல விடயங்களை உணர வைத்துள்ளது. கோடி கோடியாகப் பணம் கொடுத்து கோயில்களைக் கட்டிக்கொண்டும், புனரமைத்துக் கொண்டும் இருக்கிறோம். அது சார்ந்த குளங்களைப் பராமரிக்காது விட்டுவிடுகிறோம். மனிதனுக்கு என்ன தேவையோ? எது பலனைக் கொடுக்குமோ? அதனைச் செய்ய எவரும் துணிவதில்லை. யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் சமயம் சார்ந்த நிறுவனங்களின் புனரமைப்புக்கென செலவிடப்பட்ட தொகை பல கோடிகளைத் தாண்டுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதன் தேவையை எவ்வளவு முக்கியமெனப் புலம்பெயர் சமூகம் கருதுகிறதோ, அவ்வளவுக்கு சமூகத்திலுள்ள இது போன்ற

## யாழ்.போதனா வைத்தியசாலை ஒரு முன்னுதாரணமாக....

தேவையையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தற்போது யாழ்.போதனா வைத்தியசாலைக்கு உபகரணத்தை வாங்கிக் கொடுத்த அன்பர்கள் போல புலம் பெர் சமூகம் சிந்திக்குமேயானால், நாடு நலம் பெறும். யாழ்.போதனா வைத்திய சாலையைப் பற்றி மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்ற வகையில் சில தகவல்களைத் தருவது பொருத்தமானதென எண்ணுகிறேன்.

வடபகுதியிலுள்ள 5 மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளில் இருந்தும் விசேட நிபுணத்துவ மருத்துவ ஆலோசனை மற்றும் மருத்துவ சேவையைப் பெற்றுக்கொள்ளு வதற்காக நோயாளர்கள் பலர் யாழ். போதனா வைத்தியசாலையை நோக்கி வருகின்றனர். வட பகுதியில் வசிக்கும் 1.2 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்களது பிரதான வைத்திய சேவையைப் பூர்த்தி செய்யும் ஒரே ஒரு மூன்றாம் நிலை (Tertiary care Centre) வைத்தியசாலையாக யாழ்.போதனா வைத்தியசாலை காணப்படுகிறது. .

தினமும் 4000 இற்கும் அதிகமானவர்களுக்கு இங்கு சிகிச்சை வழங்கப்படுகிறது. 2000 இற்கும் அதிகமானவர்கள் பல்வேறு கிளினிக்குகளிலும் 1000 இற்கும் அதிகமானவர்கள் வெளிநோயாளர் பிரிவிலும் 1000 இற்கும் அதிகமானவர்கள் உள்ளக விடுதிகளிலும் சிகிச்சை பெறுகின்றனர். 24 மணி நேரமும் இயங்கும் இவ் வைத்தியசாலையில் 1800 இற்கும் அதிகமான அரச உத்தியோகத்தர்கள் பணிபுரிகின்றனர் என்ற விடயம் பலருக்குத் தெரியாதிருக்கலாம்.


யாழ். போதனா வைத்தியசாலையானது கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு படிநிலைகளில் வளர்ச்சி கண்டுள்ள போதிலும் அதனூடாக வருகின்ற அத்தனை மக்களுக்கும் அடிப்படை வைத்திய வசதிகளையும் கொடுக்க முடியாதவாறு வளப் பற்றாக்குறை இருப்பதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சுகாதார அமைச்சினால் உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட இலகு கடன் மூலம் ஆறு தளங்களைக் கொண்ட விபத்தில் பாதிக்கப் படுபவர்களுக்கான அவசர சிகிச்சைப் பிரிவின் முதல் 2 தளங்களும் இந்த ஆண்டு பெப்பிரவரி மாதம் 14 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. அதன் பெறுமதி ரூபா 590 மில்லியன் என அறிந்தோம்.. சுமார் 1300 மில்லியன் பெறுமதியுடைய ஏனைய 4 தளங்களுக்குரிய வேலைகளும் தற்போது நடைபெற்று வருகின்றன. அவையும் விரைவில் மக்கள் பாவனைக்குட்படுத்தப்படும் எனச் சொல்லப்படுகிறது.

இருந்தும் ஒரு வைத்தியசாலையில் மிகவும் முக்கியமாக இருக்க வேண்டிய மகப்பேற்றுக்கெனத் தனியாக ஒரு விடுதி இல்லாதது பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. அங்கிருந்த பழைய மகப்பேற்று விடுதி பழுதடைந்து அபாய நிலையில் காணப்பட்டதால் அது அகற்றப்பட்டு மகப்பேற்று விடுதிக்குரிய நிலம் பல வருடங்களாக வெறுமையாக உள்ளதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

160 Slice CT scanner தொகுதி அமைந்துள்ள கட்டடமானது யப்பான் நாட்டு மக்களால் மருத்துவ உபகரணங்களுடன் நன்கொடையாக வழங்கப்பட்டது. நவீன சத்திர சிகிச்சைக் கூடம், ஆய்வு கூடம், அதிதீவிர சிகிச்சைப் பிரிவு , எக்ஸ் கதிரியக்கப் பரிசோதனை முதலான பல வசதிகளுடன் (Imaging facilities) 2012 ஆம் ஆண்டு முதல் இக்கட்டடத்தில் செயற்பாடுகள் நடைபெறுகிறது. யப்பான் நாட்டு மக்களது ரூபா 2900 மில்லியன் நன்கொடையில் கிடைத்த இத்திட்டம் வடபகுதி மக்களுக்கு ஒரு வரப் பிரசாதமே எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. . இலங்கையில் உள்ள மிகச் சிறந்த ஆய்வு கூடங்களில் (Laboratory) ஒன்று இக்கட்டடத் தொகுதியில் 24 மணிநேரமும் இயங்குகின்றது.

தற்போது வைத்தியசாலையில் பாவனையில் இருக்கின்ற சி.ரி. ஸ்கானர் 9 வருடங்கள் பழைமை வாய்ந்தது. அத்துடன் அடிக்கடி பழுதடைந்து அதன் செயற்பாடு தடைப் படுகின்றமையால் நோயாளிகள் பல அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டி இருப்பதாகவும், நோயாளிகளை சத்திரசிகிச்சை மேற்கொள்ள முன் சி.ரி. ஸ்கான் எடுப்பதற்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கும், கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கும் அனுப்பி சி.ரி. ஸ்கான் செய்ய வேண்டிய நிலை காணப்பட்டது எனவும் வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால் உரிய நேரத்தில் சிகிச்சை வழங்கி நோயாளர்களின் உயிரைக் காப்பாற்றுவதில் நெருக்கடி நிலை காணப்பட்டது. யாழ். போதனா வைத்தியசாலையைப் பொறுத்தவரை 2 சி.ரி. ஸ்கானர்கள் இருப்பது மிகவும் அவசியமானதாகும். ஆகவே தற்போது நன்கொடையாகக் கிடைத்ததைவிட மற்றொன்றை அரச நிதியினூடாகப் பெற்றுக் கொள்ளும் முயற்சிகளையும் வைத்தியசாலை நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது. இவ்வருட இறுதியில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு ஒரு எம்.ஆர்.ஐ ஸ்கானர் அரச நிதியிலேயே முழுமையாக கிடைக்க உள்ளது. பராமரிப்புச் செலவுடன் இதன் பெறுமதி ரூபா 375 மில்லியன் ஆகும்.

ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த திரு. ரஞ்சன் அவர்கள் 46 மில்லியன் ரூபா நிதியுதவியை நன்கொடையாக வழங்கி இந்தக் கைங்கரியத்தை ஆரம்பித்து வைத்தார். அவர் ஐக்கிய இராச்சியம், கனடா, அவுஸ்திரேலியா சுவிற்சர்லாந்து, இலங்கை முதலான நாடுகளில் உள்ள நன்கொடையாளர்களை இணைப்பதிலும் பிரதான பங்கை வகித்துள்ளார். அதுமட்டுமல்லாது அவர் இன்னுப் பல உதவிகளை வைத்தியசாலைக்கு வழங்கிக் கொண்டிருப்பதாகவும் அறிந்து கொண்டோம்.



மு.தளையசிங்கம் ஈழத்தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு தனித்துவ கருத்தியலாளனாக தன்னை அடையாளப்படுத்தி நிற்பவர். முற்போக்கு பிற்போக்கு, நற்போக்கு என எந்த அணிக்குள்ளும் தன்னை அடக்கிக் கொள்ளாது ஒரு தனித்துவமான சிந்தனைப் போக்குடன் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டனர்.

உண்மை, சத்தியம், மனிதநேயம் என்ற எல்லைகளுடன் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர்.

இவரது ஆரம்பக் கால கதைகள் பல கடும் விமர்சனங்களுக்கு உள்ளான போதிலும் பின்னர் இவரது படைப்புகளின் தொனிப்பொருள் ஆன்மீகத் தளத்தில் அவரை ஒரு நவீனத்துவ இலக்கியவாதியாக நிலைநிறுத்தி வைத்துள்ளதெனலாம்.

சிறுகதை, நாவல், குறுநாவல், கவிதை, ஆன்மீகம், என பல வடிவங்களிலும் தனது படைப்புக்களை உருவாக்கினார். இது அவரது ஆரம்பகால சிறுகதைகளில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

# உறவு



கடிதத்தை மடித்து சட்டைப்பையில் வைத்துக் கொண்டேன்.இன்னும் அதைத் திருப்பித் திருப்பி படிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வெரு சொல்லும். ஒவ்வொரு வசனமும் அப்படியே அழகாய்க் கல்லில் செதுக்கியது போன்று என் மனதில் படிந்து கொண்டன. அதை நினைத்து நினைத்து மனதுக்குள்ளேயே சொல்லிக் கொள்வதில் தான் எத்தனை இன்பக் கிளுகிளுப்பு.

32 லவ் லேன்,<br>கண்டி.

அன்புள்ள மூர்த்தி,

என் வாழ்வில் மறக்க முடியாத ஒரேயொரு சம்பவம் தங்களுடன் அன்று உண்டாக்கிக் கொண்ட சந்திப்பேதான். தங்களை திரும்பவும் காண வேண்டி ஏங்கித் தவிக்கிறேன். தயவு செய்து நாளை மாலை என்னை எங்கள் வீட்டில் வந்து காண முடியுமா? அம்மாவும் மாமாவும் கொழும்புக்கு போகிறார்கள். நான் மட்டுமே தனியாக இருப்பேன்.

தங்கள் வரவை எதிர்பார்க்கும்<br>நளினி

அடித்தால் அதிர்ஸ்டம் அப்படியல்லவோ அடிக்க வேண்டும்! பின்னே என்னைக் காண வேண்டுமென அவள் கூடக் கடிதம் எழுதுவாள் என்று கனவிலாவது நான் நினைத்ததுண்டா?

மலை எங்கே மடு எங்கே அப்படித்தான் அன்று நான் எண்ணிக் கொண்டேன். அன்று களியாட்டவிழா வில் அழுகு சொட்டும் வானத்து ரம்பையைப் போல் அப்படியும் இப்படியும் தன்னுடம்பை ஆட்டிக் கொண்டு அவனுடன் அவள் சென்று கொண்டிருக்கும் போது எனக்கும் அவளுக்குமிடையில் பழக்கம் எங்கே ஏற்படப் போகிறது என்று தான் ஏங்கினேன்.

அந்தப் பயல் ஏதோ கொலிவூட்டிலிருந்து நேரடியாக வந்து குதித்தவன் போன்று தன்னை எண்ணிக் கொண்டு நடக்கும் அந்த எஸ்.எஸ்.வேணு, எஸ். எஸ். என்று தன் இனிசியலை சேர்த்துக் கொள்வதில் அவனுக்கு அலாதியான பிரியம். அந்த வானத்து அன்னம் தன் பக்கத்தில் அழகு நடை போட்டு வர எத்தனை கர்வத்தோடு எங்களை பார்த்து ஏளனமாக சிரித்தான். அந்த ஆத்திரத்தில் அவனுக்கெதிராக சதித்திட்டம் வகுக்க முயன்ற என் நண்பர்களுக்கும் எனக்கும் உள்ளூர அவளை அடைவது அரிது என்ற எண்ணம் அப்போது தொட்டே இருந்து வரத்தான் செய்தது.

ஆனால் இன்று அதே அவள் தன்னை வந்து காணும்படி எனக்குக் கடிதம் போட்டியிருக்கிறாள்! என்னுடைய திறமையில் இன்றுதான் எனக்கு நம்பிக்கை பிறந்திருக்கிறது. வில்லன் பாத்திரம் ஏற்று அதில் வெற்றியும் காண்பது கதைகளிலும் சினிமாக்களிலும் முடியாத காரியமாக இருந்தாலும் என்னைப் பொறுத்த வரையிலாவது நிஜ வாழ்க்கையில் அது இயலும் போலல்லவோ இருக்கிறது.

அன்று

அன்று மெற்னிசோ ஆரம்பிக்க நேரமாகிவிட்டது. அவசர அவசரமாக சைக்கிளில் பறந்தேன். இருந்தும் ஐந்து நிமிடங்களுக்கு கிட்ட தாமதமாகிவிட்டது. முதலாம் வகுப்பு டிக்கட் கலரி செக்கன்ட் கிளாஸ் எல்லாம் காலியாகி விட்டது. ஒன்றை வாங்கிக் கொண்டு தியேட்டருக்குள் நுழைந்தேன். எங்கோ ஒரு மூலையில் காலியாக இருந்த சீட் அண்டை அழைத்துச் சென்றுவிட்டான் அசிஸ்டன் கேட் கீப்பர். தட்டுத் தடுமாறிய வண்ணம் உட்கார்ந்து கொண்டேன்.

படத்தின் விறுவிறுப்பான கட்டம் கதாநாயகன் கதாநாயகியை முதன் முதலாய் சந்திக்கும் கட்டம் அப்போதுதான் ஓடிக் கொண்டிருந்தது. சூழலை மறந்து படத்தில் முற்றாக லயித்து விட்டேன். ஐந்து நிமிடங்களோ பத்து நிமிடங்களோ சென்று விட்டன. வழக்கத்துக்கு மாறாக அன்றும் படம் விறுவிறுப்பாகவே ஓடிக்கொண்டிருந்தது.

அந்த நேரத்தில் ஏதோ ஓர் இன்பக் குளிர்ச்சி என் வலது கையை அமுக்கி கீறிக் கோடிட்டு விளையாடுவது போலிருந்தது. ஆச்சரியத்தோடு பார்த்தேன்.

நெளிவளையல்கள் நிறைந்த குளிர் கரம் ஒன்று என் வலது கையுடன் ஒட்டி இணைந்து ஏதோ திட்டம் வகுத்துக் கொண்டிருந்ததது. பக்கவாட்டில் பார்வையைச் செலுத்தினேன். பளிச் சென்று அந்த மெல்லிய இருட்டில் முல்லைத் தோட்டம் ஒன்று மின்னி மறைந்தது.

சினிமாப்படத்துக்கு கதாநாயகியோ யாரோ தான் தெரியாமல் இங்கு வந்து குதித்து விட்டாளோ அல்லது தியேட்டர் திரை தான் என் பக்கம் ஓடி வந்து விட்டதோ? திரும்பி திரும்பித் திரையை பார்த்தேன். படம் ஓடிக்கொண்டிருந்தது. சந்தேகம் தெளிந்தபின் அவள் பக்கம் திரும்பி பார்த்தேன்.

இமையின் இடது கோடியிலிருந்து எட்டிப்பார்த்து இரகசியம் பேசும் அந்த கரிய விழிகள் குமுத மொட்டுப்போல குவிந்து துடிக்கும் அந்த உதடுகள் அத்தனை இருட்டில் கூடத் தக்காளிப் பழம் போல் சுத்த சிவப்பாக கொப்பளிக்கும் அந்த கன்னங்கள் எங்கோ முன்பு பழக்கமானவை போல் தெரிகின்றன. ஒரு வேளை சினிமாப்படத்தில்தான் இல்லை இந்தக் களியாட்ட விழாவில் ஈஸ்டர்ன் கார்னிவலில். ஆம் அன்று அந்த எஸ்.எஸ்.வேணுவோடு சுற்றி திரிந்தாளே அந்த சுந்தரி அவளேதான்.

அவள் எங்கே நான் எங்கே என்று என்னையே என்னில் நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டுவர செய்தாளே அந்த டம்பம் பைக்காரி அவளேதான் இப்போ என்னருகில் இருந்து உங்களுக்காகவே தான் காத்திருந்தேன். என்று சொல்வது போல் என்னை பார்த்து சிரித்தாள். அவளின் வளையல் கரமேதான் இன்னும் என் கையோடு இணைந்து என் உடம்பெல்லாம் இன்ப அலைகளை எழுப்பிக் கொண்டிருந்தது.

ஒற்றைக் காலில் நின்று கொண்டு ஒரு கோடி ஆண்டுகள் தவம் செய்தாலும் நெற்றிக் கண்ணன் தர மறுக்கும் வரமொன்றை கேவலம் இந்த அற்ப சந்தர்ப்பம் எப்படி அள்ளி தந்தது.

இருந்தும் கொஞ்சம் கூச்சமேதான் ஆனால் அதிக நேரமில்லை. அவளே இனி அயேட்டிவைக் கொடுக்கும் போது நான் ஏன் கோழையாக கிடக்க வேண்டும். வெகு சீக்கிரத்தில் எங்கள் கரங்கள் மட்டுமல்ல தோள்கள் கூட ஒட்டிக் கொண்டன. படத்திலே கதாநாயகன் தன் காதலியை அணைத்தான். அவளின் கன்னங்களை கிள்ளினான். காதல் பாட்டுப் பாடினான். காரிலே ஏற்றிக் கெண்டு சவாரி சென்றான். ஆனால் அவர்களால் ஒன்றரை மணி நேரத்திற்கு ஒன்றாய் ஓர் உடலாய் ஒட்டியவ வண்ணம் ஏதும் சலனமின்றி எங்களைப் போல் பேசமட்டும் முடியவில்லை.

இடைவேளை....

பளிச்சென்று மின் விளக்குகள் மின்னின. டிரிங் டிரிங் என்று சோடா புட்டிகளில் கட்டர்கள் உராயப்பட்டு ஓசை எழுந்தது. மெதுவாக எழுந்து வெளியே சென்று அவசர

அவசரமாய் வெள்ளைக் கடதாசித் துண்டும் பௌண்டன் பேனா ஒன்றையும் தேடிக் கொண்டேன். கிடைத்த துண்டில் தங்களைப் பற்றி அறிய ஆவலாய் இருக்கிறது . தயவு செய்து கீழ் காணும் விலாசத்திற்கு கடிதம் ஒன்று போட முடியுமா என்ற குறிப்புடன் என் விலாசத்தையும் எழுதிக் கொண்டு தியேட்டருக்குள் நுழைந்து முன்போல் அவளுக்கருகில் அமர்ந்து கொண்டேன். அவள் ஒரேன்ஜ் பார்லி பருகிக் கொண்டிருந்தாள் அடுத்த பக்கத்திலிருந்த பெண்ணை இப்போதுதான் தெளிவாக பார்க்கின்றேன் அவளின் அம்மாவாக இருக்க வேண்டும். ஆனால் எத்தனை அலங்காரம் பத்து பதினைந்து வயதை அது விழுங்கிக் கொண்டிருந்தது. மேக்கப் பண்ணுவதில் கொலிவூட் கூட இவர்களிடம் பிச்சை வாங்கவேண்டும்.

அவளுக்கு அப்பால் சூட்டும் கோட்டுமாய் நடுத்தர வயதான கனவான் ஒருவர் அமர்ந்திருந்தார். அவளின் தந்தையாக தெரியவில்லை. மாமாவோ சித்தப்பாவோ இருக்க வேண்டும். கோட்சூட்டுக்கு ஏற்றவாறு அவரின் பேச்சு இருக்கவில்லை. சிகரட், டொபி விற்பவனிடம் அநாவசியமாக கதையளந்து கொண்டிருந்தார்.

இடைவேளை முடிவடைந்தது கிணு கிணு வென்று மூன்றாம் மணி ஓசை எழுப்பி, ஓய்ந்தது விளக்குகள். ஒவ்வொன்றாக முற்றாக அணைந்து விட்டது.

திரைக்கதை ஆரம்பித்து ஒன்றரை மணித்தியாலங்கள் வரை ஓடியது. அந்த இடைக்காலத்துக்குள் திரைக்கதையின் போக்கிலே எத்தனை எத்தனையோ மாற்றங்கள் சூழ்ச்சிகள் சிக்கல்கள் வந்து சென்றன. காதல், கதறல், சண்டை சமாதானம் இறப்பு, பிறப்பு இன்னும் எத்தனை எத்தனையோ சரியாக ஞாபகம் இல்லை. ஆனால் நம்மிருவருக்குமிடையே நடந்த கதையின் போக்கோ முன் போலவே இருந்தது. அதே விறவிறுப்பு, அதே ஐக்கியம், அதே சிக்கல்கள் சரியாகச் சொல்லப் போனால் கடதாசித் துண்டை அவள் கையில் நான் திணித்ததையும் அதை அவள் பத்திரமாக ஜாக்கட்டுக்குள் புதைத்துக் கொண்டதையும் தவிர வேறு எந்த முக்கிய மாற்றமும் எங்கள் கதைப் போக்கில் புகுத்தப்படவில்லை. சுற்றிலுமுள்ள சென்சர் போர்ட்டார் பார்த்தால் கட் பண்ணியல்லோ விடுவார்கள். கட் பண்ணி வணக்கம் வளைந்து நெளிந்து திரையில் தெரிந்தது.

அவளை பிரிய மனமில்லாமல் பிரிந்து சென்றேன். அதற்குப் பின் மூன்று நாட்கள் கூட ஆகவில்லை. அதற்குள் அவள் கடிதம் எழுதிவிட்டாள். எத்தனை நல்ல பெண். அத்தனை அதிர்டசாலி நான். பொங்கி எழுந்து என் இதயத்தை நிரப்பிய சந்தோசம் என்னை ஓர் இடத்தில் இருக்கவிடவில்லை. தாவிச் சென்று சைக்கிளை எடுத்துக் கொண்டு எங்கெல்லாமோ சுற்ற

தொடங்கி
மணி 5
பூங்காவின்
என்னை ப
சிரிப்பு கற
திகைப்பு எ
பார்க்கி
அந்த அம்
பேசிக் கொ
சுற்றி தன்
கொண்டிரு
ஞாபகமாக
வந்திருந்த
எழுதியிருக்
கிள்ளி அ
அறைந்தா
அங்கே நிற
சைக்கிளை
இல்லை.
'எண்ண
தொடங்கி
அவனுடன்
சகோதரன
எது எப்படி
நளினியல்
கவலைப்ப
சமாதானப்
மனதை அ
நாளையாகு
ஏங்கி காத்
அடுத்த
வரைக்கும்
மத்தியான
விட்டேன்.
கண்டு கொ
அழகாகவே
தாண்டி வீ
கலகல
புறப்பட்டு
தான் இவர்
யாரும் இரு
போலும் பே
வா கண
மாலை பார்
தொடர்ச்சி
"ஆ ஐ
ஹி ஹி
ஹி ஹி
அத்துட
மரியாதை
ஆனால் ஏ
விடவில்லை
படிக்கட்டை
சத்தத்
முந்தானை
இரு புத்தர்
எட்டிப் பார்
தான் உயிர்
அந்த அம்
நேற்று
விட இன்று
ஐயை
என்னை வ
ஒரு கல
சமாளித்து
அதே நிலை
கண்களில்
வேண்டும்
தொங்கிய
தூக்கிய வ
ஏன் பயப்ப
வரவேற்க
ஹி ஹி
அவளுக்கு
படிக்கட்டை
என் கால்க
மறுத்துவிட்
சை இற
அர்த்தம் எ
கொண்டது

தொடங்கினேன்.

மணி 5.30 இருக்கும் நகரத்தின் நடுவே இருக்கும் பூங்காவின் ஊடாக மெய் மறந்து சென்று கொண்டிருந்த என்னை பக்கவாட்டில் இருந்து எழுந்த கலகல வென்ற சிரிப்பு கரண்ட் போல் இழுத்தது. திரும்பிப் பார்த்தேன் திகைப்பு என்னை சிலையாக்கியது.

பார்க்கின் மூலை ஒன்றிலிருந்த பெஞ்சில் மேல் அந்த அம்மாள் வேறு ஓர் ஆடவனுடன் கொஞ்சு மொழி பேசிக் கொண்டிருந்தாள். அவளின் இடையினை சுற்றி தன் கையை வளைத்த வண்ணம்' கதைபேசிக் கொண்டிருந்தான். அந்த ஆடவனை எங்கோ கண்ட ஞாபகமாக இருந்தது. ஆம் அன்று சினிமாவுக்கு வந்திருந்தவனே தான். தன் மாமா என்று நளினி எழுதியிருக்கிறாளே... அவனே தான். கன்னத்தைக் கிள்ளி அவன் காதல் வார்த்தைகள் பேசுவது என் காதில் அறைந்தாற்போல் விழுந்து கொண்டிருந்தது. இன்னும் அங்கே நிற்க என்னால் முடியவில்லை. வீடு நோக்கி சைக்கிளைத் திருப்பினேன் வந்த வேகத்தில் பாதி கூட இல்லை.

'எண்ண வண்டுகள் என் மூளையை குடையத் தொடங்கின மாமா என்றால் எப்படி அந்த அம்மாளுக்கு அவனுடன் காதல் ஏற்படும். அந்த அம்மாளின் சகோதரனாகவல்லவோ இருக்க வேண்டும். எது எப்படியாய் இருந்தாலும் எனக்கென்ன என் நளினியல்லவே அவன் காதலிப்பது. எனவே நான் ஏன் கவலைப்பட வேண்டும். என்று இடைக்கிடை மனதை சமாதானப்படுத்திக் கொண்டாலும் ஏதோ ஒன்று என் மனதை அரித்துக் கொண்டே இருந்தது. எப்போது நாளையாகும் அவளை போய் சந்திப்பதற்கு என்று ஏங்கி காத்திருந்தேன்.

அடுத்த நாள் இன்னும் மாலை வரவில்லை. அது வரைக்கும் என்னால் காத்திருக்க முடியவில்லை. மத்தியானம் இரண்டு மணிக்கே அவள் வீடு புறப்பட்டு விட்டேன். எப்படியோ தேடிப்பிடித்து அவளின் வீட்டைக் கண்டு கொண்டேன் சிறிய வீடுதான். ஆனால் அழகாகவே வெளிப்புறம் காட்சியளித்தது. கேட்டைத் தாண்டி வீட்டு வாசலை நோக்கி நடைபோட்டேன்.

கலகல வென்ற சிரிப்பொலி வீட்டுக்குள்ளிருந்து புறப்பட்டு கம்பவுண்டைத் தாண்டி பரவியது. சிரிப்பது தான் இவர்களுக்கு ஒரு கலையோ. முன் வாசலில் யாரும் இருக்கவில்லை. எல்லோரும் நடு கோலில் போலும் பேச்சு மட்டும் தெளிவாக கேட்டது.

வா கண்ணே கிட்ட சும்மா தாஜா பண்ணாம. நேற்று மாலை பார்க்கில் கேட்ட குரல் அந்தக் காதல் காட்சியின் தொடர்ச்சி போலும்..

"ஆ ஐயோ சும்மா இருங்களேன்
ஹி ஹி ஹி
ஹி ஹிக்"

அத்துடன் நான் அவர்களை குழப்பாமல் மரியாதையாக திரும்பி சென்றிருக்க வேண்டும். ஆனால் ஏதோ ஒன்று என்னை அப்படி செய்ய விடவில்லை தொண்டையைக் கனைத்துக் கொண்டு படிக்கட்டைத் தாண்டி வீட்டுக்குள் நுழைந்தேன்.

சத்தத்தைக் கேட்டோ என்னவோ பரபரப்போடு முந்தானைச் சேலை நிலத்தில் விழுந்து புரண்டு தவழ இரு புத்தர் கோயில்கள் பாதி திறந்த ஜக்கெட்டினூடாக எட்டிப் பார்த்துக் கொண்டிருக்க ஏதோ வீனஸ்சிலையே தான் உயிர் பெற்று வந்துவிட்டதோ என்று ஏங்கும் படி அந்த அம்மாள் வாசலை நோக்கி ஓடி வந்தாள்.

நேற்று மாலை பார்க்கில் பார்க்கும் போது இருந்ததை விட இன்று எத்தனை மினுமினுப்பு இளமைப் பொலிவு.

ஐயையோ அவள் அந்த அம்மாள் அல்லவே என்னை வரச் சொன்ன நளினியல்லவோ.

ஒரு கணம் என் தலை சுற்றியது நிலமையை சமாளித்துக் கொண்டு அவளை திரும்பவும் பார்த்தேன். அதே நிலை கலைந்த ஆடை குலைந்த கொண்டை கண்களில் மட்டும் புதிய போதை ஆடையை சரிபடுத்த வேண்டும் என்ற அக்கறையே இல்லை மாறாக தொங்கிய தாவணியை நளினமாகக் கையில் தூக்கிய வண்ணம் மிஸ்டர் மூர்த்தி வாருங்கள் உள்ளே. ஏன் பயப்படுகிறீர்கள் என்று போதாதற்கு என்னை வரவேற்கவும் செய்தாள்.

ஹி ஹி ஹி வாருங்கள் என்று சுருதி கூட்டினார் அவளுக்கு பின்னால் வந்த அந்த மாமா. ஆனால் படிக்கட்டை விட்டிறங்கிச் சென்று கொண்டிருந்த என் கால்கள் ஏனோ அவற்றைப் புரிந்து கொள்ள மறுத்துவிட்டன.

சை இந்த மாமா என்ற வார்த்தைக்குதான் எத்தனை அர்த்தம் என்று என் இதயம் மட்டும் முணுமுணுத்துக் கொண்டது.



# ஊடுருவி உலகநாதன்

இளைஞர்கள் காட்டுமிராண்டிகளாகச் செயற்படுவதைக் கண்டும் காணாமல் இருக்க முடியாது. அவர்களின் வயது அப்படி என்று சொல்லிவிட்டு போகமுடியாது. வயது முதிர்ந்தவர்கள் என்றுகூடப் பார்க்காமல் அவர்கள் மீது படுமோசமான தாக்குதலை மேற்கொள்ளும் இளைஞர்கள் நிதானம் இழந்து காணப்படுகிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. நிதானம் இழப்பது என்பது மதுபோதை அல்லது போதைப் பொருளுக்கு அடிமையாக இருந்தால் மட்டுமே அது சாத்தியமாகும். அல்லது மனநோயாளியாக இருக்க வேண்டும்.

எது எப்படியோ இளைஞர்களை கட்டுப்படுத்துவதில் பொலிஸ் தரப்பு தோல்வி கண்டிருக்கின்றனர் என்றே சொல்ல வேண்டும். குற்றத்தில் ஈடுபடும் இளைஞர்கள் தண்டனையில் இருந்து தப்பிப்பது என்பது இளைஞர்களை மேலும் குற்றங்களில் ஈடுபடுவதற்கு உந்துசக்தியாக அமைந்து விடுகிறது என்பது உண்மை.

"வாள் வெட்டுக்காரர்களை கட்டுப்படுத்த ஏன் பொலிஸால் முடியவில்லை என்று ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு காட்டாச்சியா நடத்துவது என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் ஒரு ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார். அதாவது கடும்போக்கு மக்களை காயப்படுத்தும் என்பதும் சரிதான். ஆனால் இப்படியே பார்த்துக் கொண்டும் இருக்க முடியாது. பிரச்சினையை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். அப்பொழுது தான் பாரிய பிரச்சினையை இல்லாமல் செய்ய முடியும். சின்னப் பிரச்சினை என்று அதனை கைவிட்டால் அந்தப் பிரச்சினை காலப் போக்கில் பெரிய பிரச்சினையாக வந்து நிற்கும்.

கடந்த மாதம் 15 ஆம் திகதி யாழில் ஒரு சம்பவம் இடம்பெற்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதாவது இளைஞர் ஒருவர் பக்கத்து வீட்டில் இருந்த முதியவர்களை தாக்கியும் வீட்டுப் பொருள்களை சேதப்படுத்தும் காட்சி வீட்டில் பொருத்தியிருந்த சி.சி.ரி. கண்காணிப்பு கமெரா மூலம் வெளியே வந்துள்ளது. தாக்குதலுக்கு உள்ளானவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து எதுவித பலனும் கிடைக்காத நிலையில் மனித உரிமை ஆணையகத்தில் கடந்த 30 ஆம் திகதி முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்துள்ளனர்.

குடும்பத்தில் தந்தையும் தாயும் இரு பிள்ளைகள் (அண்ணன், தங்கை) அந்த வீட்டில் வசித்து வந்தனர். சம்பவம் இடம்பெற்ற அன்றைய தினம் இரு பிள்ளைகளும் வீட்டில் இருக்கவில்லை. முதியவர்களான தந்தையும் தாயும் தான் வீட்டில் இருந்துள்ளனர். பிள்ளைகள் வீட்டில் இல்லாத விடயம் அறிந்து தான் குறித்த இளைஞர் வீட்டுக்குள் இறங்கியுள்ளான். அதாவது பூட்டி இருந்த கேற்றினில் ஏறி வீட்டுக்குள் நுழைந்துள்ளான். அந்த இளைஞன் கேற்றில் ஏறும் போது அவனது தாய் அவனை தடுக்க முற்படும் போது தாய்க்கும் அடித்துவிட்டு வீட்டுக்குள் இறங்குகிறான்.

வீட்டில் இருந்த முதியவர்கள் என்று கூடப் பார்க்காமல் குண்டாந்தடியால் அடித்து கீழே விழுத்துகிறான். அங்கிருந்த வீட்டுத் தளபாடங்களை அடித்து நொருக்குகிறான். அவன் செய்யும் செயலைப் பார்த்தால் தன்னிலை மறந்து இருப்பது தெரிகிறது. ஒரு வெறிபிடித்தவன் போல் செயற்படுகிறான். இவனுக்கும் தங்களுக்கும் எந்தப் பிரச்சினையுமில்லை என்று தாக்குதலுக்கு இலக்கான முதியவர்கள் தெரிவித்துள்ளனர். சி.சி.ரி கமெரா பூட்டி இருப்பது இந்த இளைஞனுக்கு பிடிக்கவில்லை என்ற ஒரு காரணத்தையும் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான முதியவர்களை யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். பிள்ளைகள். ஆனாலும் அவன் கோபம் அடங்கவில்லை அன்று இரவு வீட்டில் நின்ற மோட்டார் சைக்கிளை எரித்துள்ளான். மறுநாள் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்ததாகப் பாதித்துள்ள குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். ஆனாலும் எந்தவித சட்டநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்தத் தாக்குதல் சம்பவம் அந்தக் குடும்பத்தை வீட்டில் இருந்து வெளியேற்றிவிட்டது. இப்பொழுது அந்த வீடு பூட்டிக்காணப்படுகிறது. அந்த வீட்டுக்கு செல்வதற்கு அச்சப்படுகின்றனர். தமது வீட்டிலேயே இருக்க முடியாத அளவுக்கு அச்ச உணர்வு அந்த வீட்டுக்காரருக்கு எழுந்துள்ளது என்றால் அந்த இளைஞன் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன் ? என்ற கேள்வியும் எழுகிறது.

இன்று இரு வாரங்கள் கடந்த நிலையில் மனித உரிமை ஆணையகத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துவிட்டு யாழ்.ஊடக அமையத்தில் ஒரு ஊடக சந்திப்பு ஒன்றையும் மேற்கொண்டுள்ளனர். இந்த சந்திப்பில் தமது வீட்டிற்கு செல்வதற்கு தாம் அச்சப்படுவதாக அம்மாவும் மகளும் மகனும் தெரிவித்துள்ளனர்.

சட்டம் தூங்குகிறதா? என்ற கேள்வி எழுகிறது. ஒரு குடும்பம் தமது சொந்த வீட்டுக்கு போக முடியாமல் இருக்கும் போது அந்தக் குடும்பத்துக்கு பாதுகாப்பை பொலிஸார் வழங்க வேண்டும். இதைவிட்டு விட்டு சமாதானமாகப் போகு மாறு அறிவுரை கூறி கைது செய்த சம்பந்தப்பட்ட இளை ஞனை விடுதலை செய்வது எந்தவிதத்தில் நியாயமாகும்.

பாதுகாப்பு தேடியவர்களுக்கு கையை விரித்த பொலிஸ் என்று சொல்லவா அல்லது ஒரு பக்கச்சார்பாக செயற்பட்டதாகச் சொல்வதா என்று தான் தெரியாமல் உள்ளது. மக்கள் தமக்குப் பிரச்சினை என்றால் முதலில் பொலிஸ் நிலையத்துக்குத் தான் ஓடி வருவார்கள். அந்த மக்களின் பிரச்சினை தொடர்பில் ஆக்கபூர்வமான செயற்பாட்டை எடுக்காமல் விட முடியாது. அதற்காகத் தான் பொலிஸாருக்கு அரசு சம்பளத்தை வழங்குகிறது.

வலியும் வேதனையும் உணர்ந்தவனுக்குத்தான் தெரியும். அந்த வலியில் இருந்து ஒரு நியாயம் பிறப்பின் மீண்டும் ஒரு வலி ஏற்பட இடம்கிடைக்காமல் போய்விடும். இந்த சம்பவம் ஒரு முடிவுக்கு வரவில்லை என்பது அந்தக் குடும்பம் வீட்டைவிட்டு வெளியேறியதில் இருந்து தெரிகிறது.

இந்தக் குடும்பத்துக்கு பாதுகாப்பை பொலிஸார் வழங்கவேண்டும். அவர்கள் தமது சொந்தவீட்டில் மறுபடியும் சுதந்திரமாக வாழவேண்டும். அப்பொழுது தான் அந்த ஊர் மக்கள் நிம்மதியாக வாழ்வார்கள். நாளை தமது வீட்டுக்குள்ளும் ஒருவர் அத்துமீறி தாக்குதல் நடத்தமாட்டார் என்று எப்படி நம்பிக்கையாக சொல்ல முடியும்?

இன்று யாழ்ப்பாணத்தில் பல தீயசெயற்பாடுகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம் சந்தேக நபர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள். கையும் களவுமாக பிடிபட்ட ஒருவருக்கு தண்டனை இல்லை என்றால் சந்தேக நபர்களை பொலிஸ்காரர்களால் எப்படி இனங்காண முடியும். இந்தக் குடும்பத்தின் பிரச்சினை தொடர்பில் ஆக்கபூர்வமான செயற்பாடு நடந்திருந்தால் கண்டிப்பாக நம்பமுடியும்.

ஆதாரத்துடன் அதாவது நடந்த சம்பவம் தொடர்பில் சி.சி. ரி கமெராவில் பதிவாகியுள்ளது. தெளிவாகத் தெரிகிறது. இதைவிட ஆதாரம் எதற்கு. ஆதாரம் இருந்தும் இந்தப் பிரச்சினை தொடர்பில் கண்டுகொள்ளாமல் விடமுடியுமா? ஆதாரம் இருக்கும் போது பொலிஸ் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட பிரச்சினைகளை சின்னப்பிரச்சினையாக எடுக்காமல் முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும். பொலிஸ் நிலையம் தேடி வரும் மக்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய பொறுப்பு பொலிஸ்காரர்களுக்கு இருக்கிறது. இந்தக் குடும்பத்தை தமது சொந்தவீட்டில் வாழ வழிசமைத்துக்குக் கொடுக்க வேண்டும். சட்டம் தன்வேலையைச் செய்ய வேண்டும். அதற்கு பொலிஸார் வழிகோல வேண்டும்.

# உண்மையைத் தேடுகிறோம்... நடந்தது என்ன?

## யாழ்.பல்கலைக்கழகம் பற்றியது

எம்.அனுசரண்

நான் முன்னர் 25.08.2019 ஆம் திகதிய தீபம் கட்டுரையில் சந்தேகித்தவாறு பேராசிரியர் விக்னேஸ்வரன் உச்சநீதிமன்றத்தில் தனது துணைவேந்தர் பதவி நீக்கத்துக்கெதிராகத் தொடுத்த வழக்கிலிருந்து சுலபமாக வெளிவருவதற்கான வழியைத்தான் பல்கலைக்கழக ஆணைக்குழு கையாண்டுள்ளதாகப் பல்கலைக்கழக வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகிறது.

பேராசிரியர் விக்கினேஸ்வரன் அவர்களின் நீக்கத்துக்கு அவரது அசமந்தப் போக்கே காரணம் என்றும் சொல்லப் படுகிறது. அதற்குப் பின்வரும் விடயம், மிகவும் சிறந்த உதாரணமாகும். 1956 ஆம் ஆண்டு பிறந்த வயோதிப மாணவரொருவர் யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் பயின்று வந்தார்.1990 களின் முற்பகுதியில் றாகம மருத்துவ பீடத்தில் தனது கல்வியை ஆரம்பித்த அவர், பின்னர் யாழ். மருத்துவபீடத்துக்கு இடமாற்றம் பெற்றார். அவருக்குப் பல்கலைக் கழகப் பரீட்சை நெறிமுறைகளுக்கு அப்பால் பல விசேட சந்தர்பங்கள் வழங்கியும் அவரால் 4ஆம் வருடப் பரீட்சையில் சித்தியெய்த முடியவில்லை. அவர் இனிப் பரீட்சை எழுத முடியாதென மூதவையால் தீர்மானிக்கப்பட்டு அவரின் மாணவர் பதிவும் இரத்துச் செய்யப்பட்ட பின்னர்துணை வேந்தர் நிதியிலிருந்து மாதம் ரூபா.4000 வீதம் கொடுப்பனவு வழங்கப் பேராசிரியர் விக்கினேஸ்வரன் உத்தரவிட்டு இருந்தார். ஏன் இவ்வாறு அவர் நடந்து கொண்டார் என்பது மர்மமாகவே உள்ளது. ஹிப்னாட்டிஷக் கலையில் கை தேர்ந்த அந்த முன்னாள் மாணவன் துணைவேந்தரைத் தூக்கத்திலாழ்த்திக் காரியத்தைச் சாதித்துக் கொண்டாரா? அல்லது இவ்விடயத்தில் கைமாறு பெறப்பட்டதா என்றும் சந்தேகிக்க இடமுண்டு. கீழ் நிலை அதிகாரிகள் இந்த உத்தரவைச் செயற்படுத்தத் தயக்கம் காட்டியதால் துணைவேந்தரின் பதவி நீக்கம் வரை இந்த உத்தரவு அமுலாக்கப்படவில்லை.

ப.மா.ஆ தலைவர் உச்சநீதிமன்றத்துக்கு வழங்கியுள்ள சத்திய பிரமாணங்களில் துணைவேந்தர் நீக்கப்பட்டதற்கான காரணம் விசாரணை ஏதும் நடாத்தப்படாமை அவர் காலத்தில் பல்கலைக் கழகத்தின் இடம்பெற்ற அதிகார துஸ்பிரயோகம் நிர்வாகச் சீர்கேடுகள் பற்றியேனும் விலாவாரியாகக் கூறாமல் தேசிய பாதுகாப்புக் காரணங்களையே கூறியுள்ளதாகக் குற்றஞ் சாட்டப்படுகிறது.இது உண்மையாகவும் இருக்கக்கூடும்

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவும் உயர் கல்வி அமைச்சும் பேராசிரியர் விக்னேஸ்வரன் பற்றிய பல புகார்களை யாழ்ப்பாணத்திலிருந்து பெற்றிருந்த போதிலும் கொழும்பில் நடைபெற்ற அமைச்சின் கூட்டங்களிலும் தூங்கி வழிந்து கொண்டிருக்கும் ஒருவரை மற்றும் பல்கலைக் கழகம் பற்றிய புள்ளி விபரங்கள் தகவல்கள் தரவுகளை அக்கூட்டங்களில் வழங்க முடியாதிருந்த அசமந்தப் போக்குடைய ஒரு நபரைக் கழற்றிவிடுவதற்கு (யாழ்ப்பாணம் பல்கலைக் கழக நோக்கு நிலையிலிருந்து வலுவான காரணங்களை முன் வைக்காமல் ) ப.மா.ஆ குறுக்கு வழியைக் கையாண்டுள்ளது போல் தெரிகிறது

பல்கலைக் கழகத்தின் ஓய்வு பெற்ற கல்விமானும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமாகிய கலாநிதி ராஜன் ஹூல் வேறு சில பல்கலைக் கழக விரிவுரையாளர்களுடன் இணைந்து ஆங்கில இணையத் தளமொன்றில் ப.மா.ஆ குழு மற்றும் உயர் கல்வி அமைச்சின் நடவடிக்கைகள் குறித்துத் தனது அதிருப்தியை வெளிக்காட்டியிருக்கிறார்

ஆனால், இதில் வேதனை என்னவென்றால் கலாநிதி ராஜன் பேராசிரியர் விக்கினேஸ்வரன் நியமித்த சட்டத்தரணி போல் வாதாட முற்பட்டுள்ளமையேயாகும் மிகஅண்மைக்காலாமாக கலாநிதிராஜன் விஞ்ஞான பீடத்தின் சபையின் வெளிவாரி உறுப்பினராக இருந்தவர். அதன் கூட்டமொன்றின் போது இவர் பேராசிரியர் விக்னேஸ்வரன் அவர்களை மூன்றாம்தர நபர் என வர்ணித்ததாகக் கூறப்படுகிறது. ஆழமான அதே தருணம் வெளித்தோற்றத்திற்கு அமைதியான ராஜன் அச்சந்தர்ப்பத்தில் வெகுண்டெழுந்ததை அச் சபையில் இருந்த பலரும் அவதானித்திருந்தனர்

பேராசிரியர் விக்னேஸ்வரனை துணை வேந்தர் கதிரையிலமர்த்த விஞ்ஞானபீட ஆசிரியர் சங்கத்தின் முக்கிய பங்காளிகள் பலர் பல முயற்சிகளை மேற்கொண்டமை வெளிப்படையானது

அச்சங்கத்தின் ஆலோசகராக இருந்த கலாநிதி ராஜன் பின்னாளில் பேராசிரியர் விக்னேஸ்வரனின் அதிகார




மதையுடன் கூடிய செயற்பாட்டால் அதிருப்தியுற்றதாகப் பரவலாக நம்பப்பட்டது. விக்னேஸ்வரன் காலத்தில் இடம் பெற்ற சில பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நியமனங்களில் முறைகேடுகள் இருப்பதாகக் குற்றஞ்சாட்டியவர்களுள் முக்கியமானவர் முகாமைத்துவ பீட விரிவுரையாளர் தெரிவு ஒன்றில் புறக்கணிக்கப்பட்ட மாணவி ஒருவர் தொடர்ந்த வழக்கில் அவருக்கான சட்டத்தரணியை ஏற்பாடு செய்வதிலும் ராஜன் முக்கிய பங்கு வகித்தார்

தமிழ் தேசியவாதச் செயற்பாட்டாளர்களை ஆதரிக்கும் சிலருக்கு ராஜனின் கடந்த கால வாழ்க்கை பற்றி மிகுந்த அனுதாபம் உண்டு. 'முறிந்த பனைமரம்' வெளியீட்டுக்குபின் அவர் நீண்ட கால அஞ்ஞாதவாசம் செய்ய நேரிட்டது. பல இடர்பாடுகளுக்குப் பின் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளராக மீள் நியமனம் பெற்றபோதும் அவர் பதவி உயர்வுக்கான பல சந்தர்பங்களை இழந்திருந்தார். இறுதிவரை சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் எட்டாமலேயே ஓய்வு பெற்றார். ராஜனின் கல்விப் பின்னணியும் அவர் சார்ந்த மத நிறுவனத்தின் பின்னணியும் அவருக்குச் சிறந்த ஆங்கிலப் புலமையை அளித்துள்ளது.இன்று செயலிழந்து செல்வாக்கிழந்து போயுள்ள விஞ்ஞானபீட ஆசிரிய சங்கத்தைத் தன்னுடைய கட்டுரைகளாலும் அவர்களுக்காக எழுதிய மனுக்களாலும் தான் ஓய்வுவரை தூக்கி நிமிர்த்தி இருந்தார்

அவருடன் ஒப்பிடும் போது அச்சங்கத்தின் செயற் பாட்டாளர்கள் எனக் கூறித் திரியும் பலர் செல்லாக்காசுகளே ஆவார். அவர்களில் சிலர் மது போதையில் உளறுவதைப் போதைதெளிந்தவுடன் மறந்துவிடுவர்.

ஆனால் அவருக்குள்ள புலிக்காய்ச்சல் மாறாத ஒரு அம்சமாக அவரிடம் குடிகொண்டுள்ளது. பாதிப்புக்குள்ளாகி நீண்ட காலம் அஞ்ஞாதவாசம் செய்த ஒருவருக்கு வெளிப்படையாக உரத்து வெளியிட்டுத் தன்னை ஆற்றுப்படுத்தாமல், மென்மையாகச் செயற்படும் ஒருவருக்கு அவருடைய கடந்தகால அனுபவங்கள் மாறாத உளவடுவாகப் பாதித்திருப்பது இயல்பானதேயாகும்.

பேராசிரியர் விக்கினேஸ்வரன் அவர்களுக்காக வாதாட முற்படுகையில் ப.மா.ஆ அந்த வழக்கைக் கையாண்டவிதத்தைப் பற்றிக் குறை கூறுவதுடன் மட்டும் நிறுத்திவிடாமல் தமிழ் தேசியம் சார்ந்த பல்கலைக்கழகச் செயற்பாடுகளில் விக்னேஸ்வரனின் போக்கை நியாயப்படுத்துபவராக ராஜன் மாறிப் போனதுதான் அதிசயமாகும். தீபம் 18.08.2019 இதழில் விக்னேஸ்வரனின் போலித் தேசிய முகத்தை வெளிக் கொணரவல்ல புலிகள் வன்னியிலிருந்த காலத்தில் 17.01.2001 முதலாவது பொங்கு தமிழ் நிகழ்வு நடைபெற்றது. பின்னர் சமாதான உடன்படிக்கையின் பின்னர் 2002 புலிகள் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் பொங்கு தமிழ் நிகழ்வுகள் இடம்பெற்றபோது கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கடமையிலிருந்த விக்னேஸ்வரன் கிழ்க்குப் பல்கலைக்கழக ஆசிரிய சங்கத் தலைவராக இந் நிகழ்வுகளில் கலந்துகொண்டார். பின்னர் கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் இந்நிகழ்வுகள் இடம்பெற்றன இதே விக்னேஸ்வரன் பேராசிரியை வசந்தி அரசரட்ணம் இரண்டாம் பதவிக் காலத்துக்குப் போட்டியிட்ட போது தான் துணை வேந்தராவதற்காக அண்மையில் காலம் சென்ற பேராசிரியர் கார்லோ பொன்சேகா மூலம் டக்ளசை அணுகினார். பேராசிரியர் கார்லோ பென்சேகா சந்திரிகா அம்மையாரின் உறவினர். ஆனால் அக்காலத்தில் பெரும் செல்வாக்குடன் இருந்த அமைச்சர் டக்ளஸ் இவரைச் சிபாரிசு செய்ய மறுத்துவிட்டார்

ஆனால் ராஜன் ஹூல் கொழும்பு இணையத்தளமொன்றில் எழுதிய கட்டுரையில் விக்னேஸ்வரனின் புலிகள் சார்ந்த செயற்பாடுகள் மறுதலிப்பதுடன் தான் இதுவரை சாடி வந்த தமிழ் தேசியம் சார்ந்த பல்கலைக்கழகச் சமூகத்தின் செயற்பாடுகளைத்தானே நியாயப்படுத்தி அதன் மூலம் அச் செயற்பாடுகளில் விக்னேஸ்வரன் கலந்துகொண்டமை நியாயமே என நிறுவ முயலுகிறார்.

பேராசிரியர் சிறிசற்குணராசா 2017 ஆம் ஆண்டு துணைவேந்தர் தேர்தலில் கணிசமான வாக்கு வித்தியாசத்தில் முதலாவதாகத் தெரிவானார். ஆனால் ராஜன் ஹூல் உள்ளிட்ட சில விஞ்ஞானபீட விரிவுரையாளர்களுக்கு அவரை அறவே பிடிக்காது. பல வழிகளாலும் முயன்று இரண்டாவதாக வந்த விக்னேஸ்வரனைத் துணைவேந்தராக்குவதில் வெற்றி கண்டார். துணை வேந்தரானவுடன் ரோராசிரியர் விக்னேஸ்வரன் பத்திரிகையாளருக்கு வழங்கிய பேட்டியொன்றில் ஒன்றில் முதலாவதாக வந்தவர் தெரிவு செய்யப்படாமைக்கு அவர் மீதான ராணுவ புலனாய்வு அறிக்கைகளே காரணமென்றரீதியில் கருத்துத் தெரிவித்தார். அப்போது கலாநிதி ராஜன் ஹூல் ராணுவ புலனாய்வு அறிக்கைகளால் பல்கலைக்கழக துணைவேந்தர் பதவி தீர்மானிக்கப்படுவதைப் பற்றி ஏன் எதுவும் பேசவில்லை

பேராசிரியர் சிறி சற்குணராஜா அவர்கள் புலனாய்வு அறிக்கையின் பிரகாரமே தணை வேந்தராக நியமிக்கப்படவில்லை என்று துணை வேந்தராகப் பதவியேற்றவுடன் பேராசிரியர் விக்கினேஸ்வரன் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருந்ததை நியாயப்படுத்தி விஞ்ஞான ஆசரிய சங்கமும் அறிக்கை விட்டிருந்ததையும் எல்லோரும் விரைவாக மறந்துவிட்டனர்.

இக்கட்டுரையாளர் கலாநிதி ராஜன் ஹூல் அவர்களை மட்டம் தட்டுவதற்காக இவற்றை இங்கு கூறவில்லை. ராஜன் ஹூல் அவர்கள் அதிகம் உபயோகிக்கும் ஆங்கிலத்தில் "you too Brutus" எனக் கேட்கவே தோன்றுகிறது. பலரும் பலசந்தர்பங்களில் உபயோகப்படுத்தும் பெரியவர் எஸ்.ஜே.வி செல்வநாயகத்தின் வார்த்தைகளைச் சற்று மாற்றி பாவிப்பதற்கு மன்னிக்க வேண்டும் இனி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்

ஓய்வு பெற்றுள்ள ராஜன் ஹூலிடம் சிறந்த ஆற்றல் உள்ளது. நீண்டகாலமாக ரஜனி திரணகம அவர்களின் மரணத்தின் பின் ஏறத்தாழத் தனித்துவிடப்பட்ட ராஜன் தன்னுடைய ஒத்த கருத்துள்ளவர்களைப் பேராசிரியர் விக்னேஸ்வரன் காலத்தில் விரிவுரையாளராக நியமிக்கத் துணைநின்றதாகவும் அவர்கள் நியமனம் மீது தொடரப்பட்டுள்ள வழக்கிலிருந்து அவர்களை விடுவிக்கவே வேறு வழியின்றித் தடுமாற்றமாக எழுதியுள்ளதாவும் சில கல்வி யாளர்கள் கூறுகின்றனர். பேராசிரியர் சிறி சற்குணராசா மீதான அவரின் கோபம் பல ஆண்டுகள் பழமை வாய்ந்ததெனக் கூறப்படுகிறது

பேராசிரியர் சிறியும் தன்னுடைய சில நடவடிக்கைகளாலும் அவசரத்தில் ஆற்றி உரைகளாலும் தன்னுடைய பெயரைத் தானே கெடுக்கும் காரியங்களை ஆற்றி வருகிறார். ஆனால் கல்வியாளர்கள் எனப்படுவோர் கோபத்தாலும் ஆத்திரத்தாலும் அறிவிழந்து விடாமல் ஒவ்வொரு விடயத்தையும் சீர் தூக்கிப் பார்த்து ஆய்வு செய்ய வேண்டியவர்களல்லவா இவ்வாறு செய்வார்கள் என நம்பித்தானே இலட்சக் கணக்கான ரூபாய்கள் மாதச் சம்பளமாக அவர்களுக்கு வழங்கப்படுகிறது

போராசிரியர் விக்கினேஸ்வரன் அவர்கள் துணை வேந்தர் பதவி நீக்கம் தவறானது என உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. அதே தருணத்தில் 19.09.2019 அன்று கொழும்பிலுள்ள அழகியற் கற்கை நெறிக்கான (University of Visual and Performng Arts) பல்கலைக் கழகத் துணைவேந்தரான பேராசிரியர் சரத் சந்திர ஜீவா அவர்களும் பதவி நீக்கம் செய்யப்பட்டுவிட்டார். அதற்கும் தகுந்த காரணம் எதுவும் வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

# பிள்ளை சுமத்தல் என்னும் பேரனுபவம்: ச.விசயலட்சுமியின் உயிர்ப்பு

கதை, கவிதை என்ற இரண்டைத் தாண்டி வேறெதுவும் தமிழுக்குத் தேவையில்லை என நினைக்கும் தமிழ் இலக்கியவாதிகளால் நிரம்பி வழிகிறது சமகாலத்தமிழ் இலக்கியம். அவர்களில் பெரும்பாலோர் பாராட்டு விரும்பிகள். அவர்கள் எழுதும் கதை, அல்லது கவிதைகளில் பாராட்டுவதற்கு ஏதாவது இருந்தால் அதை மட்டும் பிடித்துக் கொண்டு நல்லவிதமாய்ப் பேசும் பேச்சாளர்களைக் கொண்டு நூல்வெளியீட்டு விழாக்களை நடத்துவதோடு இலக்கியப்பணி முடிந்துவிடுவதாக நினைப்பது அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. அவ்விழாக்களையும் புத்தகச் சந்தைகளை ஒட்டி நடத்தினால் புத்தக விற்பனைக்கு உதவும் என்ற பார்வை பதிப்பகங்களுக்கும் இருக்கிறது.

நூல் வெளியீட்டு விழாக்களையும் விருது வழங்கும் விழாக்களையும் தாண்டி நடக்கும் விமரிசனப் பார்வையை முன்வைக்கும் அரங்க நிகழ்வுகளைக் காண முடியவில்லை. எதையும் பொத்தாம் பொதுவான தோற்றக்காரணிகளை நிறுவிய பிறகு அதனால் அறியப்பட்ட ஒருவர் தனது வட்டார எழுத்தாளர் என்ற அடையாளத்தைத் துறக்க நினைக்கிறார். இதேபோல் தான் மார்க்சிய எழுத்தாளர், தனக்குப் பொதுப் பரப்பில் - பொது அடையாளம் வேண்டுமென நகரப்பார்க்கிறார். இந்த நகர்வில் பளிச்செனத் தெரிவது தலித் எழுத்தாளர்களின் நகர்வும் பெண்ணெழுத்தாளர்களின் நகர்வும் என்பதைச் சுட்டிக்காட்டத்தான் வேண்டும். என்னைப் பெண் எழுத்தாளரென அடையாளப்படுத்துவதை விரும்பவில்லை என முந்திய தலைமுறைப் பெண்களான வாசந்தி, சிவசங்கரி தொடங்கி அம்பைவரை பேட்டிகளில் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் என்னைத் தலித் எழுத்தாளர் எனச் சொல்வதை ஏற்க முடியாது எனப் பூமணி, சோ.தர்மன் தொடங்கி இமையம் வரை பேசியிருக்கிறார்கள்.

கலை, இலக்கியப் பனுவல்களின் உருவாக்கம் பொதுநிலையில் மட்டுமே நிகழ்வதில்லை. பொதுநிலைப்

## எழுதும் பெண்களும் எழுதப்படும் பெண்களும் - 17



விசயலட்சுமி

இலக்கியப்பார்வைகளால் பேசும் - நயம்பாராட்டும் மேடைகளால் எதுவும் நிகழ்ந்துவிடப் போவதில்லை. பொத்தாம் பொதுவாகப் பேசும் மனோபாவம் குறிப்பான பார்வைகளை முன்வைக்கும் கோட்பாட்டுப் பார்வைகளை ஏற்பதில்லை.

இலக்கியம் என்றால் இலக்கியம்தான் அதற்குள் எதற்கு தலித் இலக்கியம்? பெண் இலக்கியம்? என்ற குரல்களை எழுப்புவதின் நோக்கம் திரும்பத் திரும்பக் கேள்விக்குட்படுத்த வேண்டிய ஒன்று. மனிதர்கள் என்றால் மனிதர்கள்தான் அவர்களுக்குள் வேறுபாடுகள் இல்லை என்பதை ஒத்துக்கொள்ள முடியுமா? அதுபோலத்தான் இலக்கியம் என்னும் பொதுவுக்குள் சிறப்பு அடையாளங்களோடு புதுவகை இலக்கியங்கள் தோன்றுகின்றன. அப்படித் தோன்றுவது காலத்தின் தேவை. சமூக வளர்ச்சியின் போக்கில் புதிதாக உருவாகும் சமூகக் குழு தனது இருப்பை - அடையாளத்தை முன்வைக்க விரும்பும் நகர்வின் வெளிப்பாடு.

பொது இலக்கியப் பரப்பிற்குள் புதிதாக உருவாகும் இலக்கியப்பார்வையின் - கோட்பாட்டின் வழியாக அடையாளப்படுத்தப்பட்டுப் பொதுப்பரப்பிற்குள் வந்தவர்களே பின்னர் அந்த அடையாளத்தை உதற விரும்புகிறார்கள் என்பதும் நாம் பார்ப்பதுதான். ஒருவகையில் நகைமுரண்தான் அது. வட்டார இலக்கியம் என்ற ஒன்றை அடையாளப்படுத்தி, அதன் பரப்பைப் பேசிவிட்டுப் போகும் பிரதி கவனிக்கப்படுவதுமில்லை. குறிப்பான நிகழ்வுகளைக் கண்டறிந்து, அந்நிகழ்வில் குறிப்பான மனிதர்கள்/பாத்திரங்கள் என்ன வினையாற்றினார்கள் எனச் சொல்வதிலிருந்தே உருவாகிறது தீவிரமான இலக்கியப் பனுவல் உருவாகிறது. பொதுநிலைப் பார்வையிலிருந்து தனித்த பாத்திரங்களை உருவாக்குவதற்குத் தேவை அனுபவங்கள் என்பதைப் பலரும் ஒத்துக்கொள்கின்றனர். முழுமையும் அறிந்திராத ஒரு வெளியையும் காலத்தையும் கற்பனை செய்துவிடலாம். ஆனால்

**அ.ராமசாமி**

அந்தக் கற்பனை வெளிக்குள்ளும் காலத்திற்குள்ளும் மனிதப் பொது அனுபவங்களையும் சிறப்பு அனுபவங்களையும் எழுதுவதில் தான் எழுத்தின் தீவிரம் கூடுகிறது. ஓர் ஆண் பெண்ணாக மாறிப் பொதுநிலை அனுபவங்களை எழுதிவிடமுடியும் என்றாலும் பெண்களுக்கே உரிய தனித்த அனுபவங்கள் உள்ளன. அவற்றை எழுதுவதில் ஆண்களைவிடவும் பெண்களே சிறப்பாகவும் நம்பும்படியும் சொல்ல முடியும் எனப் பெண்ணெழுத்தின் தேவையை வலியுறுத்துபவர்கள் சொல்கிறார்கள். இந்தக் கூற்றில் உண்மை இருப்பதாகவே தோன்றுகிறது. (தொடரும்)

# பார்த்தேன் ரசித்தேன்

## பழிவாங்கலும் தீர்த்துக் கட்டலும்




யாழ்ப்பாணத்தவர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு, தொலைக்காட்சி தொடர் நாடகங்களை பார்க்கும் மோகம் அண்மைக் காலங்களில் அதிகரித்திருக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை. இந்த நாடகங்களில் வில்லிகள் வந்துபோவதும், பழிவாங்கல்கள் நடப்பதும், சர்வசாதாரணமாக ஒருவரைத் தீர்த்துக் கட்டுவதில்,வில்லிகள் முனைப்பாக இருப்பதும் வன்முறைகளின் விளைச்சல் நிலமோ இந்தத் தொலைக்காட்சித் தொடர்கள் என்று கேட்கத் தோன்றுகின்றது.


இந்தத் தமிழ் தொடர் நாடகங்களைப் பார்ப்பதிலுள்ள, பேரார்வம், வேகம் ஏன் ஏனைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதில் நம்மவர்க்கு இருப்பதில்லை என்றும் கேட்கத் தோன்றுகின்றது. குடும்ப உறவுகளின் விரிசல்ளையும்,சமூகச் சீர்கேடுகளையும், வன்முறைக்கலாச்சாரத்தையும் வெளிச்சம் போட்டுக் காண்பிக்கும் இந்த நாடகங்களை , வருடக்கணக்காக தொடர்ந்து பார்ப்பதிலுள்ள விருப்பம், ஏன் வேறு பயனுள்ள நிகழ்ச்சிகளைப் பார்ப்பதில் இல்லை? பல பயனுள்ள, அறிவான ஆங்கிலத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை, இப்பொழுது தமிழில் மொழிபெயர்த்து தருகிறார்கள். காட்டு மிருகங்களின் வாழக்கை முறைகளை அழகாகச் சொல்லும், “நாஷனல் ஜியோகிராபிக்” நிகழ்ச்சி, சிறுவர் தொடக்கம் பெரியவர் என்று எவருமே விரும்பி இரசித்துப் பார்க்கக் கூடிய நிகழ்ச்சி, இதை நம்மவர்களில் எத்தனை பேர் பார்க்கிறார்கள்? நான் பார்த்து ரசிக்கும் ஒரு தொலைக் காட்சி நிகழ்ச்சி பற்றி பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். “ஹிஸ்டரி ரீவி18”-இதுதான் அந்த நிகழ்ச்சி. இந்த ஆங்கில நிகழ்ச்சியின் காப்புரிமையை இந்தியா பெற்றுக்கொண்டு, இப்பொழுது தமிழ் உரையாடல்களுடன் தினமும் ஒளிபரப்பி வருகின்றது. இந்த அமெரிக்க தொலைக்காட்சி நிகழ்ச்சி 2003 நவம்பரில் ஆரம்பிக்கப்பட்டது. 2011 ஒக்டோபரில் இதன் ஒளிபரப்பு காப்புரிமையை இந்திய நிறுவனமொன்று பெற்றுக் கொண்டுள்ளது.

அட அப்படி என்னதான் இந்த நிகழ்ச்சியில் விஷேடம் என்று கேட்கிறீர்களா? சரித்திரம் சம்பந்தமான பல சுவாரஸ்ஸிய நிகழ்வுகள் தினமும் ஒளிபரப்பாகின்றன. Forged in Fire, Pawn Stars, Storage Wars – நான் பார்த்து ரசிக்கும் சில நிகழ்ச்சிகளின் பெயர்கள் இவை. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு புழக்கத்திலிருந்த வாள்கள், குத்துக் கத்திகள் போன்றவற்றை அச்சொட்டாக செய்யும் சவால் போட்டி நிகழ்ச்சி நான் வெகுவாகப் பார்த்து ரசிப்பதுண்டு. Forged in Fire என்பதுதான் நிகழ்ச்சியின்பெயர். இறுதியாக வெற்றி பெறுபவருக்கு 10,000 டொலர் தொகை பரிசுப் பணமாக அளிக்கிறார்கள். ஆனால் இந்தப் பணத்திற்கான அவர்களது கடின உழைப்பு பார்ப்பவர்களை வியக்க வைக்கின்றது. தேவையான உருக்கை காய்ச்சி எடுப்பது, கேட்கப்பட்ட வடிவில், வாளைத் தட்டி வார்ப்பது, பொருத்தமான பிடியைப் போடுவது, தொடரப் போகும் பலப் பரீட்சைகளில் கூர் மழுங்கி விடாதபடி, அல்லது இரண்டாக உடைந்து விடாதபடி, மிக ஜாக்கிரதையாக வாளைத் தயாரிப்பது..... பார்த்தால்தான் இதன் சுவாரஸ்ஸியம் புரியும். இது மட்டுமல்ல, பழைய, அரிய பொருட்கள் கடையில் விற்பனையாவது, பேரம் பேசுதல் என்று இன்னொரு நிகழ்ச்சி (Pawn Stars). இதை விட“ அட கடவுளே” என்று வியக்க வைக்கும் “ஓஎம்ஜி” நிகழ்ச்சி. அட கடவுளே இது நிஜந்தானா என்று வாயைப் பிளக்க வைக்கும் இந்திய மாநில நிகழ்வுகளின் தொகுப்பு இது. இமயம் ஏறி இறங்குபவர்கள் பகிரும் திரில்லான அனுபவங்கள், தாஜ்மஹாலின் ரகசியங்கள் என்று இங்கு பல நிகழ்ச்சிகளை மாறுபடும் ரசனைகளுக்கு ஏற்ப பார்க்க முடிகின்றது.

ஒருவருக்கு பிடிப்பதும் பிடிக்காததும் அவரவர் மனங்களைப் பொறுத்தது. நமக்கு பிடிக்காது என்று ஒதுக்கியிருந்த ஓர் உணவை இன்னொருவர் சுவையாகச் சமைத்துத் தரும்போது, அட இதையா இவ்வளவு காலமும் சாப்பிடாமல் ஒதுக்கினேன் என்று தலையில் அடித்துக் கொள்ளத் தோன்றும். அப்படித்தான் எல்லாமே எம் வாழ்க்கையில் வந்து போகின்றன. தமிழ் தொலைக்காட்சி நாடகங்களை அடியோடு பார்க்க வேண்டாம் என்று நான் பிரச்சாரம் செய்ய வரவில்லை. அவற்றையும் பாருங்கள். புதிதாக வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் பாருங்கள். சோறும் கறியும் ,கறியும் சோறும் என்று உங்கள் வாழ்க்கை தொடர வேண்டியதில்லை. ஒரு தடவை நூடில்ஸ் சாப்பிட்டும் பார்க்கலாமே. ஒருவேளை மனதிற்கு பிடித்ததாக அது மாறலாம்.!!இறங்கிப் பார்க்காமல் குளத்தின் ஆழம் எப்படித் தெரியப் போகின்றது?

ஆயுள்ரேகை
இருந்தும்
இறந்து கிடக்கிறது
பழுத்த இலை

**- யாழவன்.**



# 'ஓடினால்தான் வாழ்வு' காட்டுப்பன்றிகளின் கதை

ராஜேஸ்

இயற்கை படைத்த எந்த உயிருக்கும் தனித்தனியான வாழ்விடம் இல்லை. காட்டை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட உலகத்தில் "உன்னால் முடிந்தால் பிழைத்துக் கொள்" என்று இயற்கை எல்லோரையும் விட்டுவிட்டது. அதிலிருந்து தப்பி தனக்கென ஓர் இருப்பிடத்தை உருவாக்கிக் கொண்டது மனித இனம் மட்டும்தான். உயிரினங்களின் உயிர் பிழைப்பு கதைகளில் மற்ற விலங்குகளைக் காட்டிலும் காட்டுப் பன்றிகள் துயர வரலாறு கொண்டவை. துயரச் சம்பவங்கள் எல்லாமே துரித நேரத்தில் அரங்கேற்றிக் காட்டும் மாய உலகமாக இருக்கிற காட்டில் இவற்றின் உயிர் பிழைப்பு எப்போதுமே கேள்விக்குறிதான்.

காட்டுப்பன்றிகள் உணவாக எடுத்துக் கொள்வது புற்களையும் புழு பூச்சிகளையும்தான். எதிரிகள் என்று குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு யாரும் இல்லை. ஏனென்றால், பன்றிகளைச் சுற்றியிருக்கும் எல்லா விலங்குகளும் அவற்றிற்கு எதிரிகள்தான். காட்டில் இருக்கும் ஒன்று இன்னொன்றுக்கு இரை என்ற அடிப்படை. காட்டு பன்றிகளுக்குப் பொருந்துவதில்லை, எல்லோருக்குமான உணவாகவே காட்டுப்பன்றி இருக்கிறது. Born to run என்று சொல்லுவார்கள் அதன்படி பிறந்ததிலிருந்தே ஓட வேண்டிய கட்டாயத்திற்குள் வாழ்கிற உயிரினங்களில் ஒன்று.

இரண்டு சிறிய தந்தங்களைக் கொண்ட காட்டுப் பன்றிகள் மண்ணுக்குள் வளைதோண்டி அதற்குள் வசிப்பவை. இனப்பெருக்கத்தின்போது நான்கிலிருந்து ஆறு குட்டிகள் வரை ஈனும். காட்டுப்பன்றிகளின் குட்டிகள் piglets என்று அழைக்கப்படுகின்றன. பன்றிகளின் பலமும் பலவீனமும் அவை வசிக்கிற வளைகள்தான். பகலில் பல வழிகளைக் கொண்ட வளைகளில் தங்கும் காட்டுப்பன்றிகள். இரவில் ஒரு வழி மட்டுமே இருக்கும் வளைகளில் தங்குகின்றன. ஏனெனில் சிங்கம், சிறுத்தை, கழுதைப்புலிகள், செந்நாய்கள் போன்றவை இரவில் இரைதேடுபவை.


ஆறு காட்டுப்பன்றிகள் ஒரே வளையில் தங்கி இருப்பதால் அவற்றின் வெப்பமும் அதனுடைய வாசனையும் மற்ற விலங்குகளுக்கு எளிதில் பன்றிகளின் இருப்பிடத்தை காட்டிக் கொடுத்துவிடும். அதனால் அவை தங்களின் வளையை ஆழமாகத் தோண்டி பாதுகாப்பாக இருக்கும்படி அமைத்துக் கொள்கின்றன. அப்படியே மற்ற விலங்குகள் கண்டறிந்தாலும் அவ்வளவு எளிதில் வளைக்குள் சென்றுவிட முடியாது. சிங்கங்கள் சிறிது நேர முயற்சிக்குப் பிறகு அங்கிருந்து சென்று விடுகின்றன. சிங்கங்கள் எப்போதும் எளிதான முறையில் கிடைக்கும் இரையையே விரும்பும். ஆனால் சிறுத்தைகள் முடிந்தளவு போராடி வளைக்குள் சென்று காட்டுப்பன்றியை வெளியே இழுத்து வந்துவிடும். சிறுத்தையின் உடல்வாகு சிறியதாக இருப்பதால் அவை கடின முயற்சிக்குப் பிறகு காட்டுப்பன்றிகளை வேட்டையாடிவிடுகின்றன.

காட்டுப்பன்றிகளின் குடும்பத்தில் தலைவனாக இருக்கக்கூடிய பன்றி எப்போதும் பின்னோக்கியே தன்னுடைய வளைக்குள் செல்லும். எதிரிகள் யாராவது வந்துவிட்டால் தாக்குவதற்கு ஏற்ற வகையில் அமர்ந்திருக்கும். சிறிய தந்தங்கள் இருந்தாலும் அதனால் காட்டுப்பன்றிகளுக்கு எந்தப் பயனும் இல்லை என்பதுதான் உண்மை. எதிரி வளைக்குள் வருகிற நேரத்தில் எல்லாப் பன்றிகளும் ஒன்றுக்கொன்று நெருங்கி அமர்ந்திருக்கும். ஒவ்வொரு இரவும் அவற்றிற்கு வாழ்வா சாவா போராட்டமே. வளைக்குள் இருக்கும் ஆபத்துகளைப் போலவே, வளைக்கு வெளியிலும் மிகப்பெரிய ஆபத்துகள் காத்திருக்கும். குட்டிகள் எப்போதும் தாயுடன் இருப்பதால் அவற்றைப் பாதுகாப்பதே தாய் பன்றிக்கு முக்கிய வேலையாக இருக்கிறது. குட்டிகள் தாய்ப்பாலை மட்டுமே நம்பி இருக்கின்றன. அவை பால் குடிப்பதும் விளையாடுவதுமாகவே இருக்கின்றன. இங்கிருந்துதான் அவற்றின் தனிப்பட்ட வாழ்க்கையின் ஆபத்துகள் தொடங்குகின்றன.

எவ்வளவு கவனமாக இருந்தாலும் ஏதோ ஒரு விலங்குக்கு இரையாகிவிடுகின்றன. பிறக்கிற குட்டிகளில் பாதியே உயிர் பிழைக்கின்றன. 40 நிமிடங்களுக்கு ஒரு முறை தாய் குட்டிகளுக்குப் பால் புகட்டுகிறது. காட்டுப் பன்றிகள் ஒரு நாளைக்கு எட்டு மணி நேரத்தை உணவிற்காகச் செலவிடுகின்றன. வியர்வைச் சுரப்பிகளின் குறைபாடு காரணமாக, உடலின் வெப்பநிலையைக் கட்டுப்படுத்தி சீராக வைத்திருக்க, சேற்றில் புரண்டு உடலில் சேற்றைப் பூசிக்கொள்கின்றன. காட்டுப்பன்றிகளின் உயிர் பிழைத்திருப்புக்கு இயற்கை மிகப்பெரிய துணையாக இருக்கிறது. காட்டிற்குள் ஒலிக்கின்ற சத்தங்களைக் கொண்டு இவை முடிவுகள் எடுக்கின்றன. பன்றிகள் இருக்கிற இடத்திற்கு பலமான விலங்குகள் வர நேர்ந்தால் அணில்கள், பறவைகள் தங்களுடைய குரல் மூலமாக மற்ற விலங்குகளை எச்சரிக்கின்றன. சத்தங்களை வைத்து பன்றிகள் வளைகளுக்குள் சென்று, ஒளிந்துகொள்கின்றன.

பலமிருப்பவன் எப்படியாவது பிழைத்துக் கொள்வான், பலவீனமானவன் எப்படியேனும் தன்னைக் காத்துக் கொள்வான் என்ற அடிப்படையில்தான் காட்டுப்பன்றிகள் தங்களுடைய உயிரை தக்கவைத்துக் கொண்டிருக்கின்றன. காலம் முழுவதும் யார் யாரோ துரத்திக்கொண்டே இருப்பார்கள், காரணமே இன்றி ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். எல்லாவற்றையும் கடந்து காட்டுப்பன்றிகளும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன.







# நான் வாக்காளன் சொல்லுறன், கேளுங்கோ...!



சரி இப்ப சேந்து கதைச்சுக் கையெழுத்தும் போட்டாச்சு. அரசோடை பேரம்பேச் சில கொண்டிஷனையும் போட்டாச்சு. இந்த எலக்ஷன் அமளிக்கை ஏன் உப்பிடி இவை அமளிப்படுகினம்? இனி வெண்டு வாற ஆக்களோடை, அரசாங்கத்தோடை கதைக்கிறதைப் பற்றித்தானே உந்த உடன்படிக்கையே ஒழிய, ஆருக்கு சப்போட் பண்ணுறது எண்டதில்லை எண்டு நான் நினைக்கிறன்.

சுமந்திரன் முன்னம் சொல்லி இருக்கிறார் இப்போதைக்கு ஆருக்கு சப்போட் பண்ணுறதெண்டதை இன்னும் நாங்கள் தீர்மானிக்கேல்லை எண்டு. அப்ப தற்செயலா கூட்டமைப்பு ஐ.தே.க வுக்கு ஆதரவு கொடுக்க வேணும் எண்டு ஒரு அறிக்கை விடுகினம் எண்டு வைச்சுக் கொள்ளுவம். அப்ப உந்த ஐஞ்சுபேற்றை கையெழுத்து என்ன செய்யப்போகுது? எனக்கு உதின்ரை இடம், வலம் விளங்காதபடியாலைதான் கேக்கிறன். என்ரை கடந்த கால அனுபவத்தின்படி எலக்சன் வாற சமயம் பாத்து உப்பிடி ஏதேன் விளையாட்டைக் காட்டுறதுதான் தமிழ் அரசியல் கமட்சியளின்ரையும், தலைமைகளின்ரையும் வழக்கம். ஆனபடியாலை உது கூட ஏன் ஒரு அரசியல் பின்னணியா இருக்கப்பிடாது? அரசியல் பின்னணி எண்டு நான் சொல்லுறது, தமிழ் மக்களை ஏமாத்தச் செய்யிறதொரு நாடகமா இருக்கப்பிடாது எண்டு கேக்கிறன்.

தற்செயலா ஒண்டு நடக்கிதெண்டு வைச்சுக் கொள்ளுவம். கோத்தா பவறுக்கு வந்து கையை நீட்டித் தாய் பிள்ளையை அணைக்கிற மாதிரி சித்தரை அழைச்சால் சித்தர் போமாட்டார் எண்டு என்ன நிச்சயம்? தமிழ் மக்களுக்காக நான் இதைச் செய்யப்போறன். எண்டு ஒரு அறிக்கையைள விட்டிட்டு அவர் போனால்? அவருக்குரிய தண்டனை என்ன? அப்பிடிப் போறவையை மக்கள் எப்பிடித் தண்டிக்க வேணும் எண்டதையும் ஒருக்காச் சொல்லுங்கோ.

தம்பிமாரே ..! மனம் ஒரு குரங்கு. அதுவும் உதிலை சேந்திருக்கிறதெல்லாத் தின்ரையும் மனம் குரங்கைவிட வேகம் கொண்டதொரு சாமான் எண்டதை நாங்கள் கண்ணாலை கண்டனாங்கள். குருவி சுட்டதைப் போலை வீடு வீடாத் திரிஞ்சு சுட்டுப் போட்டு "மச்சான் நடந்ததை மறந்து போவம்" எண்டு சொன்னவர் தான் சுரேஸ். கூட்டமைப்பிலை இருந்து கொண்டு அவையின்ரை சட்ட திட்டத்தை மீறிப் போய் கோத்தாவோடை கதைச்சிட்டு வந்தவர்தான் சித்தர். விக்கி ஐயாவையும் ஆரென் வெறுவாய்க் கெட்டது குழப்பும். தான் நல்ல ஆள் எண்டு நம்பினால் போதும். அவை சொல்லுறதை அப்பிடியே அந்த மனுசன் நம்பும்.செல்வம் என்ன செய்யும் எண்டது உங்களுக்குத் தெரிஞ்ச விசியம். மாவை என்ன கேட்டாலும் ஒருக்கா தன்ரை ஐயாட்டைக் கேட்டிட்டுவாறன் எண்ணும். ஐயா தான் நம்புற லோயர் தம்பீட்டைக் கேப்பர். அப்ப எல்லாம் நாறிப்போற கேஸ்தானே!

அப்ப கம்பஸ் தம்பிமார் உவையளை எப்பிடி ஒரு கட்டிலை கட்டி வைச்சிருக்கிற தெண்ட சூத்திரத்தையும் தெரிஞ்சு வைச்சிருக்கிறது நல்லது. இல்லாட்டி ஐஞ்சோடை ஆறாத்தான் தமிழ் சனம் உங்களையும் கணிப்பினம். அப்ப சனத்துக்கு உங்களிலை இருக்கிற நம்பிக்கையும், மரியாதையும் போயிடும். கவனம்.

அரசாங்கத்தோடை கதைக்கிறது மட்டுமில்லை இனிமேல் எல்லாத்திலையும் ஒண்டாத்தான் இருப்பம் எண்டதையும் எழுதி வேண்டினால் என்ன? எனக்கு விளங்கேல்லை இப்ப இருக்கிற உங்கடை சனத்துக்கு ஏன் பத்து கட்சி தேவை எண்டு. எல்லாரையும் கலைச்சுப் போட்டு ஒரு கட்சி போதும். இது சனம் வில்லங்கப்படுத்திப் பிறிம்பு பிறிம்பா கட்சி துவங்கிக்கொண்டு வாங்கோ எண்டு சொன்ன மாதிரியேல்லே, நாலைஞ்சு கட்சியளைத் துவங்கிப் போட்டு நாண்டு பிடிக்கினம். அதுக்கை தான் எதையோ புதுசாச் செய்து கிழிக்கப் போறன் எண்டு பென்ஷன் எடுக்கிறவயதிலை ஒரு கட்சியை விக்கி ஐயாவும் துவங்கிவிட்டார். அவருக்கும் ஏதேன் தூரத்து பார்வை இருக்கிதோ எண்டு கேளுங்கோ. தற்செயலாக உங்களுக்கு ஒண்டு நடந்தால்? உங்கடை கட்சியின்ரை விறுத்தம் எப்பிடி இருக்கும்? என்னவாகும்? எண்டு கேட்டுப்பாருங்கோ. அவர் இப்ப பேட்டி குடுக்கிறமாதிரி ஒற்றைச் சொல்லிலை பதில் சொல்லிப்போட்டு இருப்பர். இப்ப கொஞ்சக் கால்த்துக்குள்ளை அவர் சொன்ன சொல்லும், அடிச்ச பல்ரியும், கூட்டமைப்பைக் கூடாது எண்டு சொல்லிக் கொண்டு வெளியிலை வந்தவரைச் சனம் நம்பிச்சினம். அதுக்குப் பிறகு இண்டைவரை கட்சி துவங்கினதைத் தவிர வேறை என்ன தமிழ் சனத்துக்குச் செய்தவர்.

அவர் பதவியிலை இருந்த காலத்திலைதனக்கு அரசாங்கமும் கட்சியும் ஆதரவு தரேல்லை எண்டு சொல்லிக் கொண்டு இருந்தவர். சரி என்னை முதலமைச்சராக்கிப் போட்டியள் உங்கடை நம்பிக்கைக்குப் பங்கம் செய்யப்பிடாது எண்டு சொல்லிக் கொண்டு றோட்டிலை இறங்கி மக்களிட்டை பிச்சை எடுத்தாவது மாதிரிக்கு மக்களுக்குரிய சின்னச் சின்ன திட்டத்தையாவது செயற்படுத்தியிருக்க வேணும். "அரசாங்கம் தரேல்லை நான் மக்களுக்காகப் பிச்சை எடுக்கிறன்." எண்டாவது உலகத்துக்குச் செய்து காட்டி இருக்கலாம். அப்பிடிப்பட்டவன்தான்ரா மக்கள் தலைவன். இது அதைவிட்டிட்டுத் தன்னோடை இருந்தவையளை முழுக்கு முழுக்க நம்பி அவையின்ரை களவுகளையும் "இல்லை" எண்டு சொன்னவரேல்ல உவர். மாலைக்கும், மேடைக்கும் அதிக ஆசைப்பட் ஒரு ஆளாத்தான் தமிழ் சனம் உவரை அடையாளங் கண்டு வைச்சிருக்கினம். அதோடை உவரும் ஒரு அறிக்கை மன்னன் தான் எண்டதைப் பல சந்தர்பத்திலை நிரூபிச்சவர். இதை ஏன் இப்ப சொல்லுறன் எண்டால் உந்தக் கூட்டிலை உள்ள ஐஞ்சிலையும் மற்ற எல்லாரையும் பற்றிச் சனத்துக்கு விலாவாரியாகத் தெரியும், உவரைப் பற்றித்தான் அதிகம் தெரியாது. அவரும் ஒரு அரசியல்வாதி எண்டதைச் சனம் அறியவேணும் எல்லே?

நாங்கள் சொல்லுறதைச் சொல்லிப்போட்டம். இனிச் சனம் தீர்மானிக்கட்டும். நான் சனத்துக்குச் சொல்ல வாறது என்ன தெரியுமே? ஆரையும் கண்மூடிக் கொண்டு நம்பாதையுங்கோ.

"உங்களுக்கு நன்மை செய்ய வாறன்" எண்டு சொல்லிக் கொண்டு வருகினமெல்லே அவை ஆர்? எவர்? எண்டதை அறிஞ்சுகொண்டு ஆதரவு குடுங்கோ. அப்ப ஏமாறமாட்டியள். ஆரும் உங்களை ஏமாத்தவும் மாட்டினம்.



## வைரமுத்து வாத்தியார் பேசுகிறார்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை ஒரு சமூகம் சார்ந்தவிடயமாக இந்த வயிரமுத்து வாத்தியார் பார்ப்பதனால்தான் அது பற்றி இந்தப் பத்தியில் எழுதவிழைகிறேன்.

தற்போது நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் என்பது பொதுவாக இலங்கை மக்களினது, குறிப்பாகத் தமிழ் மக்களினது எதிர்கால அரசியல் தொடர்பான பல முக்கிய பிரச்சினைகளைத் தீர்மானிக்கப் போவதாக மக்கள் நம்புகின்றனர். அதில் எவ்வளவு உண்மை இருக்கிறதென்று எனக்குத் தெரியவில்லை? யார் ஆட்சிக் கதிரையில் வந்து அமர்ந்தாலும் தற்போது காணப்படும் நிலையே தொடர்ந்தும் இருக்குமானால் நாம் போராடத்தைத் தொடர்ந்து நடத்துவதைத் தவிர வேறு வழிகள் இருப்பதாக எனக்குத்தெரியவில்லை.

தற்போது கட்சிகள் பொது உடன்பாடு ஒன்றில் கைச்சாத்திட்ட விடயத்தைப் பெரிதாக எண்ணித் தலையில் வைத்துக் கொண்டாடும் நிலை தெரிகிறது. இதில் கொண்டாடுவதற்கு என்ன உண்டு? முன்னம் கூட்டாக இருந்த கட்சிக்காரரோடு ஐயாவும் இணைந்திருக்கிறார். அவ்வளவுதான். எல்லாம் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள்தானே? ஐயாவையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். பல வழிகளிலும் தனது சாயத்தை வெளுக்க வைத்துவிட்டார் ஐயா. பாவம் அவர். இந்த ஐந்து கட்சிக்காரர்கள் எவ்வளவுக்குத் தங்களுக்குத் தாங்கள் விசுவாசமாக இருப்பார் என்று சொல்வதற்கில்லை. பழக்க தோஷம் போகாது. ஒட்டுக் குழுவாகத் தொழிற்பட்டவர்கள் இந்தவிடயத்தில் எவ்வளவுக்கு நேர்மையாக இருப்பர் என்று சொல்வதற்கில்லை. எதிரியை நோக்கி வைத்திருந்த தமது சுடு கலன்களைத் தமது உடன் பிறப்புகளை நோக்கித் திருப்பியவர்கள். தமது இனத்தைத் தாமே அழித்துக் கொன்றவர்கள் அவர்கள். இன்னும் ஒட்டுக் குழுவாக இயங்குவதில் நன்மை உண்டென்று கண்டால் அவர்கள் பின்கதவால் சென்றாவது ஒட்டமாட்டார்கள் என்று என்ன நிச்சயம்?

இணைவது முக்கியமல்ல. இணைந்து கைச்சாத்திடுவது முக்கியமல்ல. இணைந்தே இருப்பதுவும், இணைந்தே செயற்படுவதும்தான் மிக மிக முக்கியமான விடயம். இவர்கள் இணைந்து கைச்சாத்திட்டுக் கோரிக்கைகளை வைக்க வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கணமும் தெற்கில் இருந்து இவர்களை நோக்கி அம்புகள் எய்யப்படுகின்றன. பல புறோக்கர்கள் வந்து யாழ்ப்பாணத்திலுள்ள ஐந்து நட்சத்திர விடுதிகளில் தங்கியிருந்து அவர்கள் நிழல்களுக்கூடாகப் பல பேரங்கள் பேசப்படுவதாக மக்கள் சொல்லுகிறார்கள். எல்லா தரப்புகளும், எல்லா அமைப்புகளும், சமூக அந்தஸ்தையுடையவர்கள் என்று கருதப்படுகிறவர்கள் எல்லோரும் தனித்தனியாகவும், கூட்டாகவும் குறிவைக்கப் படுகிறார்கள்.

இதுவரை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ரணில் அரசோடு சேர்ந்து தேனிலவைக் கழித்தவர்கள். அவர்களிடம் பல சந்தர்பங்களில் சரணடைந்தவர்கள். நக்குண்டவர்கள். நாவிழந்தவர்களாயிற்றே? அவர்களால் இதைக் கடைப்பிடிக்க முடியுமா?




## மதுபானத்தின் வருகை

முன்பெல்லாம் அரபு நாடுகளில் மதுபானம் அருந்துவது என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. ஆனால் பொருளாதார ஜாம்பவான்களாக மாறிக் கொண்டு வரும் பல அரபு நாடுகள், ஐரோப்பிய நாடுகளின் சுதந்திரத்தை மெல்ல மெல்ல தம் மண்ணிலும் கொண்டு வருகின்றன. குளிக்கவென்று நீச்சல் தடாகத்தில் குதித்து விட்டால், தலையத் தலைய சேலையைக் கட்டிக் கொண்டிருக்க முடியுமா? கட்டாரில் 2022இல் நடக்கப் போகும் உலக வெற்றிக் கிண்ணத் திருவிழாவில், மதுபானங்களை விற்க அரசு பல இடங்களில் அனுமதித்திருப்பதோடு, விலையும் 50 வீதம் குறைக்கப்பட்டுள்ளது. என்றாலும் பொது இடங்களில் மதுபானம் அருந்த முடியாது. ( சாதாரணமாக ஒரு டின் பியரின் விலை 10 டொலர் ) "எங்கள் கலாச்சாரத்தில் மதுபானம் இல்லை. ஆனால் இது உலகளாவிய திருவிழா என்பதால், ஓரளவு கட்டுப்பாட்டை தளர்த்துகிறோம்" என்கிறார் ஓர் அதிகாரி.

**பாய் வியாபாரி**
**படுத்து உறங்குகிறான்**
**துண்டு விரித்து..**

## இங்கே இவர்கள் இப்படி

**ஏ.ஜே.ஞானேந்திரன்**

## சுற்றுலா விசா தருகிறோம்




பூமியென்ன காமதேனுவா? கையிருப்பிலுள்ள எண்ணெய் வளம் மெல்ல மெல்ல அருகிக் கொண்டே போவதால், வளைகுடா நாடுகள், தமது பொருளாதாரத்தைப் பலப்படுத்த மாறுபட்ட யுக்திகளைத் கையாளத் தொடங்கி விட்டன. சிங்கப்பூரைப் போல சுற்றுலா விசா வழங்க, சவுதி அரேபியா முதற் தடவையாக முடிவெடுத்துள்ளது.

சவுதி அரேபியா சமீபகாலமாக பெண்களுக்கு முன்னுரிமை வழங்குதல் போன்ற சமூக சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறது. தனது கச்சா எண்ணெய் கிடங்குகள் தாக்கப்பட்டதையடுத்து, பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு மற்ற துறைகளையும் பயன்படுத்த வேண்டும் என்ற நிலைக்கு சவுதி தள்ளப்பட்டுள்ளது.

இந்த சுற்றுலா விசாவை அமெரிக்கா, ஆஸ்திரேலியா உள்பட 49 நாடுகளை சேர்தவர்கள் இணையதளம் மூலமாக பெற்றுக்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. சுமார் 5 லட்சம் ஹோட்டல் அறைகளை உருவாக்குதல் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அவசியம் உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள்.

**குடை விரித்தது**
**மழை நின்றதும்**
**காளான் ....!**

## இலவசத்திற்காக இருபத்திமூன்று தடவை!

அட இலவசம் யாரைத்தான் விட்டு வைக்கின்றது? தங்கள் உறவுக்குள், விவாகரத்து - திருமணம் என்று மாறி மாறி 23 தடவைகள் செய்து, அரசு அளிக்கும் இலவச குடிமனைகளைப் பெற்றுள்ள கும்பலின் மோசடி அம்பலத்திற்கு வந்துள்ளது. சீனாவின் ஷெஜியாங் மாகாணம் லிஷுய் நகரில் உள்ள ஒரு கிராமத்தில் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அந்நாட்டு அரசு மக்களுக்கு இலவசமாக வீடு கட்டி தருகிறது. அதாவது, தற்போது அந்த மக்கள் இருக்கும் இடத்தை அரசு எடுத்துக்கொண்டு அதற்கு பதிலாக அதே கிராமத்தில் வேறொரு இடத்தில் 430 சதுர அடி அளவிலான வீடுகளை இலவசமாக வழங்கி வருகிறது.


சகோதரியை, மைத்துனி என்று நீண்டு, பெற்ற தாயையும் மணப்பதாக பதிவு செய்து பல தடவைகள் குடிமனைகளைப் பெற்றுள்ளார்கள் இந்த மோசடிக்காரர்கள். இப்படி Pan என்பவரின் குடும்பத்தில் உள்ள 11 பேர், தங்களுக்குள்ளேயே 23 முறை திருமணம் செய்துகொண்டு விவாகரத்து பெற்றுள்ளனர். அதன் மூலம்




இந்த குடும்பத்துக்கு 11 இலவச வீடுகள் கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது.

**காய்கறியானாலும்**
**மீன்கடையானாலும்**
**கடைசியாய் கேட்டுப்பெறுவது -**
**இலவசமாய் ஒரு துண்டு !**

## இதுதான் இன்ப அதிர்ச்சியா?



பிரான்ஸ் தலைநகர் பாரீசின் புறநகர் பகுதியான காம்பிக்னே நகரை சேர்ந்த 90 வயது மூதாட்டி 1960ஆம் ஆண்டில் கட்டப்பட்ட தனது பழமையான வீட்டை விற்க முடிவு செய்தார். ஏல நிறுவனத்தை சேர்ந்த அதிகாரிகள் மூதாட்டியின் வீட்டுக்கு சென்றபோது சமையலறையில் எரிவாயு அடுப்புக்கு மேலே பழமையான ஓவியம் ஒன்று தொங்க விடப்பட்டிருந்ததை கண்டனர்.

மூதாட்டிக்கு இந்த ஓவியம் பற்றிய எந்த விவரமும் தெரியாது. இதையடுத்து, அந்த ஓவியத்தை எடுத்து ஆய்வு செய்தபோது அது 13ஆம் நூற்றாண்டில் இத்தாலிய ஓவியரான சிமாய்பூ என்பவரால் வரையப்பட்டது என்று தெரியவந்தது. மேலும் அந்த ஓவியத்தின் மதிப்பு 6 மில்லியன் யூரோ என்று அதை ஆய்வு செய்தவர்கள் கூறியிருக்கிறார்கள். மீதிக் கதை தெரியுந்தானே?


**சிவன் ஓவியம்**
**வரைகிறார் கிறிஸ்தவர்**
**தெரிகிறது இயேசுவின் சாயல்**

## யார் உயர்ந்தவர்?

கடவுச் சீட்டுகள் எல்லோருக்கும் தெரிந்தவைதான். ஆனால் இவற்றுள் உயர்ந்தவர் யார் என்று எப்பொழுதாவது நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா?சமீபத்தில் இது பற்றிய ஆய்வை முடித்து, அந்தந்த நாடுகளின் பலத்திற்கேற்ப, கடவுச் சீட்டுகளை வரிசைப்படுத்தி இருக்கிறார்கள்.

ஆசிய நாடுகளான ஜப்பான், சிங்கப்பூர் முதலிடம் பெறுகின்றன. இந்த நாடுகளின் கடவுச் சீட்டுடன் 189 நாடுகளுக்கு விசா இன்றி பயணிக்க முடியும். கொரியா, ஜேர்மனி, பின்லாந்து நாட்டு கடவுச் சீட்டுகளுடன் 187நாடுகளுக்கு விசா வேண்டியதில்லை. டென்மார்க், இத்தாலி, லக்ஸன்பேர்க் 186 நாடுகளுடன் மூன்றாம் இடத்தைப் பிடிக்கின்றன. பிரான்ஸ், சுவீடன், ஸ்பெயின் - 185 நாடுகள். ஆஸ்திரியா, ஒல்லாந்து, போர்த்துக்கல், சுவிட்சிலாந்து ஆகியன 184 நாடுகளுடன் 5ஆம் இடத்தைப் பிடிக்கின்றன. கடைசி இடம் - அதாவது 125வது இடம் ஆப்கானிஸ்தானுக்கு!!!!

**"தலைக்கனத்தால்"**
**புகழ் பெற்றது,**
**பம்பரம் !**



# இலங்கை இனத்துவ முரண்பாட்டு அரசியலில் கேலிச்சித்திரங்கள்

## அத்தியாயம் 3.1.1




இரண்டாம் உலகப்போரைப் பற்றிய பிரக்ஞை இல்லாமல் 'டேவிட்லோ'வின் ஹிட்லரை விளங்கிக் கொள்வதும், உகண்டாவில் அரசியல் நிலவரங்களை அறிந்து கொள்ளாமல் 'லூரி'யின் இடிஅமீனை விளங்கிக் கொள்வதும் சிரமம். அதேபோன்று இலங்கையின் அரசியலை விளங்கிக் கொள்ளாது 'அத்த' பத்திரிகையில் வரும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவை விளங்கிக்கொள்வதும் சிரமம்.

எனவே ஒரு மெய்யான காட்டூனிஸ்ட் தனது காலத்தின் பதிவாகத் தான் வாழும் சமூகத்தின் மனச்சாட்சியாகவும் அமைகின்றான். நவீன வரலாற்றை எடுத்துக் கொண்டால், காட்டூனிஸ்டுகளின் பார்வையில் நவீன வரலாறு என்ற தலைப்பின் கீழேயும் வரலாற்றைப் பார்க்க முடியும். காட்டூன் அதன் ஆரம்ப காலங்களில் இருந்தே அந்தந்தக் காலங்களின் சீர்திருத்தவாதிகளையும், உலக இயக்கத்தில் சலனங்களை ஏற்படுத்தியவர்களையும் தமது கதாநாயகர்களாக்கி அக்காலத்தின் விம்பமாகப் பதிவாக்கியிருந்தமையை அவதானிக்கலாம்.

மறுமலர்ச்சிக் காலத்தில் 'மார்ட்டின் லூதர் கிங்', '6ஆவது பாப்பரசர்' காட்டூனின் நாயகர்களாக இருந்தனர். பின்னர் 'நெப்போலியன்', 'பிஸ்மார்க்' வந்தனர். அதனைத் தொடர்ந்து 'ஆபிரகாம்லிங்கனும்' வந்தார். தொடர்ந்து வந்த விக்டோறியா யுகத்தில் 'விக்டோறியா' அரசியல் காட்டூனின் நாயகியாக இருந்தார். ஒக்ரோபர் புரட்சியின் போது கொம்மியூஸ்டுக்கள் காட்டூன் உலகினுள் பிரவேசித்தனர். தொடர்ந்து உலகப் போர்கள் நிகழ்ந்தன. இரண்டாம் உலகப் போரின் போது 'ஹிட்லர்', 'முசோலினி', 'சேர்ச்சில்', 'பிரான்கோ' போன்ற தலைவர்கள் காட்டூன் உலகின் தலைவர்களாக வலம் வந்தனர். அமெரிக்காவினதும் அதன் நேச நாடுகளினதும் காட்டூனிஸ்டுகள் ரஷ்யாவையும், அதனோடு சேர்ந்த கிழக்கு ஐரோப்பாவையும் கொம்யூனிச நகரமாகச் சித்தரித்தார்கள். அதேபோல கொம்யூனிச நாடுகளின் காட்டூனிஸ்டுகள் முதலாளித்துவப் பூதத்தைச் சித்தரித்தார்கள். இவ்விதமாகப் பனிப்போர்கள் காட்டூன் உலகில் எதிரொலித்தது.

கடந்த தசாப்தத்தில் 'பெரஸ்ரோய்கா'வின் வருகையோடு கெடுபிடிப்போர் தணியலாயிற்று. எனவே பெரஸ்ரோய்காவின் நாயகர் 'கோர்பசேவ்' கடந்த தசாப்தத்தின் நடுக்கூறிலிருந்து காட்டூன் உலகின் நிகரற்ற நாயகராகத் திகழ்ந்தார். வளைகுடாப் போர்க்களத்தில் சதாம் ஹுசேன் காட்டூன் உலகின் நாயகரானார். அவ்வாறே இலங்கையின் இனவெறிப் போர் முனைப்பில் 'ஜே.ஆர்.ஜெயவர்த்தனா', 'பிரேமதாஸா', 'சந்திரிகா' என்போர் காட்டூன் உலகின் நாயகர்களாகினர். தற்காலத்தில் இப் பாத்திரத்தில் 'ட்ரம்ப்', 'புட்டின்', 'மோடி'யுடன் 'மகிந்த ராஜபக்ஷவும், ரணிலும், மைத்திரியும் இணைந்துள்ளார்.

இவ்வாறு காட்டூன்களை அரசியலில் இருந்து பிரித்துப் பார்க்க முடியாது. அரசியல் நிகழ்வுகளை விகடத் தனத்தில் வெளிப்படுத்தும் ஊடகமாகக் காட்டூன்கள் தொழிற்படுகின்றன. ஒரு காலப்பகுதியின் காட்டூன்களை அவதானித்தல் என்பது அக்கால அரசியல் நிலவரங்களைப் புரிதலாக அமைகின்றது. சொல்லமுடியாத, தவிர்க்கப்படவேண்டிய மேலாண்மைக்குரிய அரசியல் நிகழ்வுகளையும் நகைச்சுவைக்கூடாக வெளிக்கொணரும் சக்தி வாய்ந்ததாகக் காட்டூன்கள் சமூகத்தில் செல்வாக்குப் பெறுகின்றன. ஒவ்வொரு காலப் பதவிக்குரிய மேலாண்மைகளும் அக்காலக் காட்டூனிஸ்டுகளால் உள்வாங்கப்பட்டு அவர்களது தூரிகைகளுக்கு உட்பட்டவர்களாகவும் திகழ்ந்தனர்.

'பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும்
துப்பாக்கி முனையால் மட்டுமல்ல
தூரிகை முனை, பேனா முனை இவைகளாலும்
காப்பாற்ற முடியும் என்பதற்குக் காட்டூன்கள்
சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்'
என்கிறார் சிவஞானசுந்தரம்.

இந்த வகையில் உலக வரலாற்றைப் பதிவுசெய்துள்ள காட்டூன்கள் பற்றி விரிவாக நோக்கின்...........


### டேவிட் லோ (David Low)

காட்டூன்களை வரைந்து அதன் மூலம் அரசியல் விடயங்களைச் சாதாரண மக்களுக்கு எளிதில் புரிந்துகொள்ளும்படி செய்து இன்று உலகில் சிறந்த காட்டூன் ஓவியர் என்ற பெயர் பெற்றவர் டேவிட் லோ. 1920களில் இவரது பிரசன்னத்தினைக் காணமுடியும்.



காட்டூன் வரைதலில் அதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டுவந்த இறகுப்பேனா அல்லது அதையொத்த வரைதற் கருவிகளுக்குப் பதிலாக இவர் நுட்பமாக தூரிகைகளைக் கையாண்டார். இதனால் காட்டூன் அதன் எளிமையான வடிவத்திற்கு வரலாயிற்று. இரண்டாம் உலகமகா யுத்தத்தின் போது ஹிட்லர், முசோலினியின் கூட்டுக்கு எதிரான சர்வதேச சமூகத்தின் உணர்வலைகளைப் பிரதிபலித்தலில் டேவிட் லோவின் காட்டூன்கள் முக்கியமானவை

பிரபல காட்டூனிஸ்ட்டாகவும், ஒரு சிறந்த கரிக்கேச்சரிஸ்ட்டாகவும் காணப்படும் இவர் 07.04.1891 இல் நியூஸ்லாந்தில் பிறந்தார். 1911 இல் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகருக்குக் குடிபெயர்ந்து 'த




புல்லட்டின்' (The Bulletin) பத்திரிகையில் இணைந்தார். இவர் அங்கு நன்கு அறியப்பட்ட ஒரு காட்டூனிஸ்ட்டாக விளங்கினார். 1916 இல் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற ஏகாதிபத்திய மாநாட்டிலும் இவரது புகழ் பேசப்பட்டது. அக்காலத்து அவுஸ்திரேலியப் பிரதமர் பெல்லி ஹியூக்ஸ் (Billy Hughes) தொடர்பில் பல்வேறு காட்டூன்களை வரைந்து வெளியிட்டார். அதனை இவர் பெல்லி புக்ஸ் (Billy Book) எனும் தலைப்பில் ஒரு புத்தகமாக 1918 இல் வெளியிட்டும் இருந்தார். இர் புத்தகத்தின் மூலம் இலண்டனில் வெளியாகும் லண்டன் ஸ்ரார் (London Star) பத்திரிகையின் ஒரு பகுதி உரிமையாளராக இருந்த ஹென்றி கட்ப்யூரி (Henry Cadbury) இன் கவனத்தை ஈர்த்தார்.

(தொடரும்)

## ஜனாதிபதித் தேர்தல்....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

தென்னிலங்கை முஸ்லீம்களுக்கு சுயாதீன இருப்பு மிகக் குறைவு என்பதால் சண்டைக்காரனின் காலில் விழத் தயாராக இருப்பது போலவே தெரிகின்றது. கிழக்கில் ஹிஸ்புல்லாவும் வேட்பாளராக போட்டியிடுவதால் கணிசமான வாக்குகளைப் பெறுவார். இதுவும் சஜித்தின் வாக்கு வங்கிகளைச் சிதைக்கும் குறிப்பாகக் காத்தான்குடி பிரதேசத்தில் இது நிகழலாம். அம்பாறை மாவட்டத்திலும், திருகோணமலை மாவட்டத்திலும் சஜித்திற்குரிய முஸ்லீம்களின் வாக்குவங்கி பெருமளவு பாதுகாக்கப்படும்.

மலையக மக்களின் வாக்குகளும் இந்தத் தடவை இரண்டாகப் பிரியப் போகின்றது. ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கோத்தாபாயவினை ஆதரிக்கும். முடிவை எடுத்துள்ளமையினாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. மலையகத்தில் அமைப்பு ரீதியாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரசே பலமான நிலையில் உள்ளது. சிறிய சிறிய தோட்டங்களில் கூட அதற்கு தொழிற் சங்க அமைப்பு உண்டு. தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஆதரவு தளம் என்பது படித்த மத்தியதர வர்க்கமே! எனினும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்துப் பழக்கப்பட்டதால் மலையக மக்கள் அதிகளவில் கோத்தாவிற்கு வாக்களிப்பார் எனக் கூறுவதும் கடினம். ஆறுமுகம் தொண்டமான் இரண்டு லட்சம் வாக்ககளைப் பெற்றுத் தருவேன் என கோத்தாவிடம் உறுதியளித்துள்ளதாகவும் செய்திகள் வருகின்றன.

கொழும்பு தமிழர்களின் வாக்குகள் சஜித்திற்கே செல்லும். அங்கு கோத்தாவிற்கு அளிக்கப்படுவதற்க்கான வாய்ப்புக்கள் மிக மிகக் குறைவு.

ஐந்தாவது அமெரிக்கா தலைமையிலான மேற்க்குலகத்தின் ஆதரவு இந்தத் தடவை சஜித் தரப்பிற்கு மிகக் குறைவு. 2015 ம் ஆண்டு தேர்தலில் இச்சக்திகள் தேர்தலை பின் நின்று வழி நடாத்தி வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றன. இந்தத் தடவை மேற்குலகம் பெரிய அக்கறையைக் காட்டவில்லை. கோத்தபாய வெற்றி பெறலாம் எனக் கருதுகின்றமை, சஜித் மீதான நம்பிக்கையின்மை, 2015 ம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின் தோல்வி, சோபா உடன்படிக்கையை கோத்தாவைக் கொண்டு நிறைவேற்றலாம் எனக் கருதுகின்றமை என்பவை அதற்கான காரணங்களாக இருக்கலாம். அவர்களின் அக்கறை குறைந்ததால் அரசு சார்பற்ற நிறுவனங்களின் அக்கறையும் குறைந்துள்ளது.

இந்தியாவும் இந்தத் தடவை பெரிய அக்கறையைக் காட்டவில்லை சஜித்தின் தந்தையார் பிறேமதாசா இந்தியாவை அவமானப்படுத்தியவர் என்பது ஒரு காரணமாக இருக்கலாம். அதை விட மிக முக்கியம் கோத்தாபாயா வெற்றி பெற்றால் அவருடனும் உறவைப் பேண வேண்டும் என்பதே! இந்திய சார்பானவர் எனக் கருதப்படுகின்ற முன்னாள் வட கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப்பெருமாளும் இந்தத் தேர்தலில் கோத்தாபாயாவை ஆதரிக்கின்றார். பாராளுமன்றத் தேர்தலில் அவருக்கு தேசியப்பட்டியல் உறுப்பினர் வழங்கப்படலாம். 2015 ம் ஆண்டு தேர்தலில் தனது தோல்விக்கு இந்தியா தான் காரணம் என மகிந்தர் நேராக குற்றம் சாட்டியிருந்தார்.

அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத்தினதும் இந்தியாவினதும் இன்றைய அணுகுமுறை யார் ஆட்சிக்கு வந்தாலும் தங்களுடைய நலன்கள் பாதுகாக்கப்படல் வேண்டும் என்பதே.

மொத்தத்தில் வெற்றி தோல்வி பற்றிச் சரியாகக் கணிப்பிட முடியாத தேர்தலாகவே இத் தேர்தல் உள்ளது. ஒரு வாரம் கடந்தால் ஓரளவிற்காவது வெற்றிப் போக்கினைப் பற்றிக் கூற முடியும். இரண்டாவது விருப்பு வாக்கு எண்ணப்பட வேண்டி வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

# எல்லாரும் சொல்வது போல வயசுக் கோளாறு தான் இந்த நிலைக்குக் காரணம்

யாழ்.தர்மினி பத்மநாதன்

வயசு தெரியாத நேரம் இப்பிடி நடந்திட்டன். என்ன செய்றது? நினைச்சாலே கவலைதான். அதால நினைக்கிறதில்லை. இப்ப எனக்கு 30 வயசு. அவருக்கு 23 வயசு. வீடும் கட்டி என்னை நல்லா வைச்சுப் பார்க்கிறார். இதை விட எனக்கு என்ன வேணும்? என்றவள், மெல்லிய சிரிப்புடன் நீங்கள் ஏன் குடும்பம் பற்றி விசாரிக்கின்றீர்கள்? வாசிகசாலையில நிகழ்ச்சி போடப்போற தாக சொன்னீங்கள். சும்மாதானே கதைச்ச நீங்கள் பிறகு எதுக்கு?

என்றவள் மீண்டும் நாம் ஏன் அவள் வீடு தேடி சென்றோம்? என்பதில் சந்தேகம் கொண்டாள். தொடர்ந்து எம்மை நாம் அடையாளம் காட்டியதன் பின்பு அவளால் மேலும் மேலும் எம்முடன் கதையாட முடிந்தது.

ஒவ்வொரு வீடுகளுக்கும் இரண்டு இரண்டு பேராக நான்கு திசையிலும் சென்ற நாம் அன்று உரும்பிராய் கிராமம் பற்றிய தேடலின் பொருட்டு அரங்கப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தோம். யாழ்ப்பாணம், கந்தர்மடம் பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தைச் சேர்ந்த 12 பேர் அன்றைய தினம் 26.09.2019 உரும்பிராய்க் கிராமத்துக்கு பயணம் செய்தோம். நெளிந்து வளைந்து சுழித்து சென்ற நாம் அங்கு மக்கள் நெருக்கம் உள்ள பகுதியில் எமது வாகனத்தை விட்டு விட்டு நான்கு திசைகளாலும் மக்களுடன் கதையாடச் சென்றிருந்தோம். செல்லும் முன்பு அக்கிராமத்தில் பெண்களுடன் நீண்ட காலமாக செயற்பட்டு வரும் நண்பிகளுடன் தொடர்பாடலை ஏற்படுத்தியவாறே நாம் பயணித்தோம். ஆயினும் அந்த அறிமுகம் நாம் அவர்கள் வீடுகளுக்கு செல்லும் போது எம் மீதான நம்பிக்கையை அந்த மக்களுக்கு கொடுத்தது. .

மாலை 4.30 மணி.பெரும் பாலான வீடுகள் திறந்தே இருந்தன. வயதானவரோ. ஆணோ, பெண்ணோ, சிறுவனோ, யாரோ ஒருவன் அந்த வீடுகளில் தாம் இருப்பதாக உணர்த்திக் கொண்டனர். ஏனெனில் நகரப் புறங்களில் மக்கள் வீடுகளில் இருந்தாலும் தம் இருப்பை வெளிக்காட்டிக் கொள்வதில்லை என்பதனாலேயே இதனைக் குறிப்பிடுகின்றேன். அதனைத் தொடர்ந்து சில வீடுகளுக்கு பயணித்த நாம் எம்மை அறிமுகம் செய்து எமது நோக்கத்தை கூறியபோது அவர்களால் எம்மை வரவேற்க முடிந்தது. அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் ஈரம் நிறைந்த பாவாடை சட்டையுடன் அள்ளு கொண்டையுடன் கைகள் இரண்டையும் விசிக்கியபடி பக்கத்து வீட்டில் இருந்து வேகமாக வந்த அந்தப் பெண்மணி நாம் இன்னொரு வீட்டில் இருந்து வெளியேறும் அதே நேரத்தில் தன்னுடைய வீட்டுக்குள் நுழைந்தாள்.

தகர வேலி, கட்டி முடிக்காத சீமெந்து பூசாத வீடு, பக்கத்தில் சிறு குசினிக் கொட்டில் அந்த வீட்டு வளவில் பெரியதொரு தண்ணீர்த்தொட்டி. ஆனால் அங்கு ஏனோ தண்ணி வசதி போதாமை போலும்." இப்ப தான் அம்மா வீட் டை வைச்சு உடுப்பு தோய்ச்சுக் காயப் போட்டிட்டு வாறன் எங்களுக்கு கிணறு இல்லை. பக்கத்து வேலி தான் அம்மா. அம்மா தங்கச்சி குடும்பத்தோட இருக்கிறா. அங்க தான் போயிட்டு வாறன். அதுதான் முழுக்க ஈரம். இனிக் குளிக்க வேணும். என்றவாறு தனது ஆடையில் உள்ள தண்ணீரை பிழிந்து விட்டபடி "நீங்கள் முதல் ஒரு முறை பறை அடிச்சு.நாடகம் செய்து சின்ன ஆக்களோட விளையாடி யது எங்களுக்கு தெரியும். இப்பவும் நாடகம் போடப் போறிங்களா ? நாங்கள் பார்க்க வருவம். லீவு நேரம் தான் வருவம்" என்றாள்.

"நீங்கள் ஏதும் வேலை செய்றீங்களா?" என்றோம் நான் முதல் கலியாணத்துக்கு பிறகு 4 வருஷம் கொழும்பில வேல செய்தேன். வீட்டு வேலை தான். அங்க வேலைக்கு போகேக்க அம்மாவிட்டதான் பிள்ளையை குடுத்திட்டு போவன். 2 ஆம்பிள பிள்ளை. அம்மா தான் பார்ப்பா. அதை கூட எங்கட சனம் கதை



கட்டி அவள் கொழும்பில யாரோடையோ இருக்கிறாள் , எண்டு குழப்பி பிறகு நான் விட்டிட்டு வந்திட்டன். அந்த நேரம் நான் இப்ப இரண்டாம் தாரமாய் கலியாணம் செய்தவர் ஒரே கதைப்பார். அவர்தான் சொல்லுவார் பிள்ளைகளை கவனமாய் வளர்க்க வேணும்.இப்பிடி இருந்தால் பிள்ளைகளிண்ட எதிர்காலம் பிரச்சனையாகிடும் எண்டு. அதோட தான் யோசிச்சு வந்திட்டன். இப்ப ஒரு இடமும் வேலைக்கு போறதில்லை. அவர் தானே உழைச்சு வீடும் கட்டி நல்லா வைச்சு பார்க்கிறார் பிறகு எதுக்கு நான் வேலைக்கு போவான். பிள்ளைகளை பார்க்காமல் வேலைக்கு போறதை அவர் விரும்பல. முதல் கலியாணத்தோடையே நான் சீரழிஞ்சு போனான். அவர் ஒரே குடி. அந்த நேரம் எனக்கு 14 வயசு. எந்த விளக்கமும் இல்லை. வயசு தெரியாத நேரம். எல்லாரும் சொல்லுற வயசுக் கோளாறுதான். காதலிச்சுக் கட்டின எண்ட பெயர்தான். யாரும் ஒன்றும் சொல்லித் தரவும் இல்லை. ஆண்டு 6 படிக்கும் போதே படிப்பை விட்டிட்டன். பக்கத்து பள்ளிக்கு கூடத்தில்தான் படிச்சனான். படிப்பின் அருமை இப்பதான் தெரியிது .

இப்ப இருக்கிற காணி அம்மா தந்தது. அவர்தான் வீடு கட்டுறார். 5 இலட்சம் வீட்டுத் திட்டமும் கிடைச்சது. அவரிண்ட இடம் சுன்னாகம். மேசன் வேலை.தான் செய்கிறார்.

1 1/2 வயதில 3 ஆவது பிள்ளை. 3 ஆம்பிளைப் பிள்ளை இருக்கு. . ஒரு பொம்பிளைப்பிள்ளை இருந்திருந்தால் சந்தோசமாய் .இருந்திருக் கும் கடைசிக் காலத்தில எங்களை பார்த்திருக்கும். என்றவளின் மனசில் நூலாக ஓடியது கவலை. மனசைக் கட்டுப் படுத்தியவள் "எப்பிடியும் ஆம்பிளைப் பிள்ளைகள் எங்கட காலுக்கையே இருப்பினும் எண்டும் நாங்கள் நினைக்க ஏலாது தானே. அவையளை படிப்பிச்சு விடவேணும். நான் இரண்டாம் கலியாணம் கட்டும்போது மூத்தவனுக்கு 15 வயது, மற்றவனுக்கு 14 வயது. பிள்ளைகளோட கதைச்சு சம்மதம் வாங்கித்தான் கட்டினான். அவையும் அவரை சித்தப்பா எண்டுதான் கூப்பிடுறவை. அவரும் பாசமாய்த்தான் பார்க்கிறவர். என்ர நிலைமை தெரிஞ்சு கேட்டுத்தான் செய்தவர். இரண்டு வீட்டிலும் முதலில் விருப்பம் இருக்கல. இப்ப கொண்டாடுவோம். பிள்ளைகளும் அவரிண்ட குடும்பங்களிட்ட போய் வருவினம். என்றே கதையாடல் நீண்டது. வளவு பள்ளந்திட்டியாக இருக்கு. வீடு கட்டும் வேலைகளும் அரையும் குறையுமாக இருக்கு. இன்னொரு நாள் வாங்கள் இருந்து ஆறுதலாக கதைக்கலாம் என்றாள். மீண்டும் கதையைத் தொடுத்தோம். இங்கு மாதர் சங்கம் வாசிகசாலை என்பன இயங்குகின்றதா? மக்களின் பங்களிப்பு எப்படி இருக்கு என்பதை அறிய விரும்பினோம்.

"வாசிகசாலை இருக்கு. மாதர் சங்கம் இல்லை. சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கம் இருக்கு. அவையள் சீமான்கள் பொறுத்து லோன் குடுப்பினம். மாத லோன். கிழமை லோன் என்று லெட்சக் கணக்கில எடுப்பினம். நானும் ஒரு இலட்சம் எடுத்தன். முதல் கணவர் தான் எடுத்தவர், என்னுடைய பெயரிலே எடுத்ததால நான் தான் கட்டவேணும். கட்டும் வரை ஒவ்வொரு மாதமும் கூட்டம் போகவேணும் எப்பவோ அந்த காசு கட்டி முடிக்கத் தான் வேணும். இலங்கை வங்கியில் தான் வாங்கினான். நெடுக வருவினம் . வந்தால் சொல்லுவன்." காசு கட்டுவம் எந்த நேரமும் வந்து ஆக்கினை குடுத்தால் செத்துப்போயிடுவம் எண்டு பேசுவான்" அவர் எடுத்தும் இல்லாதவனுக்காக நான் கட்டவேணும். கட்டுவன் ஆனால் இப்ப இல்லை. முதல் கொஞ்சம் கட்டினான்.

வாங்கினதை விட வட்டி அதிகமாயிட்டு என்னால் முடியாமல் போயிட்டு. எந்த காலமும் கட்டி முடிப்பன் எண்டு சொன்னேன்.

வாழ்க்கையில் பொறுப்பற்றவர்களாக வும் கல்வியற்ற சமூகமாகவும் பெண் கள் வாழ்வதில் உள்ள நெருக்கடிகளின் ஒரு துளியாகவே இந்த கதையாடலை உணர முடிந்தது.

மேலும் தெரிஞ்ச ஆக்கள் சொன் னவை கேஸ் போட்டு பிள்ளைகளுக்கு காசு வாங்கச் சொல்லி .. அவனையே வேண்டாம் எண்டு விட்டுப் போயிட்டு அவண்ட காசு எதுக்கு? நான் எப்போவாவது இருந்திட்டு தோட்ட வேலை, பழம் வெட்டுற வேலை போவன். மூத்த மகன் இப்போ 10 ஆம் வகுப்பு படிக்கிறார். அவன் தான் சேராத பிள்ளைகளோடு சேர்ந்து படிப்பை குழப்புறான்.

எனக்கு பயமாய் இருக்கும். இடையிடையே மனுசனுக்கும் எனக்கும் சண்டையும் வரும். அந்த நேரம் யோசிப்பன் அவன் ஒருத்தன் குடியில மிதந்து நடுவில விட்டிட்டு போயிட்டான். இவனொருத்தனிட்ட இப்பிடி பேச்சு வாங்க வேண்டி இருக்கே எண்டு கவலை வரும். என்ன செய்றது எப்பிடியும் வாழ்ந்து தானே முடிக்கவேணும்" என்றாள்.

( லக்ஸ்மி - பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. )

# தேயிலை தினம்

## டிசெம்பர் 15ஆம் திகதி ஹட்டன் மாநகரில் அறிமுகம்




மஸ்கெலியா நிருபர் ச.தி.பெருமாள்

உலகில் பல தினங்கள் நினைவு கூரப்படு கின்றன. அவ்வாறான தினங்களில் ஒன்று தான் டிசம்பர் மாதம் 15ம் திகதி நினைவு கூறப்படு கின்ற தேயிலை தினம். இன்றுமேதினம், காதலர் தினம், மனித உரிமைகள் தினம், அன்னையர் தினம், சிறுவர் தினம், சுற்றுச்சூழல் தினம், ஆதி வாசிகள் தினம் என்று உலகம் முழுவதும் பல தினங்கள் நினைவு கூறுகின்றோம். ஆனால் அந்த தினம ஏற்படுத்தப்பட்டதற்கான உண்மையான நோக்கம் வெளிக்கொணரப்படுவதில்லை. அரசியல்வாதிகளுக் கும் வியாபார உலகிற்கு தேவையான தினங்கள் மட்டுமே முதன்மைப்படுத்தப்படுகின்றன. உதாரணம்: மே தினம்

எமது நோக்கம் இலங்கையில் தேயிலையின் முக்கியத்துவத்தையும் தேயிலை தினத்தின் முக்கியத்துவத்தையும் தேயிலை தொழிலோடு தொடர்புபட்டுள்ள இந்திய வம்சாவழி மக்களின் இன்றைய வாழ்வியலை அனைத்து மலையக மக்களுக்கும் உணர்த்துவதும் ஆகும். அவர்களும் இலங்கையில் உள்ள ஒரு தேசிய இன பண்புகளைக் கொண்டவர்கள். ஆனால் காலஓட்டத்தில சிதைக்கப்பட்டு திரிபுபடுத்தப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது என்பதை வரலாற்று ஆதாரங்களோடு ஆராய்வோம்.



மலையக மக்களின் இருப்பையும் இலங்கையின் பொருளாதாரத்தையும் இன்று வரை தக்க வைத்திருப்பது தேயிலைப் பயிராகும். தேயிலை பயிரிடப்பட்டு 150வருடங்கள் ஆகின்றது என்பதை பல வரலாற்று நூல்களில் காண்கின்றோம். மத்திய மகாணத்தில் கண்டிப் பிரதேசத்தில் லூல்கந்துர என்ற இடத்தில் முதன் முதலில் ஜேம்ஸ் டேய்லரால் ஆரம்பிக்கப்பட்ட தேயிலை தோட்டத்தையும், தொழிற்சாலையையும் இன்றும் காணக்கூடியதாக உள்ளது.

தேயிலை பயிரிடுவதற்கு முன்பு கோப்பி, கொக்கோ பயிரிடப்பட்டது. எனவே தேயிலை பயிரிடுவதற்கு முன்பிருந்தே இந்திய வம்சாவழி மக்களின் குடியிருப்பு இலங்கையில் ஆரம்பிக்கின்றது. இதற்கான ஆதாரங்களை நாம் இன்று கண்டுபிடித்துள்ளோம்.

மலையக இந்திய வம்சாவழி மக்களின் இருப்பு 200 வருடங்களுக்கு மேலானது என்பதை ஆணித்தரமாக கூறமுடியும். இதற்கு மூலாதாரமாக கிறிஸ்தவ மிஷனரிமார் இந்தியாவின் திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து இலங்கையில் குடியேறிய கிறிஸ்தவர்களுக்கு இறைபணியாற்றுவதற்காக இலங்கைக்கு சென்றதாக அவர்களின் நாட்குறிப்பேடுகளில் எழுதி வைத்துள்ளனர். அந்த குறிப்பேடுகளில் இந்தியாவில் இருந்து வந்தவர்கள் கரையோரங்களிலும். மத்திய மலைநாட்டிலும் (கண்டியிலும்) குடியிருப்பதாகவும் அவர்களை சந்தித்து அவர்கள் வாழ்கின்ற இடங்களுக்கு அருகில் வழிபாடு நடத்தியதாகவும் கிறிஸ்தவர்களோடு சிங்களவர்களும், மற்றவர்களும் கலந்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளனர்.

இதே போல மேலைநாட்டு கடலோடிகளின் நாட்குறிப்பேடுகளில் இந்திய வம்சாவழி மக்கள் வந்த படகுகளுக்கு உதவியதாகவும் சில படகுகளில் வந்தவர்கள் கடலில் மூழ்குவதைக் கண்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் எழுதியுள்ள நாட்களை பார்க்கும் போது இந்திய வம்சாவழி மக்களின் இலங்கை வரலாறு 2000 வருடங்களுக்கு மேலானது என்று அறிந்து கொள்ளலாம்.

கண்டிய சிங்கள குடிகளுக்கும் இந்திய வம்சாவழி குடிகளுக்கும் முரண்பாடுகள் ஏற்பட காரணங்களாக இருந்தவற்றுள் ஒன்று குடியேற்றம் மற்றையவை மொழி, சமயம், உணவு, உடை போன்றவை ஆகும். இந்த முரண்பாடுகள் இன்றுவரை தொடர்கின்றது. உதாரணமாக லயப்பனை, மதுரட, பதியபலள்ள, ஹங்குரன் கெத, ரிகில்லகஸ்கட, வெலிமட, ஹாவாஎலிய, அம்பேவல போன்ற பிரதேசங்களில் போர்த்துகேயர், ஒல்லாந்தர் பிரித்தானியரின் செல்வாக்கு குறைவாக இருந்தமையால் இன்றுவரை படிமுறையில் செய்யப்படுகின்ற கமத்தொழில் பாதுகாக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசங்களில் நெல் மரக்கறி வகைகள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவர்கள் மத்தியில் வாழ்ந்த இந்திய வம்சாவழி மக்கள் இன்று விரட்டியடிக்கப்பட்டுள்ளார்கள்.

### மலையக மக்களின் பரம்பல்

இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களில் 19 மாகாணங்களில்இந்திய வம்சாவழி மக்கள் வாழ்கின்றார்கள். இவர்களை 07 பெரும் பிரிவுகளாக பிரிந்து நான் ஆராய்கின்றேன். இவர்களை வேறுவகை முறைகளிலும் பிரிந்து ஆராய முடியும்.

01.நுவரெலியா, கண்டி, மாத்தளை மாவட்டத்தில் வாழ்பவர்கள்.

02.பதுளை, மொனராகலை, லுனகலை, பசறை, பண்டாரவளை, அப்புத்தலை, நியதமலை போன்ற இடங்களில் வாழ்பவர்கள்.

03.கண்டி, வத்தேகம மடுல்சிம், தெல்தெனிய, கமஹா, ஹேவாஹட்ட, மத்தளை, ரத்தோட்டை பிரதேசத்தில் வாழ்பவர்கள்.

04.குருநாகல், புத்தளம், குரவிட்ட, மாவத்தகம பிரதேசத்தில் வாழ்பவர்கள்.

05.தென் பகுதியில் களுத்துறை, அகுரஸ்ஸ, தெனியாய, அல்பிடிய,காலி

06. சப்பிரகமுவ மகாணத்தில் இரத்தினபுரி, பலாங்கொடை, அவிசாவல்ல, புவக்பிட்டிய, தெரணிகலை, கேகாலை, தெஹியோவிட்ட, கரவனல்ல, ருவன்வெள்ள, எட்டியந்தோட்ட பிரதேசத்தில் வாழ்பவர்கள்.

07. வடகிழக்கில் வாழ்பவர்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா கிழக்கு மாமகணத்தில் மட்டக்களப்பு செங்கலடி, புனாலை, புல்லுமலை, மரப்பாலம், துசல் அம்பாறையில் கோமாரி காரைத்தீவு இன்ஸ்பெக்டர் ஏத்தம் திருமலையில் கிளிவெட்டி 2ம் 3ம் கொலணி போன்ற வடகிழக்கு பிரதேசங்களில் மூன்று லட்சம் (300 000) பேர் வாழ்கின்றார்கள்.

அத்தோடு வத்தளை, கொழும்பு போன்ற பிரதேசங்களுக்கு தொழிலின் காரணமாக குடியேறியவர்கள் ஒரு லட்சத்திற்கு மேல் வாழ்கின்றார்கள். எமது குடிசன மதிப்பீட்டு முறையில் இந்திய வம்சாவழி மக்களை கணக்கிடுவதில் பல குறைபாடுகள் உள்ளது. அதன் காரணத்தையும் அறிந்து கொள்வோம்.

### இன்றைய மலையக மக்களின் தொகை

1950 ஆண்டு புள்ளிவிபர கணக்கெடுப்பின் படி 12% மலையக இந்திய வம்சாவழி மக்கள் இருந்துள்ளனர். 2018ஆம் ஆண்டு குடிசன கணக்கெடுப்பின் படி 4 வீதத்தினர் என்று குறிப்பிடப்படுகின்றது. மலையக மக்களின் இன விகிதம் குறைந்து செல்வதை ஆராய்வதும் தேயிலை தினத்தின் நோக்கமாகும்.

### மலையக மக்களின் உளவியல்

மலையக இந்திய வம்சாவழி மக்கள் இலங்கையின் 19 மாவட்டங்களில் மற்ற மக்களோடு இணைந்து வாழ்வதினாலேயே அவர்களின் தனித்துவத்தை இழந்து வருகின்றார்கள். சக வாழ்வுக்கான நல்ல பல பழக்கவழக்கங்களை மலையக மக்களிடம் நாம் கற்றுக் கொள்ள முடியும்.

இந்த நெகிழ்வுத்தன்மை அவர்களின் தனித்துவத்தை இழக்கச் செய்கின்றது. அவர்களின் மாண்பை பாதுகாப்பது எமது கடமையாகும். மலையக மக்கள் அனைத்தையும் ஏற்றுக் கொள்வார்கள், சகித்துக் கொள்வார்கள் என்று கருதுவது மனித உரிமை மீறலாகும். அதே போல நாகரிகமான சமூகத்தின் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றல்ல.

இவர்கள் வாழ்கின்ற சூழல் இவர்களுக்கு உளவியல் ரீதியாக இரண்டாம் நிலை மக்கள் என்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளது. இதை அவர்களின் வாழ்வியலில் காணமுடிகின்றது. மலையக இளைஞர்கள் இருவர் சந்திக்கின்ற போதும் சிங்கள மொழியில் உரையாடுவர். அதேபோல அவர்கள் வசிக்கின்ற இடத்தைக் கேட்டால் அவர்கள் நகரத்தில் வாழ்வதாக கூறுவார்கள். அதே போல மலையகத்தில் கல்வி கற்று ஆசிரியர்களாக் உத்தியோகம் செய்வார்கள் நகரங்களுக்கு இடம்பெயர்ந்து விடுவார்கள்.

நகரங்களில் இருக்கின்ற பாடசாலைகளில் மாணவர்களிடம் ஆசிரியர்களிடம் இருக்கின்ற பிரதான வேற்றுமை “தோட்டக்காட்டான்” பிள்ளை, ஆசிரியர் என்ற வேற்றுமை. இவ்வாறு பிரிவினை மனப்பான்மையில் செயற்படுகின்ற அனைவரும் மலையக இந்திய வம்சாவழி மக்களாகவே உள்ளனர். ஒரே இன மக்கள் தங்களை தாங்களே தாழ்த்தியும் உயர்த்தியும் கருதுவது உளவியல் பிரச்சினையாக நோக்கப்பட வேண்டும். உளவியல் சிந்தனைகளை மாற்றுவதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இது குறித்து சிந்திப்பது தேயிலை தினத்தின் நோக்கமாக உள்ளது. (தொடரும்)

■ **நாவைப் பிரட்டிப் பிரட்டி உழறுவதுபோல அறிக்கை விடுகிறார் முன்னாள் முதல்வர் விக்கினேஸ்வரன் அவர்கள். அவர் தமிழ் தலைவராக... எண்ணப் பயமாக இருக்கிறதே அங்கதனார்!**

கிரிஜா மோகன், அரியாலை.

● அரசியலில் தெளிவு என்பது மௌனத்தின் மூலமே அர்த்தமுள்ளதாக உணர்த்தப்படும் ஆனால் அடிக்கடி அறிக்கை வெளியிடுதல் அரசியலில் கற்றுக்குட்டித்தனத்தின் அடையாளமேயாகும்.

■ **தற்போது காணும் நிலைமையைக் கோத்தா சமாளிப்பாரா?**

சுரேஸ் கிருஷ்ணமூர்த்தி, பண்ணாகம்.

● அவரது அரசியல் பாரம்பரியம் மற்றவர்களை அச்சுறுத்துவதும் மற்றவர்களின் அச்சுறுத்தல்களைச் சமாளிப்பதும் என்ற தந்திரோபாயத் தண்டவாளத்திலேயே கடந்த காலங்களில் இயங்கி வருகிறது என்பது உண்மையே!

■ **கடவுள் தான் மனிதாகப் பிறக்க வேணும். அதுவும் ஒரு இந்துப் பாட சாலை அதிபராக ஆகவேணும் என்று சொல்லுகிறாராம். கடவுளின் ஆசை எப்படி?**

பா.குணவதி, ஊரெழு.

● கடவுள் இப்படி ஆசைப்படுவதாகக் கூறுவது வதந்தியாகத்தான் இருக்கும். லஞ்சம் வாங்குபவன் வீட்டு வாசலில் உண்டியல் இருக்காது. உண்டியல் இல்லாத கோவிலே இல்லை தெரியுமா?

■ **நீராவியடிப் பிள்ளையார் வளாகச் சம்பவத்தில் எரியுண்ட பிக்குவின் ஆத்மா சொர்கத்துக்குப் போகுமா? நரகத்தில் இருக்குமா?**

பொ. தணிகாசலம், வல்வெட்டித்துறை

● எங்கை போனாலும் சாம்பலாய் தான்போகும்.

■ **மண்ணில் நல்ல வண்ணம் வாழ லாம் வைகலும்... இந்த பிக்குகளுக் குப் பித்துப் பிடித்த மண்ணிலா?**

த.வெற்றிச்செல்வன், மூன்றுமுறிப்பு

● இத்தகைய பித்துப்பிடித்த பிக்குகளை வெறும் மக்குகளாக நினைத்துவிட்டால் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாமே!

■ **காட்டை அழித்து நகரத்தை உரு வாக்குவோம் என்பது சாத்தியமா?**

சு.ஸ்ரீவாணி. – வவுனியா



# அங்கதன் பதில்கள்

● காட்டை அழித்து நகரத்தை உருவாக்க லாம். பின் அதே நகரத்தை காப்பாற்ற காட்டை உருவாக்க வேண்டும்....!

■ **தமிழக அரசியலிலும் சினிமாவிலும் ரஜனியின் வேடம் பற்றி என்ன சொல்லலாம்?**

கு.கஜன், வல்வெட்டி

● சினிமாவில் அரசியல்வாதியாக அற்புதமாக நடிக்கலாம். ஆனால் அரசியலில் சினிமாத்தனமாக வாழவே முடியாது.

■ **போரில் இறந்த ஒருவரின் மனைவிக்கு நீங்கள் சொல்லக் கூடிய ஆறுதல், உபதேசம் என்ன?**

வி.ரகு, மட்டக்களப்பு

போரில் வீர மரணம் அடைந்தவன் மனைவிக்கு தேறுதலோ, ஆறுதலோ கூறுவது அவனது வீரத்தை அவமதிப் பதாகிவிடும்.... அந்த வீரனின் பின்னால் அவன் நேசித்த தேசமே இருக்கும் என்ற செய்தியே அவளுக்கு ஆறுதலானது.

■ **நீரைச் சேகரிக்க வேண்டும் என்று சொல்லும் புத்திமதியை இன்னும் கட்டாயம் என்று எண்ணாதது...**

நா.பரம்சோதி, மாதகல்

● எதிர்காலத்தில் கண்ணீர் விட வைத்துவிடும். கண்ணீர் தண்ணீராகாது...!

■ **எரியும் வீட்டில் பிடுங்கியது லாபம் என்று எண்ணுபவனையும், எரிந்தது எரியட்டும் என்று எண்ணுபவனையும் எடுத்துக் கொண்டால்... அவர்கள் சமூகப் பொறுப்புகளில் எப்படிப்பட்டவ ராக இருப்பர்?**

ல.மயூரன், மாவடி

● முன்னவன் சமூகத்துரோகி பின்னவன் சமூகவிரோதி.

■ **அரச சபையில் இருந்த வாள் படை, ஆவா வாள் படை... உங்கள் அபிப்பிராயம் என்ன?**

மு.வழவுக்கரசி, மண்முனை

● அது நாட்டைக் காக்கும் .... இது நாட்டை அச்சுறுத்தும் அவ்வளவுதான்.

■ **சாயத்துக்குக் கலப்படமாகச் சாயம் கலப்பவன் எப்படிப்பட்டவனாக இருப்பான்?**

ஏஸ்.முரளி, மஸ்கெலியா

● வண்ணம் கெட வைத்தாலும் மானம் கெட வைக்கான்.

■ **பாரதி இன்று இருந்தால் சிங்களத் தீவினுக்கோர்... என்ன செய்வோம் என்று பாடி இருப்பார்?**

ஐ.நாகராசா, பளை

● அவர் பாடவேண்டியதை அவரது சீடன் எப்போதோ பாடி வைத்துவிட்டு போய்விட்டாரே....

சிங்களம் சேர் தென்னாட்டு மக்கள்
தீராதி தீரரென்றூது சங்கே
பொங்கு தமிழர்க்கு இன்னல்
விளைந்தால்
சங்காரம் நிஜமென்று சங்கே
முழங்கு....!

என்பது தான் அப்பாடல் வரிகள்......

■ **மண் கொள்ளை என்று பெரிய கொள்ளையைத்தான் முன்னர் சொன்னார்கள். தற்போது உண்மையில் மண் கொள்ளை நடக்கிறதே? உரியவர்கள் என்ன செய்கிறார்கள் ..........**

ம. டானியல், நாவாந்துறை

● மண் விலை பொன் விலையாகி விட்டதே....! பொன்னை பூட்டி வைத்து பாதுகாக்கலாம், மண்ணை அப்படிக் காக்க முடியாது..!

■ **சிலர் சிரித்து வாழ்கிறார்கள். சிலர் அழுது வாழ்கிறார்கள். நீங்கள் எப்படி?**

வி. பார்த்திபன், மண்டைதீவு

● மற்றவர்கள் சிரிக்கும் படியோ – அல்லது அவர்களை அழவைக்கும் படியோ வாழப் பிடிக்காதவன்.

■ **தாலி பாக்கியம் என்கிறார்கள், யாழில் பல பேரின் தாலி அடைவில் அல்லவா இருக்கிறது. அதுதான் பாக்கியமா?**

டா. ஸ்ரெல்லா, பண்டத்தரிப்பு

● வீட்டில் இருந்தால் தாலியை கட்டியவனே களவெடுத்து விற்று குடித்து அழித்துவிடுவான். அடைவு கடையில் இருந்தால் வகிபாக்கியம்; பத்திரமாக இருக்குமல்லவா...!

■ **'நீ இன்றி வாழ முடியாது' என்று சொல்லிக் கட்டிய சேலையுடன் வந்தவள் விபத்தில் அவன் கால் முறிந்து ஊனமானபோது அவனை விட்டுப் பறந்துவிட்டாள். அவள் எதற்கு ஒப்பானவள்?**

பூ.மதியாபரணம், இருபாலை

● ஊனமடைந்த கணவனுக்கு தான் ஒரு பாரமாக இருக்கக் கூடாது என எண்ணி பாராமுகமாகப் பறந்து போயும் இருக்கலாம்.... எப்படியோ இப்படியான பெண்ணோடு வாழ்நாள் பூராக வதைபடும் விபத்திலிருந்து அவன் காப்பாற்றப்பட்டுவிட்டான்.



**அங்கதனிடம் பதில்பெற வேண்டுவோர் உங்கள் கேள்விகளை சரியான பெயர் முகவரியுடன் தெளிவாக எழுதி newsdeepam19@gmail.com என்ற முகவரிக்கோ அல்லது இல.151,நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

**தரமான கேள்விகளை அனுப்புவோருக்கு 500 ரூபா பணப் பரிசில் வழங்கப்படும்.**

பெயர் :........................................
முகவரி :........................................
:........................................
தொலைபேசி இல. ..............................

# அவர்கள் சொன்னதும் ஐயா சொல்வதும்

● கடைசியில ஒரு மாதிரியாக ஐந்து தமிழ் கட்சிகள் ஏதோ ஒரு காரணம் அல்லது அழுத்தத்தின் காரணமாக ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாடு தொடர்பாக பொது உடன்பாடு ஒன்றில் கையொப்பமிட்டு விட்டார்கள். சந்தோசம் தான். இந்த ஐந்து கட்சிகளினதும் கடந்த கால வரலாறு என்ன என்பதை தமிழ் மக்கள் பெருமளவிற்கு அறிவர்.

அகிம்சை வழிப்போராட்டம் ஆயுத ரீதியில் போராட்டம் என இரு முரண் நிலைகளில் இருந்தும் ஓரே தன்மையான அரசியல் நகர்வுகளை வேறு வேறு கோசங்களுடன் முன்னெடுத்தவர்கள் தான். இந்திய ஆட்சியாளரின் கடிவாளத்துக்கு கட்டுப்பட்டவர்களாகவும் இலங்கை அரசாங்கத்துக்கு இசைவாக இயங்கும் துணைப்படைக்குழுக்களாகவும் அவ்வப்போது சுயத்துவம் இழந்து செயற்பட்டவர்கள்தான். பெயர்கள்தான் வேறு. குணாம்சம் ஒன்று.

இந்த உடன்படிக்கையானது தமது அரசியல் நகர்வுகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் ஓராளவுக்காயினும் வாய்ப்பான சூழலை ஏற்படுத்தும் தன்மை கொண்ட ஆட்சித் தலைமைக்கும் முண்டு கொடுப்பதாகத்தான் இருக்கும் என சாமானிய மக்களும் அறிவார்.ஏன் கையெழுத்திட்ட கட்சியினருக்கே தெரியும். இதொன்றையும் சிங்கள தலைமைகள் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளாது என்பது ஆனாலும் இந்த அரசியல் ொதழிலில் இப்படி ஒரு பேரம் அவரவர் இலாபம் கருதி மேற்கொள்ளப்படுகிறது. அவ்வளவுதான்.

● ஐயா விக்னேஸ்வரன் அண்மைக்காலமாக அரசியல் ஆரூடம் கூறும் ஒருவராக தன்னை இனம் காட்டி வருகிறார் என்பது அரசியல் அவதானிகள் அறிந்த விடயம்.

கோத்தபாய ஐயா ஜனாதிபதியாவது குறித்து தமிழர்கள் அச்சப்பட தேவையில்லை. அவரைச் சர்வதேசம் கண்காணித்துக் கொண்டிருக்கிறது என்றார். சர்வதேசம் எதைத்ததான் கண்காணிக்க வில்லை. தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் கொத்து கொத்தாய் அழிக்கப்பட்ட போதும் கண்காணித்துக் கொண்டுதானே இருந்தது. இது ஐயாவுக்கு தெரியாததல்ல. இப்ப அண்மையில் தமிழர்களின் பிரச்சனைகளுக்கு விரைவில் தீர்வ கிடைக்கும் என்று அரூடம் சொல்லியிருக்கிறார்.

தென்னிலங்கை பேரினவாதிகள் தமிழர்களை எவ்வாறெல்லாம் தீர்துக் கட்டலாம் என நுணுக்கமாக எல்லா வகையிலும் திட்டம் தீட்டி செயற்பட்டுக் கொண்டிருக்கையில் விரைவில் தீர்வு வரப்போகுதாம். நீதிமன்ற தீர்ப்புகளையே தூக்கி எறிந்து நிராகரிக்கும் பேரினவாதிகளைக் கைகட்டி வேடிக்கை பார்க்கும் ஆட்சியாளர்கள் தமிழர்களின் பிரச்சனைகளுக்கு நீதியான தீர்வை தருவார்கள் என ஒரு முன்னாள் நீதியரசர் நம்புவதும் மக்களை நம்ப வைக்க முயல்வதும் வேடிக்கைதான்.

● தான் ஜனாதிபதியாகப் பதவியேற்றால் ஜெனிவா தீர்மானத்தை ஒரு போதும் ஏற்கேன் என்று ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச வெளிப்படையாகவே தெரிவித்திருப்பது அவரது கருத்தியல் நிலைப்பாட்டைத் தெளிவாகக் காட்டுகிறது இப்படி ஓர் அறிவிப்பை அவர் உறுதியாகவும் ஒளிவு மறைவின்றியும் கூறியிருப்பது தொடர்பாக ஐ.நா சபையினர் என்ன கருதுகிறார்களோ தெரியாது. ஆனால் நமது தமிழ் தலைமைகள் இது குறித்து என்ன சொல்ல போகிறார்களாம் 13 அம்ச கோரிக்கைகளை வைத்து அரசியல் பேரம் பேச நினைக்கும் இவர்கள் அந்த கோரிக்கயைின் மிக முக்கிய அம்சங்களை முன்னராகவே கோத்தபாய ராஜபக்ச நிராகரிப்பதாக கூறிவிட்ட இந்த காலத்தில் இதனுடன் தொடர்பு கொண்டதான ஏனைய அம்சங்கள் குறித்து என்ன சொல்வார் என்பது குறித்து ஊகிப்பது கடினமான விடயமல்லவா.



ஆக தென்னிலங்கையில் இருந்து வெளிக்கிழம்பும் பிரசாரக் குரல்களில் தொனிக்கும் மனித நேயத்தை புறந்தள்ளும் இனவாதம் தமிழ் தரப்பை எச்சரிக்கையாக இருக்க வைக்குமா அல்லது சமாளிப்பு அரசியலை தொடர அவர்களை நிர்ப்பந்திக்குமா? கொஞ்ச நாளிலை எல்லாம் வெளிச்சத்துக்கு வந்து விடும்.




# தடகளத்திலும் ஹட்ரிக்



17ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டி கத்தார் தலைநகர் தோகாவில் நடந்து முடிந்துள்ளது. பெண்களுக்கான உயரம் தாண்டுதலில் ரஷிய வீராங்கனை மரியா தங்கப் பதக்கத்தை தனதாக்கினர்.

இதன் மூலம் உலக போட்டியில் தொடர்ச்சியாக 3 முறை (2015, 2017, 2019) தங்கம் வென்ற முதல் உயரம் தாண்டுதல் வீராங்கனை என்ற பெருமையை அவர் பெற்றார்.

209 நாடுகளிலிருந்து வந்த 2000 வரையிலானவர்கள் இந்த நிகழ்வில் பங்குபற்றினார்கள். ஒக்டோபர் 6 அன்று முடிவடைந்த போட்டிகளில், அமெரிக்கா 14 தங்கப் பதக்கங்கள் உட்பட 29 பதக்கங்களுடன் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது. இறுதியாக இலண்டனில் நடந்து முடிந்த போட்டிகளில் 11 தங்கப் பதக்கங்கள் உட்பட 29பதக்கங்களை அமெரிக்கா தட்டிச் சென்றிருந்தது. இரண்டாவது இடம் 5தங்கப் பதக்கங்களுடன் கென்யாவுக்கும் (11), மூன்றாவது இடம் 3 தங்கப் பதக்கங்களுடன் ஜமேக்காவிற்கும் (12) கிடைத்துள்ளன.

# 66 டெஸ்ட் போட்டிகள் 350 விக்கெட்டுகள்

சுமாராக ஒரு வருட காலத்திற்கு அணியில் வாய்ப்பளிக்கப்படாத இந்திய சுழல் பந்து வீச்சாளர் அஸ்வின், நடந்து முடிந்த தெ.ஆபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், விட்டேனா பார் என்பது போல் முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட்டுகளைச் சாய்த்திருந்தார்.

தான் இதுவரை விளையாடிய 66 டெஸ்ட் போட்டிகளில் 350 விக்கெட்டுகள் எடுத்து முத்தையா முரளீதரனின் சாதனையைச் சமன் செய்திருக்கிறார். முரளீதரனை விட 18 இன்னிங்ஸ் மேலதிகமாக இவர் எடுத்திருந்தாலும், 3000 பந்துகள் குறைவாக வீசியே இந்தச் சாதனையை சமன் செய்திருக்கிறார். அஸ்வின் இந்த இலக்கை எட்ட எடுத்த காலம் 7 வருடங்கள் 322 நாட்கள். முரளீதரனுக்கோ 9 வருடங்களும் 9 நாட்களும் தேவைப்பட்டுள்ளன.



## 5 விக்கெட்டுக்கு மேல் எடுத்த 4ஆவது வீரர்


இந்திய வீரர் அஸ்வின் தென்ஆபிரிக்காவுக்கு எதிராக 5 முறை, 5 விக்கெட்டை கைப்பற்றி சாதனை புரிந்துள்ளார். இதற்கு முன்பு ஹர்பஜன் சிங், ஸ்ரீநாத் ஆகியோர் தலா 4 முறை தென்ஆப்பிரிக்காவுக்கு எதிராக 5 விக்கெட்டுகளை கைப்பற்றி இருந்தனர்.

முரளிதரன் (இலங்கை) 11 முறையும், வார்னே (ஆஸ்திரேலியா) 7 தடவையும் தென்ஆபிரிக்காவுக்கு எதிராக 5 விக்கெட்டுக்கு மேல் எடுத்துள்ளனர். அஸ்வின் 3ஆவது நிலையில் உள்ளார். அஸ்வின் 21ஆவது முறையாக சொந்த மண்ணில் 5 விக்கெட்டை கைப்பற்றி உள்ளார்.

உள்ளூரில் அதிக முறை 5 விக்கெட்டுக்கு மேல் எடுத்த 4ஆவது வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார். முரளிதரன் 45 முறையும், ஹெராத் 26 முறையும், கும்ப்ளே 25 முறையும் 5 விக்கெட்டுக்கு மேல் சொந்த மண்ணில் எடுத்துள்ளனர். அவர்களுக்கு அடுத்த நிலையில் அஸ்வின் உள்ளார். கும்ப்ளேயை விரைவில் அவர் நெருங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# 61 பந்துகளில் 148 ஓட்டங்கள்!

இலங்கை மகளிர் அணிக்கும், அவுஸ்திரேலிய மகளிர் அணிக்கும் இடையிலான மூன்றாவது இருபதுக்கு இருபது போட்டி தற்போது இடம்பெற்று வருகின்றது. இந்த போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீராங்கனையான அலிசா ஹீலி Alyssa Healy புதிய சாதனை ஒன்றினை படைத்துள்ளார். இவர் ஆட்டமிழக்காமல் 61 பந்துகளில் 148 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். இதுவே "இருபதுக்கு இருபது" வரலாற்றில் தனிநபர் ஒருவர் இன்னிங்ஸ் ஒன்றில் பெற்றுக்கொண்ட அதிகூடிய ஓட்டங்கள் ஆகும். இங்கிலாந்திற்கெதிரான இன்னொரு ஆட்டத்தில்(ஜுலை18) Meg Lanning என்ற சக விளையாட்டு வீராங்கனை அடித்த 133 ஓட்டங்களை தாண்டியுள்ளார் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான அலிஸா.





# 100 பந்து ஆட்டம்

இங்கிலாந்தின் கிரிக்கெட் சபை ரி20, 50 ஓவர்கள் என்ற வரிசையில், 100 பந்துகள் மாத்திரம் வீசப்படும் புதிய ஆட்டமொன்றை அமுல்படுத்த திட்டமிட்டு வருகின்றது. பொறுமையுடன் 5 நாள் டெஸ்ட் போட்டிகளைப் பார்த்து ரசிப்பவர்கள் தொகை அருகிக் கொண்டு வருவதால், காலத்திற்குக் காலம் வித்தியாசமான மோதல்களை அறிமுகப்படுத்தும் ஆர்வம் எழுகின்றது.

100 பந்து கிரிக்கெட் லீக் என்ற தொடரை அறிமுகம் படுத்தும் இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை. இதில் பங்கேற்க விரும்பும் வெளிநாட்டு வீரர்களின் விண்ணப்பம் வரவேற்கப்படுமெனத் தெரிவித்திருந்தது. இந்நிலையில் கிறிஸ் கெய்ல், ரஷித் கான், டேவிட் வார்னர், ஆரோன் பிஞ்ச், பாபர் அசாம் உள்பட 165 பேர் விண்ணப்பம் செய்துள்ளனர். வருகிற 20ஆம் திகதி விண்ணப்பம் அனுப்பியிருந்த வீரர்கள் அடங்கிய முழுப்பட்டியல் வெளியிடப்படும்.

# அடிப்பதற்கு அள்ளிக் கொடுக்கிறார்கள்...

அமெரிக்க குத்துச்சண்டை களத்தில் "மிருகம்" என்று பலராலும் அறியப்படும் புருக் லெஸ்னர் என்பவருக்குத்தான் அதிக வேதனம் கொடுபடுகிறதாம். சமீபத்தில் நடந்து முடிந்த 8 மோதல்களில் 42 வயதான இந்த "மனித மிருகத்திற்கு" சுளையாக 4 மில்லியன் பவுண்ட்ஸ் தொகை கொடுபட்டுள்ளது. (ஒரு பவுண்ட்ஸ் 220 ரூபா) 2012 தொடக்கம், இவர் களத்தில் குதித்த காலம் தொடக்கம் வர்த்தக உற்பத்திப் பொருட்கள் விற்பனை, மோதல்கள் என்று கொள்ளை கொள்ளையாகச் சம்பாதித்து வருகிறார். ஈவிரக்கமின்றி எதிராளிகளை துவைத்து எடுப்பதில் இவர் கில்லாடி. சமீபத்தில் ஒரு முகமூடிக் குத்துச் சண்டை வீரரை அடிஅடியென்று அடித்துவிட்டு, பார்வையாளராக இருந்த மகனையையும் தரதரவென்று இழுத்து வந்து, மோசமாகத் தாக்கி இருக்கிறது இந்த "மிருகம்".



# சந்நிதி முருகன் வேக் சொப் அன்ட் சேவிஸ்




வரையறுக்கப்பட்ட டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி பிறைவேற் லிமிட்டட்டின் அசல் உதிரிப்பாகங்களின் ஏகவிநியோகஸ்தர்
2W, 3W மோட்டார் சைக்கிளின் அசல் உதிரிப்பாகங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்



பஜாஜ் வாகனங்களுக்கு திருத்த வேலைகளும் சேவிஸும் செய்து கொடுக்கப்படும்.

2w உதிரிப்பாக விற்பனை நிலையம்.
இல. 241, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன் கோயில் அருகாமை)

3w உதிரிப்பாக விற்பனை நிலையம்.
இல. 102, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஆனைப்பந்தி சந்தி அருகில்)

# சந்நிதியான் மோட்டோர்ஸ்




அனைத்து வகையான பற்றரிகள், ரயர் மற்றும் உதிரிப்பாகங்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
071 237 2985



# KUPUTHU HOTEL

CHINESE, INDIAN & SRI LANKAN FOODS



உங்கள் குடும்பத்துடன் சுவையான உணவுகளை உண்டு மகிழ்ந்திடுங்கள்...





KANDY ROAD, KODIKAMAM. | T.P : 021 227 1661, 077 950 7751

தீபம் பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிக்கு அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விளம்பர முகவர்கள் தேவைப்படுகின்றார்கள். உடன் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 077 198 9445


இந்தப் பத்திரிகை இல. 151, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள நோர்சி மீடியா (பிரைவேற்) லிமிடெட் நிறுவனத்தால் 20.10.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.